# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

ஜூலை – 2015

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550



visit us: www.pallavipathippakam.in

ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

**INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550**

மலர் : 3 விலை: ரூ.150/- ஜூலை-2015 இதழ் : 3

**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் அ. அறிவுநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**சிறப்பாசிரியர்**

**முனைவர் சொ. சுப்பையா**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**ஆசிரியர்**

**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**இணை ஆசிரியர்**

**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**துணை ஆசிரியர்கள்**

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**முனைவர் தா.க. அனுராதா**

**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

**ஆசிரியர் குழு**

**முனைவர் மு.குருவம்மாள்**
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.

**முனைவர் உ. அலிபாவா**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

**முனைவர் ப.சு. மூவேந்தன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முனைவர் ஓ. பாலகிருஷ்ணன்**
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

**முனைவர் கோ. பாலசுப்ரமணியன்**
திராவிடப்பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரபிரதேசம்.

**மன்னர் மன்னன் மருதை**
மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா.

**முனைவர் சீதாலட்சுமி**
நன்னியாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

**முனைவர் ஐ. சாமிக்கண்ணு ஜெபமணி**
சுல்தான் ஐடிரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

**முனைவர் துரை முத்து சுப்ரமணியன்**
அம்பவுன் அஃப்ஜான்ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மலேசியா.

**முனைவர் இரா. விஜயராணி**
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

**முனைவர் ரெ. முத்துராஜன்**
அண்ணாமலைப்பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முனைவர் பா. ஆரோக்கியதாஸ்**
போப் ஜான் பால் கல்வியியல் கல்லூரி, புதுச்சேரி.

**கவிஞர் தங்கம் மூர்த்தி**
சாகித்திய அகாதெமி உறுப்பினர், புதுக்கோட்டை.

**திரு. பா. கு. சண்முகம்**
உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், மலேசியா.

**முனைவர் ஷே. நாகூர்கனி**
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.

**வெ.ச.சீனிவாசன்**
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**இரா. சந்திரசேகரன்**
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

**முனைவர் க.தமிழ்ச் செல்வன்**
வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்.

**முனைவர் இ.ஆர். இரவிச்சந்திரன்**
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.

**Dr. P.T.Kingston**
Fakulti Bahasadan Komunikasi University Pendidikam, Sultan Idris, Malaysia.

**முனைவர் துரை.மணிகண்டன்**
பாரதிதாசன் உறுப்பு கல்லூரி, திருச்சி.

**முனைவர் சி.சிதம்பரம்**
காந்தி கிராமம் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.

**முனைவர் ச.கவிதா**
கற்பகம் பல்கலைக்கழகம், கோவை.

**முனைவர் மு. அமிர்தகடேசுவரர்**
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**Visit us https//www.pallavipathippakam.in**

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - *காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.*

*கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.*

ஆய்த எழுத்து - தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013 ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

**1. பொருள்:** சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

**2. அளவு:** எம்.எஸ். வேர்டில் (MS Word), ல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில்(Lining Space), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஆறு பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

**3. முகவரி:** கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரை முடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெற வேண்டும்.

**4. கட்டுரை அனுப்பும் முறை:** கட்டுரையை pallavipublications@gmail.com (Or) ayidhaezhuthu @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

**5. சந்தா:** தனி இதழ் விலை ரூ. 150/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 4 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | ரூ. 600/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம்/ கல்வி நிறுவனங்கள்/ சங்கங்கள் மற்றும் பிற...) | ரூ. 800/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 5000/- |
| புரவலர் கட்டணம் | ரூ. 10, 000/- |

**6. கட்டணம் செலுத்தும் முறை:** உறுப்பினர் (சந்தா)/ கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக**(DD)** ஈரோட்டில் மாற்றிக்கொள்ளத்தக்க வகையில் **(Payable at ERODE)** அனுப்பலாம். இணையவழி, **(Net Banking),** அலைபேசி **(Mobile Banking)** வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம். **A/C Name: PALLAVI PATHIPPAKAM. A/C Type: CA, A/C No : 33679969977. Bank: STATE BANK OF INDIA, Sathy Road, Erode -638 011. IFSC : SBIN0016100.**

**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.


## பல்லவி பதிப்பகம்

194, கண்ணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011.
பேசி: 0424-2251545, 94422 51549, 97919 51549.
மின்னஞ்சல்: ayidhaezhuthu@gmail.com
pallavipublications@gmail.com

# பொருளடக்கம்


1. புறநானூற்றில் தொன்மங்கள்

*- முனைவர் மு. குருவம்மாள்* 5

2. உரிப்பொருளும் பின்னணியும்

*- க.இரா. இராஜேஸ்வரி* 9

3. சங்க இலக்கிய பெண்பாற் புலவர்கள் சித்தரிக்கும் பெண் இருப்பு குறித்த சில பதிவுகள்

*- வ. ஜெயந்தி* 12

4. திருமங்கையின் பாசுரங்களில் திவ்ய தேச இயற்கைப் புனைவுகள்

*- க. வேம்பு* 16

5. திருமங்கையாழ்வாரின் அகப்பொருள் புதுமைகள்

*- மா.மகேஸ்வரி* 21

6. ஏழாம் வேற்றுமை: தொல்காப்பியம் முதல் தற்காலம் வரை

*- முனைவர் கி. சங்கரநாராயணன்* 25

7. ஜே.எம்.சாலியின் 'மஞ்சள் ரோஜா' வில் உவமை நடை

*- வ. முகம்மது யூனுஸ்* 28

8. ஆற்றுப்படை நூல்களில் தொழில்கள்

*- S. கனகராஜ்* 34

9. ஐங்குறுநூற்றில் சுற்றுப்புறச் சூழல்

*- முனைவர் ஆ. தேவதா* 37

10. புறநானூறு காட்டும் மனித மாண்புகள்

*- முனைவர் தா. லதா* 40

11. நகரத்தார் குல மாண்புகள்

*- இராம. கண்ணமை* 42

12. பெரியாரும் பெண்ணுரிமையும்

*- வே. மணிகண்டன்* 47

13. ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்களின் வகை

*- ச. ஆரோக்கியராஜ்* 50

14. கவிஞர் அறிவுமதியின் கவிதைகளில் மனித உரிமைகள் – ஒரு பார்வை

*- மா. சரவணவேல்* 54

15.சூஃபித்துவ இறையியலும் குணங்குடி மஸ்தான் சாகிபின் சதகங்களும்

*- உ.அலிபாவா* 59

16.புறநானூற்றும் தொழில்களும்

*- முனைவர் ப. பூஞ்சோலை* 63

17.மக்கள் நலவாழ்வும் சுற்றுப்புறத் தூய்மையும்

*-முனைவர் இரா.மலர்விழி* 72

# புறநானூற்றில் தொன்மங்கள்

**முனைவர் மு. குருவம்மாள்**
*பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*காந்திகிராம கிராமியப்*
*பல்கலைக்கழகம்,*
*காந்திகிராமம்,*
*திண்டுக்கல்.*

**கா**லங்காலமாக மக்கள் மத்தியில் வழங்கிவரும் தெய்வம் தொடர்பான புராணங்களும் இராமாயண – மகாபாரத இதிகாசங்களும் ஏட்டில் எழுதாக் கதைகளாக செவிவழிச் செய்திகளாக – சமூக – வரலாற்று நிகழ்வுகளில் ஊடும் பாவுமாகி நிற்கின்றன. செவி வாயாக நெஞ்சு களனாக வாய்மொழி வழக்காறுகளாக வழங்கி வருகின்றன புராண இதிகாசக் கதைகளில் இடம்பெறும் கடவுள் வடிவங்கள் எழுத்து இலக்கியமாகவும் கலை வடிவங்களாகவும் உருப் பெற்றமையினைச் சிந்திக்கும்போது கலைவடிவிலிருந்து தோன்றியது எழுத்து இலக்கியமா? எழுத்து இலக்கியத்திலிருந்து தோன்றியது கலைவடிவமா? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க இயலாது. எட்டுத்தொகையின் எட்டாவதாகிய புறநானூற்றில் ஆய்வுக் கட்டுரைக்குரிய தரவுத் தேடல்களின் விளைவாகச் சிவபுராண, விஷ்ணுபுராண, கந்தபுராணச் செய்திகளும் இராமாயண மகாபாரதக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளமை கண்டறிப்பட்டுள்ளன.

**சிவபுராணச் செய்திகள்:**

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் பதினான்கு வரிகளைக் கொண்ட கடவுள் வாழ்த்துப் பாடலுடன் துவங்குகிறது புறநானூறு. சிற்பக் கலையில் வல்லவராயின் .. சிவபெருமானின் தோற்றப் பொலிவினைச் செதுக்கவும் ஓவியக் கலையில் வல்லவராயின் .. மாதொருபங்கனை வண்ணந் தீட்டவும் உதவுகின்ற குறிப்புகளை வழங்கி நிற்கிறது இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்.

- **சிவபெருமான் நஞ்சுண்ட கண்டன்** ஆகியமைக்குக் காரணமான பாற்கடல் கடைந்த நிகழ்வும்
- **சிவபெருமான் மாதொருபாகன்** ஆகியமைக்குக் காரணமான பிருங்கி முனிவரின் சக்தி வணக்க மறுப்பும்
- **சிவபெருமான் பிறை நுதல்** வண்ணனாகியமைக்குக் காரணமான தட்சனின் சாபம் ஏற்ற சந்திர சேகர மோட்சமும்
- **சிவபெருமான் ஆகாய கங்கையை சிரமேற்று** நீரவறியாக் கரகத்துடன் தாழ்சடை பொலிந்தமைக்குக் காரணமான சகரரின் கடுந்தவமும்

ஆகிய சிவபுராணச் செய்திகளைத் தன்னகத்துக் கொண்டது இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்.

*“கண்ணி கார் நறுங்கொன்றை காமர்*
*வண்ண மார்பில் தாருங் கொன்றை*
*ஊர்தி வால் வெள்ஏறே சிறந்த*
*சீர் கெழு கொடியும் அவ்வேறென்ப*
*கறை மிடறு அணியலு மணிந்தன்றக்கறை*
*மறை நவிலந்தணர் நுவலவும் படுமே*
*பெண்ணுரு ஒருதிறனாகின் றவ்வுருத்*
*தன்னுளடக்கிக் கரக்கினுங் கரக்கும்*
*பிறை நுதல் வண்ணமாகின்றப் பிறை*
*பதிணென் கணனு மேத்தவும் படுமே*
*எல்லா உயிர்க்கும் ஏமமாகிய*
*நீரறவறியாக் கரகத்துத்*
*தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோர்க்கே”*

**(புறம்: 1)**

என்று கூறுகிறது.

சிவபெருமான் தலையின் மீது சூடுகின்ற கண்ணி கார்காலத்துக் கொன்றைமலர்; அழகிய நிறம் பொருந்திய மார்பின் மீது சூடுகின்ற மாலையும் கொன்றை மலர்களால் ஆனது; சிவபெருமானின் வாகனம் தூய வெள்ளை நிற ஆனேறு; கொடியும் விடபம்தான்; கழுத்துப் பகுதி நஞ்சினது கருப்பு; ஒருபக்கம் பெண் வடிவம்; நெற்றிக்கு அழகைச் சேர்ப்பது பிறை தாழ்ந்த திருச்சடையுடன் தவத்தில் சிறந்தவனாகி உலகத்து உயிர்களுக்கெல்லாம் காவலாகிய நீரைத் தலையின் மீது தாங்கும் தவக்கோலம் சிவபெருமானின் கோலம். நீரின்றி அமையாது உலகு என்பர் சான்றோர். வருங்காலத்தில் மூன்றாவது உலகப் போர் ஒன்று நல்ல தண்ணீரின் நிமித்தம் வரும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எல்லா உயிர்க்கும் காவலாகிய நீரைச் சிவபெருமான் கரகத்தில் தாங்கி தவக் கோலத்தில் இருக்கின்றார் என்ற புறநானூற்றின் கூற்று - தாயைக் கழித்தாலும் தண்ணீரைக் கழிக்காதே என்ற நாட்டார் கருத்தை உறுதி செய்கிறது. நல்ல தண்ணீருக்காகத் தவம் இருக்கும் நம் காலத்தில் தண்ணீரைத் தலைமேல் தாங்கித் தவமியற்றும் சிவபெருமானின் கோலம் சிந்திக்கத் தூண்டுகிறது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்று கொண்டாடுகின்றன கிராமங்கள். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களில் ஒன்றான தண்ணீராகிய பூதம் புறப்பட வேண்டும் என்றுதானே கிணறு வெட்டுகிறோம்! தண்ணீரைத் தெய்வமாகப் பார்க்க வேண்டும் என்றுதான் தலையில் வைத்துக் கூத்தாடுகின்றான் சிவபெருமான்.

மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய புறப்பாடலில் சிவபெருமானின் அவிர்சடையும் கணிச்சிப்படையும் மணிமிடறும் இடம் பெற்றுள்ளன. இறை மறுப்புக் கொள்கையையுடைய தாருகவனத்து முனிவருடன் சமர்புரிந்த சிவனின் ஆயுதம் கணிச்சி, அவரது கோலம் நெருப்பு போன்ற அவிர்சடை, அவரது கழுத்து மணி போன்றது

*“ஏற்று வலனுயரிய வெரி மருளவிர் சடை*
*மாற்றருங் கணிச்சி மணி மிடற்றோன்”*

***(புறம்: 56)***

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ‘நன்றாய்ந்த நீணிமிர்சடை முதுமுதல்வன்’ (புறம்: 166) என்ற தொடரில் முதுமுதல்வன் என்றும் நீண்ட நிமிர்ந்த சடையினை உடையவன் என்றும் சிவபெருமானைக் குறிப்பிடுகின்றார் ஆவூர் மூலங்கிழார்.

**சிவபெருமான் திரிபுரம் எரித்த செய்தி**

பூமியைத் தேராக்கி, நான்கு வேதங்களைக் குதிரையாக்கி, பிரம்மா சாரதியாகி, மேருமலையை வில்லாக்கி, ஆதிஷேசனை நாணாக்கி, திருமால் - வாயு - அக்கினி ஆகிய மூவராலான அம்பினைக் கொண்டு, ஆவணம், மாயை, கன்மம் என்ற அகநிலை மும்மலக் கோட்டைகளையும் இரும்பு, வெள்ளி, தங்கம் என்ற புறநிலை உலோகக் கோட்டைகளையும் தகர்த்த சிவனின் செயலை திரிபுரம் எரித்தல் என்று சிவபுராணம் கூறுகிறது. இந்த நிகழ்வினை,

*“ஓங்குமலைப் பெருவிற் பாம்பு நாண் கொள்இ*
*ஒரு கணை கொண்டு மூவெயிலுடற்றிப்*
*பெரு விறலமரர்க்கு வென்றி தந்த*
*கறை மிடற்றண்ணல் காமர் சென்னிப்*
*பிறை நுதல் விளங்குமொரு கண் போல”*

***(புறம்: 55)***

என்று மதுரை மருதனிள நாகனார் குறிப்பிடுகின்றார்.

**விஷ்ணுபுராணச் செய்திகள்:**

மண்ணால் கழுவிய நீலமணி போன்ற திருமேனியையும் கருடக் கொடியையும் உடையவன் கண்ணன்.

*“மண்ணுறு திருமணி புரையு மேனி*
*விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோன்”*

***(புறம்: 56)***

என்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் குறிப்பிடுகின்றார்.

நீல நிறமும் ஆழியையும் உடையோன் கண்ணன்,

*“நீனிற வுருவினேமி யோனுமென்*
*றிரு பெருந் தெய்வமு முடனின்றாங்கு....”*

***(புறம்: 58)***

என்று காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூறுகின்றார்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் பகலவனை ஒளித்து வைத்து உலகிற்கு விலகாத இருளை உருவாக்கித் துன்பம் விளைவித்த அசுரர்களை வீழ்த்தி ஆதவனை விடுவித்து உலகிற்கு ஒளியை வழங்கியவன் அஞ்சன உருவன்

*“அணங்குடை யுவணர் கணங் கொண்டொளித் தெனச்*
*சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா*
*திருள் கண் கெடுத்த பருதி ஞாலத்*
*திடும்பை கொள் பருவரறீரக் கடுந் திறல்*
*அஞ்சன வுருவன் தந்து நிறுத்தாங்கு....”*

***(புறம்: 174)***

என்று கண்ணன் புகழ்பாடுகிறார் மாறோக்கத்து நப்பசலையார்.

பலராமனாகிய கண்ணனின் சகோதரர்

*“பாளிற வுருவிற் பனைக் கொடியோன்”*

***(புறம்: 58)***

*“கடல் வளர் புரிவளை புரையு மேனி”*

என்று காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

*“அடல் வெந் நாஞ்சிற் பனைக் கொடியோன்”*

***(புறம்: 56)***

என்று பலராமனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கொண்டாடுகிறார்.

**கந்தபுராணச் செய்தி:**

அவுணரை அழிக்கத் தோன்றியவன். மயிலை வாகனமாகக் கொண்டவன் சினங்கொண்ட சிவந்த நிறத்தை உடையவன் என்று மக்களிடையே வழங்கி வருகின்ற முருகப்பெருமான் குறித்த நம்பிக்கையைப் புலவர் பாண்டரங் கண்ணனார்

*“முருகற் சீற்றத் துருகெழு குருசில”*

***(புறம்: 16)***

என்று குறிப்பிடுகின்றார்.

*“பிணிமுகவூர்தி யொண் செய்யோன்”*

***(புறம்: 56)***

என்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் குறிப்பிடுகின்றனர்.

**இராமாயணச் செய்தி:**

வலிமை மிகுந்த இராமனின் மனைவி சீதையை மலர்விமானத்தில் அரக்கன் கவர்ந்து சென்றபோது முனிபத்தினிகள் சீதைக்கு அணிவித்திருந்த ஆபரணங்களைக் கானக வழியில் வீசி எறிந்தாள். அவற்றைக் காட்டில் இருந்த வானரங்கள் எடுத்து விரலுக்குரிய அணியினைக் காதிலும், காதுக்குரிய அணியினை விரலிலும், இடையில் அணிய வேண்டியவற்றைக் கழுத்திலும், அணிய வேண்டியவற்றை இடையிலும் சூட்டிக் கொண்டன என்று இராம கதை குறித்த, ஏட்டில் எழுதா கர்ண பரம்பரைக் கதைகள் மக்களிடையே வழங்கி வருகின்றன. இந்த இராமாயணச் செய்தியினை,

*“இலம்பாடுழந்த வென் னிரும் பேரொக்கல்*
*விரற் செறி மரபின செவி தொடக்கு நரும்*
*செவித் தொடர் மரபின மிடற்றியாக்கு நரும்*
*மிடற்றமை மரபின அரைக்கியாக்கு நரும்*
*கடுந் தெறலிராமனுடன் புணர் சீதையை*
*வலித்தகை யரக்கன் வெளவிய ஞான்றை*
*நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்*
*செம்முகம் பெருங்கிளை யிழைப் பொலிந்தாஅங்”*

***(புறம்: 378)***

என்று ஊன் பொதி பசுங்குடையார் பதிவு செய்துள்ளார்.

**மகாபாரதச் செய்தி:**

பாண்டவர்கள் ஐவரோடு சினங்கொண்டு கௌரவர்கள் நூற்றுவரும் பெரும்போர் நடத்தினர்,

அந்த மகாபாரதப் போரில் நூற்றுவர் அழிவு நேர்ந்தது, பெரும்போர் நடந்த நேரத்தில் பெருஞ்சோறு வழங்கினர் என்பதனை

*"......... நீயோ பெரும*
*அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ*
*நிலந்தலைக் கொண்ட பொலம்பூந்தும்பை*
*ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப்*
*பெருஞ்சோற்று மிகபதம் வரையாது கொடுத்தோய்"*

***(புறம்: 2)***

என்று முரஞ்சியூர் முடி நாகராயர் பதிவு செய்கிறார்.

**நிறைவுரை**

சனகாதி முனிவர் நால்வருக்குக் கல்லால மரத்தின்கீழ் தட்சிணாமூர்த்தியாகி நின்முத்திரையுடன் மெய்ப்பொருளை உரைத்த சிவபெருமானை ஆலமர் செல்வன் என்று சிவபுராணம் கூறுகின்றது. ஊழிக் காலத்தில் ஆலிலையில் குழந்தை வடிவில் இருந்து உலகைக் காத்த மகாவிஷ்ணுவை ஆலமர் செல்வன் என்று விஷ்ணுபுராணம் கூறுகின்றது. 'ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்' (புறம்: 198) என்று வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் குறிப்பிடும் தொடரில் இடம்பெற்ற ஆலமர் செல்வன் சிவனா? விஷ்ணுவா? என்பது கேள்வியாகிறது.

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவபெருமானின் வருணனையாகின்றது 'பிறை நுதல் வண்ணம்'. அப்பிறை 'பதினெண் கணனு மேத்தவும் படுமே' என்று போற்றிய காரணத்தால் நெற்றிக்குரிய உவமை இல்லை பிறை என்பது தெளிவாகிறது. தேவரும் அசுரரும் முனிவரும் கின்னரரும் கிம்புருடரும் கருடரும் இயக்கரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதமும் வேதாளமும் தாராகணமும் ஆகாசவாசிகளும் போகபூமியோரும் என்ற பதினெட்டுகணங்களும் போற்றுவது சிவனின் நுதலில் உள்ள பிறை என்பது உறுதியாகின்றது. மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார்

*"கறை மிடற்றண்ணல் காமர் சென்னிப்*
*பிறை நுதல் விளங்குமொரு கண் போல"*

***(புறம்: 55)***

என்று கூறுவதன் வாயிலாக சிவனின் தலையில் உள்ளது பிறை என்றும் நுதலில் உள்ளது கண் என்றும் விளக்கம் பெறுகிறது. பிறை இடம் பெற்றது சிவனின் நுதலிலா? சிரசிலா? என்பது கேள்வியாகிறது. கடவுள் குறித்த கதைகளில் மக்களின் கற்பனைகள் காலந்தோறும் மாறுதலுக்குள்ளாகி கலந்தூடி வருவதை மறுக்க இயலாது.

# உரிப்பொருளும் பின்னணியும்

**க.இரா. இராஜேஸ்வரி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*பிஷப் ஹீபர் கல்லூரி,*
*திருச்சி.*

**முன்னுரை:**

சங்கப்பாடல்கள் செவ்வியல் பாடல்கள். இப்பாடல்கள் எல்லாக் காலத்திலும், எம்மக்களுக்கும் பொருந்தும் தன்மையான இப்பாக்கள் அகம், புறம் என்ற பாகுபாட்டை உடையன. இதில் ‘‘அகம்’’ என்பது காதல் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பது. பெயர் சுட்டப்பெறாமை என்பது சங்க அகஇலக்கியத்தின் மரபு, சங்க அகப்பாடல்கள் ஒவ்வொன்றும் நாடகத்தன்மை உடையன. அகப்பாடல்களில் பொருள், சூழல், துணை ஆகியவற்றை உணர்த்த ‘‘திணை’’ வகுத்திருப்பது போற்றுவதற்குரியது. முதல், கரு, உரி என்ற மூன்றனுள் உரிப்பொருளைத் தலைமையிடமாகக் கொண்டு பாடப்பட்டுள்ள தன்மை அக இலக்கியத்தில் சிறப்புற்று உள்ளது. இவ்வக இலக்கியங்களில் உரிப்பொருளான புணர்தல், பிரிதல், இரங்கல், ஊடல், பிரிதல் என்னும் இவ்வுணர்வுகள் தோன்றக் காரணமானது. பின்னணிச் சூழல்களே. இப்பின்னணிச் சூழ்நிலைகளைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**உரிப்பொருள்:**

அகப்பாடல்கள் அமைப்பில் முதன்மையானது பொருள் வரம்பே. செய்யுள் வழக்குகளில் பயின்று வரும் பொருள் வகைகளைத் தொல்காப்பிய நெறி மூவகைப்படுத்தும். அவை முதல், கரு, உரி என்பனவாகும். இவையே அகத்திணையின் உயிர்நாடியாகும். இதனையே தொல்காப்பியர்,

*‘‘முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றே*
*நுவலுங்காலை முறை சிறந்தனவே பாடலுள்*
*பயின்றவை நாடுங்காலை’’*

என்று கூறுகிறார். முதல் என்பது நிலமும் பொழுதும் ஆகும். முதல் அடிப்படையானது, அடுத்ததான கருவில் அந்தந்த நிலத்திற்குரிய தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை போன்றவற்றைக் கூறுவர். முதற்பொருளிலிருந்து கருக்கொண்டு தோன்றுவது கருப்பொருள் ஆகும். உரிப்பொருள் அந்தந்த நிலத்தின் தன்மைக்கேற்ப மாறுபடும்.

**உரிப்பொருளின் விளக்கம்:**

ஒரு நாடக நூலினை இயற்றும் ஆசானானவன் அதில் நாடகம் நடக்கின்ற இடம் அதாவது அரங்கம், இன்னகாலம், இன்னின்ன பாத்திரங்கள் பங்கேற்பது என ஒவ்வொரு காட்சியையும் குறிப்பிட்டுக் காட்டுவர். அதுபோலத்தான் முதல், கரு, உரிப்பொருட்களில் காலம், நிலம், கதாபாத்திரங்கள் என்று தனித்தனியாகப் பிரித்துக் காட்டுகின்றனர். இவற்றில்

உரிப்பொருள் தான் உயிர்நாடியாகத் திகழ்கின்றது. திணை என்றாலே ஒழுக்கம் ஆகும். ஒழுக்கம் என்றாலே பண்புகள் தான். அவ்வகையில் அந்நிலத்தில் வாழும் மக்களுக்கு இன்னின்ன பண்புகள் காணப்படுகின்றன என்பதையும் பொதுப்படையாக வெளிப்படுத்திக் காட்டுவது உரிப்பொருளின் பண்பாகும். இலக்கியத்தில் முதல், கரு, உரி என்னும் முப்பொருள்களுள் கட்டாயம் உரிப்பொருள் வருதல் வேண்டும். உரிப்பொருளானது பின்னணிச் சூழலை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

**சூழலியல்:**

பின்னணிச்சூழல் என்பது உயிரினமோ சமூகமோ எதுவாயினும் அது வாழக்கூடிய பௌதிக, கனிம உயிரியல் கூறுகளின் ஒருங்கிணைந்த ஒரு தொகுப்பை அல்லது கட்டமைப்பைக் குறிப்பிடுகிறது. காற்று, நீர், நிலம், இயற்கை ஆதாரங்கள், தாவரங்கள், விலங்கினங்கள், மக்கள் ஆகிய ஒழுங்கமைப்பும் தனித்துவம், ஒன்றோடு ஒன்று பரஸ்பரம் தொடர்பு கொண்டும் இயங்கும் சூழமைவுகளே பின்னணிச் சூழலாகும். இப்பின்னணிச் சூழலில் காணப்படும் உயிரினங்களுக்கு இடையே நிலவும் உள்ளுறவுகளைப் பற்றி ஆராயும் இயல்தான் சூழலியல். இதனை Ecology (சூழலியல்), Environment, Ecosystem (சூழலமைப்பு) எனவும் கூறுவர். உயிரினங்கள், சுற்றுச்சூழல் ஆகியவை ஒங்கிணைந்து ஒரு சூழலியல் ஒருங்கமைப்பைக் (Ecosystem) கட்டமைக்கின்றன.

தொல்காப்பியம் காட்டும் பின்னணிச் சூழல்:

அகத்திணையை முதல், கரு, உரி என்று மூன்று வகையாகப் பிரித்து தொல்காப்பியர் ஆராய்வது சூழலியலுக்குப் பொருத்தமானது. உலகில் எந்நாடாக இருந்தாலும் மக்கள் வாழ்வியல் முறையும், பழக்கவழக்கங்களும், சிந்தனையும், செயல்களும் தொல்காப்பியரின் இந்த மூன்று பிரிவுகளுக்குள் அடங்கிவிடும். இம்மூன்றையும் முறையே,

- முதலும், கருவும் – இடம், நேரம் (Space and Time)
- உரி – இயக்கம் (Movement)

எனப்பகுக்கலாம். இவ்வுலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. இயக்கமின்றேல் பொருள்கள் இல்லை. இடமும் பொழுதும் அவற்றை நெறிப்படுத்துகின்றன. இந்த அடிப்படையிலேயே தொல்காப்பியர் உரிப்பொருளாகிய மக்கள் தம் ஒழுக்கத்தை முதற்கண்கூறி அவ்வொழுக்கம் நிகழுதற்கு அடிப்படையானதும், இன்றியமையாததுமான முதற்பொருளான நிலமும், பொழுதும் கூறி அதனோடு தொடர்புடைய கருப்பொருளைக் கூறியிருக்கிறார். இம்மூன்றின் அடிப்படையில் திணைப்பாகுபாடு செய்கிறார். எனவே, ‘‘திணை’’ என்பதைச் ‘‘சூழல்புனைவு’’ என்றும் ‘‘பின்புலச்சூழல்’’ என்றும் அழைக்கலாம். இச்சூழல் புனைவே திணைப்பாகுபாட்டிற்கு வழி வகுத்தது. இயற்கைச் சூழலில் தோன்றிய நில அடிப்படைக் கூறுகளுடனும், இயல்புகளுடனும் நிலைத்துத் தங்கி வாழத் தலைப்பட்ட மனிதன் ஆங்காங்கே இயற்கைச் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு தம் வாழ்வை அமைத்துக் கொண்டான்.

ஒவ்வொரு திணைக்கும் உரிய முதல், கரு, உரி ஆகிய இம்முப்பொருளும் சிறந்து அமையும்போது, அவ்வத்திணைப்பாடல் உருவாகும் என்பதுதான் தொல்காப்பியர் சுட்டும் திணைக்கோட்பாடு. இத்திணைக் கோட்பாட்டிற்கு உரிப்பொருளே அடிப்படையாக விளங்குவதை,

*‘‘உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே’’*

என்னும் தொல்காப்பிய நற்பா சுட்டி நிற்கிறது.

**ஐந்திணையும் அதன் பின்னணிச் சூழலும்:**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன அன்பின் ஐந்திணைகள். இத்திணைகளுக்கு அடிப்படையானவை முதல், கரு, உரி என்னும் முப்பொருள்கள் இவற்றில் முதலும் கருவும் அந்தந்த நிலத்தையும், அந்நிலத்தின் தன்மைக்கேற்ப அவ்வப்பகுதியில் உள்ள பொருள்களையும் விளக்கும் உரிப்பொருளே இத்தகைய சூழல்களால் மாந்திடம் ஏற்படும் உள்ள உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. அவை புணர்தல், பிரிதல், இரங்கல், ஊடல் என்பது இவ்வுணர்வுகள் தோன்றுவதற்கு அந்தந்த நிலத்தின் பின்னணிச் சூழல்களே காரணமாகும். இதனை விரிவாகக் காண்போம்.

**குறிஞ்சி நிலப் பின்னணி:**

குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமும் ஆகும். இச்சூழலில் வாழ்ந்த மனிதன் வேட்டையாடலைத் தன் தொழிலாக மேற்கொண்டான். வேட்டை என்பது குழுவாக மேற்கொள்ளும் தொழில். ஏனெனில் எந்நேரத்திலும் விலங்குகளால் ஆபத்து

நேரிடலாம். எனவே பாதுகாப்பான மலைப் பகுதிகளிலும் குகைகளிலும் தங்கினர். குழுவாகவே பயணப்பட்டனர். குழுவாகவே வேட்டையாடி, குழுவாகவே உண்டு மகிழ்ந்தனர். அவ்வாறு அவர்கள் கூடி வாழத் தொடங்கிய இடம் மலையும் மலை சார்ந்த இடங்களும் ஆகும். தொன்மைக் காலத்தில் கூட்டு வாழ்க்கையைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்திய ‘‘குறிஞ்சி’’ என்றசொல் காலப்போக்கில் மலையும் மலை சார்ந்த இடத்தையும் குறிப்பிடத் தொடங்கியது.

**முல்லை நிலப்பின்னணி:**

குறிஞ்சி நிலப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள்தொகை மிகுந்து, காட்டு விலங்குகளை வீட்டு விலங்குகளாக மாற்றத் தொடங்கிய நிலையில் முல்லை நில வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றனர். முல்லை நிலமக்கள் ஆயர், வேட்டுவர் என இருதிறப்படுவர். ஆயர்களின் தொழில் ஆடு, மாடு வளர்த்தல், அவற்றின் பயனைப் பெறுதல் என்ற இரு வேலைகளைக் கொண்டது. எனவே, ஆண்கள் ஆடு, மாடு வளர்ப்பிலும் பெண்கள் இவ்விலங்குகளின் மூலம் பெறப்படும் பால், தயிர், வெண்ணெய் போன்ற பொருட்களை பக்குவப்படுத்தும் வேலையிலும் ஈடுபட்டனர். இவ்விரு வேலைகளையும் இருவரும் வேறுவேறு இடங்களிலே செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவே, ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்ற நிலையில் எப்போது விலங்குகளால் ஆபத்து ஏற்படுமோ? என்ற அச்ச உணர்வைக் கொண்டு ஆற்றியிருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. எனவே, வெளியே சென்ற ஆண்களின் வருகையை எதிர்பார்த்து ஆற்றியிருந்த பெண்களின் செயலே ‘‘இருத்தல்’’ என்னும் முல்லைநில உரிப்பொருளாயிற்று.

**மருதநிலப் பின்னணி:**

வயலும் வயல் சார்ந்த இடம் மருதம் ஆகும். மருதநில மக்கள் உழவன், உழத்தியர் என அழைக்கப்பட்டனர். இங்கு சிறப்புத் தொழில் பயிர் செய்தல் ஆகும். மேலே கூறப்பெற்ற குறிஞ்சியிலும் முல்லையிலும் மக்கள் நிலைத்த வாழ்க்கையை மேற்கொள்ள முடியாமல் பெரும்பாலும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். ஆனால், மருதநில உற்பத்தி வாழ்வு நிலைத்த சமுதாயத்திற்கு அடிகோலியது எனலாம். பொதுச் சொத்தாக இருந்த விளைநிலங்கள் மிக விரைவில் தனிவுடைமையாகத் தொடங்கின. சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் மலர்ந்தன. எங்கே தனிவுடைமை நிலவுகிறதோ அங்கே ஏமாற்றம், பொய், களவு, நம்பிக்கையின்மை, வஞ்சனை இவைகளெல்லாம் நிலவ முடியும். இதன் விளைவு வெறுப்பு, மக்களின் உறவுகளும் வெறுப்பு பகைமையும் கலந்ததாக விளைந்தது. எனவே ஊடல் தோன்றியது. திருமணத்தின் மூலம் நிலைபெற்றுவிட்ட வாழ்க்கையில் ஆண், பெண் முரண்பாடுகளைக் குறிக்கும் சொல்லாக ஊடலைத் தொல்காப்பியர் பயன்படுத்துகிறார்.

**நெய்தல் நிலப் பின்னணி:**

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலாகும். இதன் இயற்கைச் சூழலுக்கேற்ப மீன்பிடித்தல், உப்பு தயாரித்தல், உப்புவிற்றல் இவர்கள் செய்த தொழிலாகும். இவர்களின் பிழைப்புக்குக் கட்டுமரமேறிக் கடலுக்குள் சென்றாக வேண்டும். ஏனைய தொழிலைப் போலில்லாமல் மீன்பிடித்தல் ஆபத்து மிகுந்த தொழில். மேலும் மீன்பிடி தொழிலில் உபரி ஏற்பட்ட போது பிடித்த மீனையும் தயாரித்த உப்பையும் உள்நாடான மருத நிலத்திற்குச் சுமந்து சென்று பண்டமாற்றாக நெல்லைப் பெற்றுச் சுமந்து வர வேண்டும். இவ்வாழ்க்கை மிகவும் இரங்கலுக்கும் – பரிதாபத்திற்கும் உரியதாக இருக்கும். எனவே, ‘‘இரங்கல்’’ நெய்தலின் உரிப்பொருளாயிற்று.

**பாலை நிலப் பின்னணி:**

பாலை நிலம் என்பது காடும், மலையும் அல்லாத வளங்குறைந்த வறண்ட நிலம். உணவுப் பொருட்கள் விளைவிக்க முடியாத நிலம். ஆகவே, இப்பகுதி மக்கள் பிறர் பொருளை வலிதில் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டிய சூழ்நிலை இருந்தது. வழிப்பறி செய்தலும், முல்லை, மருதநிலங்களுக்குச் சென்று ஆநிரை கவர்தலும், உணவுப் பொருள்களைக் கொள்ளையடித்தலும் இவர்களுடைய வாழ்க்கைத் தொழிலாகியது. இவ்வாறு பொருள்களை கவர்ந்து வருவதற்காக அன்றாடம் பெண்களையும் பிள்ளைகளையும் விட்டுப் பிரிவதே இந்நில மக்களின் அன்றாட ஒழுக்கம். எனவே, ‘‘பிரிதல்’’ என்பது இதன் உரிப்பொருளாயிற்று.

**முடிவுரை:**

இவ்வாறு மக்கள் தம் பின்னணிச் சூழலை மையமாகக் கொண்டு வாழ்ந்த கூடிவாழ்தல், காத்திருத்தல், இரங்கல், பிரிதல், ஆற்றியிருத்தல் ஆகிய உணர்வுகளே உரிப்பொருளுக்கு அடிப்படையாகக் கொண்டு அவற்றின் பெயர்கள் அமைக்கப்பட்டு இருக்கலாம். மக்களின் சூழலை ஒட்டிய உணர்வுகளே உரிப்பொருளுக்கு அடிப்படை என்பது தெரியவருகிறது.

# சங்க இலக்கிய பெண்பாற் புலவர்கள் சித்தரிக்கும் பெண் இருப்பு குறித்த சில பதிவுகள்

**வ. ஜெயந்தி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*அரசினர் கலைக் கல்லூரி*
*(தன்னாட்சி)*
*கும்பகோணம் - 612 002.*

தமிழின் தொன்மைக்கும் பெருமைக்கும் சான்றாய் நிற்பன சங்கப்பாடல்கள் ஆகும். ஆண், பெண் பேதமின்றி இருபாலரும் பாடியுள்ளனர். சங்க காலத்தில் ஆணுக்கு இணையாகப் பெண்கள் கல்வி கற்றுக் கவிதை புனைந்துள்ளனர். சங்கக் கவிதைகளைப் பாடிய கவிஞர்களின் எண்ணிக்கை 473 ஆகும். ஆண்பாற் புலவர்களை நோக்க பெண்பாற் புலவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாகவே இருக்கின்றனர். சங்க காலத்து பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவில் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. சங்கப் பெண் கவிஞர்களின் கவிதை வழியாக அன்றைய சமூக மதிப்பீட்டில் பெண்ணின் இடத்தையும் அறியலாம். இயற்கையின் வாயிலாக அழகியலை முன்னிலைப் படுத்தும் சங்கக் கவிதைகளில் பெண் கருத்தாடல் பெரும்பாலும் பெண்களின் அகநிலை மன உணர்வுகளின் பிரதிபலிப்பாக வெளிப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் அகம் (காதல்), புறம் (வீரம்) என்ற இரண்டு நிலைகளில் மக்களின் வாழ்க்கையினைப் பிரித்து அக்காலப் புலவர்கள் பாடியுள்ளார். சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் காதலை மிகவும் சிறப்புடன் எவ்விதமான பொய்மையும் இல்லாமல் பாடி இருக்கின்றனர். சங்க காலப் பெண்பாற் புலவர்களில் ஔவையார், வெள்ளிவீதியார், நன்முல்லையார், ஒக்கூர்மாசாத்தியார், பொன்முடியார், தாயங்கண்ணியார், காவற்பெண்டு போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிலிருந்து அக்காலத்து பெண்களின் இல்லறம், விருந்தோம்பல், நடுகல், வீரத்தாய்மார்கள், சமுதாயக்கடமை இவற்றில் காணலாகும் பெண் இருப்பு குறித்த பதிவுகளை அறியும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**இல்லறம்**

சான்றோர்களால் நிச்சியிக்கப்பட்டுப்பலர் ஒன்று கூடி ஆணும் பெண்ணும் இணைந்து இல்லற வாழ்வில் தலைப்படுவதற்குக் காரணமாய் அமைவது திருமணமாகும். இது களவு வழியாகவும் அல்லது பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டும் இருவேறு நிலைகளில் நடைபெறும். திருமணத்திற்குப் பின்னே தலைமக்களின் பொறுப்புணர்வுகள் அதிகரிக்கின்றன. இல்லற வாழ்வியல் குறித்து சி. இலக்குவனார்.

காதலித்தோரை மணந்து, ஒருவனும் ஒருத்தியுமாய் ஒரிடத்தே இல்லமைத்து மக்களைப் பெற்றுத் தம் மக்களுக்காகவும் பிறருக்காகவும் உழைத்தலே தம் கடன் என்று கொண்டு வாழத்தொடங்கிய காலமே மக்கள் நாகரிக வாழ்வை நண்ணிய காலமாகும். அதுவே இல்லற வாழ்வின் இனியதோற்றங்காலமாகும்.[1] என்று கூறுவதுபோல் களவு வழித்திருமணத்தையே சங்கப் பாடல்கள் பலவும் அதிகம் போற்றுகின்றன கற்புவழித் திருமணம் பற்றிய செய்திகள் அருகிலேயே காணக்கிடைக்கின்றன. களவின் முடிவில் உடன்போக்கின்வழி தலைமக்கள் மணம் புரிவது ஒருவகை - அவ்வாறு இல்லாது தலைமக்கள் களவு வழிப்பட்டிருப்பினும் சான்றோர்கள் கூடிப் பேசி முடிப்பது மற்றொரு வகை. இவ்வாறு சான்றோர்கள் பேசி முடிக்கும் மணம் குறித்து வெள்ளி வீதியார் குறிப்பிடுகின்றார். மணம் பேசுகின்ற இடத்தில் நரைத்த தலையில் பாகை அணிந்த ஊன்று கோலுடைய பெரியவர்கள் இருந்தனர் என்றும், அவர்கள் பிரிந்தவர்களைக் கூட்டுவிக்கும் பண்பினர் என்றும், தலைமகன் சார்பில் கொண்டு வந்த அளவிற்கு அதிகமான பரிசத்தைக் கண்டு மகிழ்ந்து சம்மதம் தெரிவித்தனர் என்றும் தமது பாடல் ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

*''பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ*

*தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதலவர்*

*நன்று நன்றென்று மாக்களொ*

*டின்று பெரி தென்று மாங்கண தவையே''*[2]

என்று கூறிச் செல்கின்றனர். அக்காலத்தில் ஆண்மக்கள் பரிசம் கொடுத்து மணக்குமுறை இருந்தமை இதனால் அறியப்படுகிறது.

**விருந்தோம்பல்**

பழந்தமிழரின் பண்பாட்டில் முக்கிய இடம் பெறுவது விருந்தோம்பல் ஆகும். ''ஐவகை நிலங்களிலும் வாழும் குடும்பத்தினர் விருந்தோம்பும் பண்பு பற்றிச் சங்க இலக்கியம் கூறுகிறது. பயணிகளாயினும், சுற்றத்தாராயினும் பசித்து வந்தோர்க்கு உணவு படைத்தலைச் சிறந்த பண்பாகக் கொண்டனர்''[3] ஆடவர் வினைமேற் சென்ற காலத்தில் இல்லறத்தில் இருக்கும் மகளிர் தமது கடமைகளைச் சரிவரச் செய்து வந்தனர். கணவர் உடன் இல்லாத நிலையில் இல்லத்திற்கு வரும் உறவினர்கள் முதலியோருக்கு விருந்து படைத்தல், சுற்றம் ஓம்பல் முதலியவை இல்லற மகளிருக்கும் கடமைகளாகக் கூறப்பட்டுள்ளன. இதை தொல்காப்பியர்,

*''விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்*

*பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்''*[4]

எனக் கூறுகிறார்.

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிலும் தலைவி வினை முடித்து மீளும் தலைவனுக்கு விருந்து படைக்கும் காட்சி கூறப்பட்டுள்ளது. வினை முடிவுற்ற நிலையில் இல்லம் திரும்ப நினைத்த தலைவனிடம் அவனது எண்ணத்தை உணர்ந்த சிலர் தலைவன் வருத்தம் தீர்ந்து மகிழ்வான் என்றும், தலைவனுக்கு விருந்தளிக்கும் வாய்ப்பைப் பெறுவாள் என்றும் கூறினர். இதனை ஒக்கூர் மாசாத்தியார்,

*''விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்*

*தடமென் பணைத்தோள் மடமொழியரிவை''*[5]

என்று கூறுவதனால் அறியலாம். வினைமுடித்து மீளும் தலைவனுக்குத் தலைவி விருந்து படைத்தல் என்பது அன்று வழக்கமாக இருந்துள்ளதை இது காட்டுகிறது. தலைவன் வருகையால் தலைவி படைக்கும் பேற்றினைப் பெறலானாள். என்று ஒக்கூர் மாசாத்தியார் கூறுகின்றார்.

*''மனைக் கொண்டு புக்கன நெடுந்தகை*

*விருந்தோபெற்றன டிருந்தழை யோளே''*[6]

என்னும் பாடலடிகள் விருந்தயரும் காட்சியைச் சுட்டுகின்றன. விருந்தோம்பல் என்பது அக்காலத்தில் இல்லறக் கடமைகளில் முதன்மையானதாக வைத்துப் போற்றப்பட்டுள்ளது.

**நடுகல் வழிபாடு**

நடுகல் என்பது நட்டகல் அல்லது நடப்பட்ட கல் என்று விளக்கம் தரப்படுகின்றது. ''எழுத்துடை நடுகல் என அகநானூறு குறிப்பிடுகின்றது. இத்தகைய நடுகல்லைச் சுற்றி வேல்களும், கேடயங்களும் நடப்பட்டு இருந்ததாகச் சங்கப் பாடல்கள் குறிப்பது, அந்நடு கல்லிற்குரிய வீரர்கள் பயன்படுத்திய போர்க் கருவிகளாகவே இருக்கும் என ஊகிக்கலாம்''[7] இறந்த வீரர்களின் நினைவாக நடப்பட்ட கல்லில் தெய்வம் உறைந்திருப்பதாக எண்ணி, மயில் பீலிசூட்டி, பூச்செரிந்த விரும்பிய உணவு வகைகள் படைக்கப்பட்டு நடத்தப்படும் ஒருவகைச் சடங்கு நடுகல் வழிபாடாகும்.

தமது முன்னோரின் நினைவாக வைக்கப்பட்ட நடு கல்லை மறக்குடி மகள் ஒருத்தி வழிபட்டாள். அப்போது, விருந்தினர்கள் இல்லம் நாடி வருதல் வேண்டும் என்றும், விரைவில் போர் உண்டாக வேண்டுமென்றும், அப்போரில் தன் கணவன் வெற்றி வாகை சூட வேண்டும் என்றும் வேண்டினாள். இவ்வாறான நடுகல் வழிபாட்டை அள்ளூர் நன் முல்லையார் என்னும் புலவர்,

*''ஒலி மென் கடந்த பொண்ணுத லரிவை*
*நடுகற் கை தொழுது பரவுமொழியாது''*[8]
என்று கூறுகின்றார்.

**வீரத்தாயின் பெருமை**

சங்க மகளிர் ஆயுதங்களோடு போர் புரியவில்லையாயினும் வீரர்களுக்கு ஆயுதந்தந்து வெற்றி பெற முன் நின்றனர். போர் வெற்றியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர் – சிறந்த மறவனையே கணவனாக ஏற்றனர் போரில் வெற்றிவாகை சூடும் மகவைகளே ஈன்று புறந்தந்தனர். தாம் ஒரு வீரனின் தாய் எனக் கேட்பதில் ஈன்றெடுத்த நாளினும் பெரிதும் மகிழ்ந்தனர்.

தன் மகன் போரில் பல வீரர்களை வீழ்த்தி இறுதியில் வெட்டுண்டு உடல் சிதைந்து கிடக்கின்றான். இதனைக் கண்ட அவனும் தாய் தன் மகனின் வீர மாண்பைக் கண்டு ஈன்ற பொழுதை விட பெரிதும் மகிழ்வுற்றாள். மேலும், அவளின் வற்றிய மார்பில் மகனை வீரச்செயலைக்கண்டு பொங்கிய அன்பால் பால் சுரந்து நின்றது என்பதை ஔவையார்,

*''வாடுமுலை யூறிச் சுரந்தன*
*ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே''*[9]

என்று பாடி வீரத்தாய் ஒருத்தியின் பேரு வகையைச் சிறப்பித்துள்ளார்.

இத்தகைய நற்குடியில் பிறந்த வீரமகள் ஒருத்தி முதல் நாள்போரில் தன் கணவனையும், அதற்கும் முதல் நாள் போரில் தன் தந்தையையும் இழக்கின்றாள். அடுத்த நாளும் போர் நடைபெறத் தொடங்கியது அப்போது தெருவில் விளையாடியிருந்த தன் ஒரே புதல்வனை அழைத்து வந்து புத்தாடை உடுத்தி, தலைக்கு எண்ணெய் தடவி ஒப்பனை செய்து, கையில் வேல் ஒன்றைக் கொடுத்துப் போர்களம் அனுப்பினாள் என்பதை ஒக்கூர் மாசாத்தியார் என்னும் புலவர்,

*''வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீகுப்*
*பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி*
*ஒரு மகனல்ல தில்லோன்*
*செருமுக நோக்கிச் செல்கென விடுமே''*[10]

என்று மறக்குடி மகளின் வீரவுணர்வைச் சிறப்பிக்கின்றார். கணவனையும் தந்தையையும் இழந்த நிலையிலும் போர்ப்பயிற்சியே இல்லாத தன் ஒரே புதல்வனைப் போருக்கு அனுப்பிய அந்த வீருமகளின் செயல் அக்கால மகளிரின் வீர மாண்பைப் பறைசாற்றுவதாய் அமைகிறது.

**சமூகக் கடமைகள்**

இச்சமூகத்தில் பிறந்த அனைவருக்கும் செய்ய வேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. அதனை உணர்ந்து அவரவர் தத்தமது கடமைகளைச் சிறப்புற ஆற்றுதல் வேண்டும். பொன்முடியார் என்னும் புலவர்,

*''ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே*
*சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே*
*வேல் வடித்துக் கொடுத்தல் வேந்தங்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவா ளருஞ் சம முருக்கிக்*
*களிநெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''*

என்று தாய், தந்தை, கொல்லன், வேந்தன், வீரன் ஆகியோருக்கு உரிய கடமைகள் பற்றிக் கூறுகின்றார். இத்தகைய கடமைகள் அன்றைய சமூகத்தின் மேம்பாட்டிற்கும் அடிப்படையானவை என்பதை இதன் வழி தெளியலாம் ஒவ்வொருவருக்கும் கடமைகள் பல இருப்பினும் சமூக மேம்பாட்டில் ஆடவரின் கடமையே முன் நின்றது.

பொன்முடியாரது பாடலிலும் இளைய ஆடவன் ஒருவனது வீரச் செயலுக்கு மற்ற அனைவரும் எத்தகைய வகையில் உதவி செய்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

''ஆடவன் உள்ளத்தின் வலிமையாலும் உடலின் வலிமையாலும் சில செயல்களைச் செய்து வாழ்வான் அறிவின் ஆண்மை செயல்படும் பொழுது உரவோன் என்றும், உடலின் ஆண்மை செயல்படும் பொழுது வீரன் என்றும் வழங்கப்படும்''[12] என்று கூறப்படுவதாலும் அக்கால மக்களின் சமூகக் கடமைகள் மேலும் அறியப்படுகிறது. காலச் சூழலுக்கு ஏற்ப மக்களின் தேவைகளும் கடமைகளும் மீறி அமைகின்றன.

**தொகுப்புரை**

சங்க இலக்கிய பெண்பாற் புலவர்களின் பாடல்கள் பெண்ணின் உணர்வு வெளிப்பாடாய் அமைந்துள்ளன. இவர்களின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இல்லறம், விருந்தோம்பல், சமூகக்கடமை, வீரத்தாய்மாரின் பெருமிதம் போன்றவற்றில் பெண்ணின் இருப்பு பல்வேறு பரிமாணங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. மேலும் பெண் புலவர்கள் தம் தன்னுணர்வு வெளிப்பாட்டிற்கு முக்கிய இடம் அளித்துள்ளமையும் உணர முடிகிறது.

**பார்வை நூல்கள்**


1. சி. இலக்குவனார், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வில் ப. 51.

2. குறுந்தொகை 146: 2-5.

3. அ. ஆறுமுகம், சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை, அரசு ப. 49.

4. தொல்காப்பியம், கற்பியல் நூ: 11: 3-4.

5. அகநானூறு: 324: 1-2.

6. அகநானூறு: 382: 14-15.

7. வெ. கேசவராஜ், நடுகல் வழிபாடு, ப.12.

8. புறநானூறு, 306: 3-4.

9. புறநானூறு, 295: 7-8.

10. புறநானூறு 70: 8-11.

11. புறநானூறு 312: 1-6.

12. செந்துறை முத்து, தமிழர் வாழ்வியல், ப. 8.

# திருமங்கையின் பாசுரங்களில் திவ்ய தேச இயற்கைப் புனைவுகள்

**க. வேம்பு,**
*முழுநேர*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*அரசினர் கலைக் கல்லூரி*
*(தன்னாட்சி),*
*கும்பகோணம் - 612 001.*

உலகில் எங்கெல்லாம் அழகு உள்ளதோ அங்கெல்லாம் இறைவனும் இருப்பதாகக் கொள்வது தமிழரது நம்பிக்கை. 'முருகன்' என்ற தமிழ்க்கடவுளின் தத்துவம் என்பதைத் திரு.வி.க போன்றே இறைவன் மீது அன்பு கொண்டவர்கள் விளக்கியுள்ளனர். இதனைப் பின்பற்றி பக்தர்களும் இயற்கைகளில் இறைவனை, அனுபவிக்கின்றனர். காட்டிலும், நாட்டிலும், மண்ணிலும், விண்ணிலும் எல்லா இடங்களிலும், காணும் இயற்கையழகுகளில் எம்பெருமானின் அழகில் மனதைப் பறிகொடுக்கின்றனர். இத்தகைய மனநிலையைக் கொண்ட ஆழ்வார்களும் இயற்கையழகினைத் தம் மனம் விரும்பும் கடவுள் வடிவத்தின் தெய்வீக அழகைக் காணுகின்றனர். இத்தகைய இயற்கையழகுகள் வாய்ந்த தலங்களைத் தான் 'திவ்ய தலங்கள்' என்றும், 'திருப்பதிகள்' என்றும் கூறியுள்ளனர். அதைப் போன்றே அத்தலங்களின் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் இறைமைத் தன்மையையும், தலங்களின் இயற்கையையும் ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் புனைந்துள்ளனர். இவற்றை மையமாகக் கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திருமங்கையாழ்வார்**

சோழ மண்டலம் திருவாலி நாட்டில் திருக்குரையலூரில் கள்வர் இனத்தில், திருமாலின் சார்ங்கம் என்ற வில்லின் அம்சமாக பிறந்தார். கலியன் என்பது இயற்பெயர். இவர் 86 திவ்ய தேசங்களைப் பற்றி பாசுரம் பாடியுள்ளார். திருவரங்கப் பெருநகரின் சுற்று மதில் எடுத்தவர்.

அருளிய (நூல்கள்) பிரபந்தங்கள், இவர் ஆறு பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார்.

1. பெரிய திருமொழி
2. திருக்குறுந்தாண்டகம்
3. திருநெடுந்தாண்டகம்
4. திருவெழுகூற்றிருக்கை
5. சிறிய திருமடல்
6. பெரிய திருமடல் என்பவைகளாகும்.

ஆலிநாடு, திருமங்கை, குறையல் என்ற நகரங்களுக்கும் தலைவர் என்பதைக் 'கூரணிந்த வேல்வலவன், ஆலிநாடன், கொடி மாடமங்கையர் கோன், குறையவாளி' என்ற பாசுரடியால் அறியலாம்.

**திருவரங்கத்தின் இயற்கை**

சோழநாட்டின் தலைமைத் தலமாக திருவரங்கம் திகழ்கின்றது. சந்தனக் கட்டைகளையும், நவரத்தினங்களையும், யானைகளின் தந்தங்களையும், அதில் மரங்களையும் அடித்துக் கொண்டு முன்னே தள்ளி விளையாடும் அலைகளையுடைய காவிரி நீரானது சூழப்பெற்ற கழனிகளையுடையத் தலைமாக இயற்கை எழில் கொஞ்சுகின்றன. இதனை,

*''சந்தினோடு மணியும் கொழிக்கும் புனல்காவிரி*
*அந்திபோலும் நிறத்து ஆர்வயல் சூழ் தென்னரங்கம்''*

***(பெரி. திரு. 5.4.1)***

என்ற பாசுரமும்,

*'துளைக்கை யானை மருப்பும், அகிலும் கொணர்ந்து உந்திமுன்*
*திளைக்கும் செல்வப் புனல் காவிரி சூழ் உதன் அரங்கம்''*

***(மேலது, 5.4.4.)***

என்ற பாசுரயடிகளும் உணர்த்துகின்றன.

பொன்னையும், இரத்தினங்களையும், முத்துகளையும், திரட்டிக் கொண்டு அலை எறிந்து கொண்டு வருகின்ற காவேரியின் இருபக்கமும் அன்னப் பறவைகள் உலாவப் பெற்ற தடாகங்கள் சூழப்பெற்ற தலமாக திருவரங்கம் உள்ளது என்பதனை,

*''பொன்னும் மாமணியும் முத்தமும் சுமந்து*
*பொரு திரைமா நதிபுடை சூழ்ந்து*
*அன்னம் மாடுஉலவும் அலைபுனல் சூழ்ந்த*
*அரங்க மாநகர்''*

***(மேலது, 5.7.10)***

என்ற பாசுரவடிகள் குறிப்பிடுகின்றன.

**திருப்பிரிதி திவ்ய தலத்தின் இயற்கை சூழல்**

திருப்பிரிதி என்ற திவ்ய தலத்து இயற்கைச் சூழலையும், இறைவனின் திருமேனியழகும், அவதாரங்களின் இயற்கையும், அக்காலத்தில் நிகழ்ந்த வீரச்செயல்களின் இயற்கையையும் பற்றி திருமங்கை மன்னன் தன் பாசுரங்களின் வழி எடுத்துரைத்துள்ளார்.

*''வரைசெய் மாக்களிறு இளவெதிர் வளர்முளை*
*அளைமிகு தேன் தோய்த்துப்*
*பிரச வாரிதன் இளம்பிடிக்கு அருள்செயும் பிரிதி''*

***(பெரிய. திருமொழி. 1.2.5)***

என்ற பாசுரவடியால் இமயமலையில் ஆண் யானையொன்று தன் காதலியாகிய இளம் பெண் யானையை மகிழ்விக்க நீண்டு, உயர்ந்து, வளர்ந்த மூங்கில் முளைகளைப் பெயர்த்து எடுத்து, மலையில் மிகுதியாக உள்ள தேனிலே தோய்த்து, அதன் வாயில் ஊட்டுகின்றன. இதனால் யானையின் அகவாழ்க்கைப் பெருமையினை அறியலாம்.

இந்த கருத்தினை ஒட்டி திருமலையில் பூதத்தாழ்வார் கூறியது புலனாகிறது. அதாவது மதம் பிடித்து, தன் மனம் போனப் போக்கில் திரியும் யானையொன்று தன் பெண் யானையைக் கண்டவுடன் அதற்கு மேல் செல்லாது, பக்கத்திலிருந்த மூங்கில் குருத்தினைப் பிடிங்கி, மலைக் குகையிலுள்ள தேன் கூட்டில் நனைத்து அதற்கு இனிய உணவாகக் கொடுத்து மகிழ்ச்சியடைகின்றது. இதனை,

*''பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று*
*இருங்கண் இளமூங்கில் வாங்கி, அருகிருந்த*
*தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம்''*

***(இரண் திரு. பா. எ.75)***

என்ற பாசுரம் புலப்படுத்துகிறது.

மேலும் மலையில் வாழும் மலைப்பாம்பு யானையை உணவாக பயன்படுத்தியதாக ஆழ்வார்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். இதனை,

*''கரிய மாமுகில் படலங்கள் கிடந்துஅவை*
*முழங்கிட களிறு என்று*
*பெரிய மாசுணம் வரை எனப் பெயர்தரு பிரிதி''*

***(பெரி. திரு. 1.2.10)***

எனும் பாசுரயடிகளால் மலைவாழ் உயிரினங்களின் இயற்கைக் குணத்தை வெளிப்படுத்துகின்றார்.

**சிங்கவேழ் குன்றம்**

சிங்கவேழ் குன்றம் அடர்ந்த காடுகள் நெருங்கி இருப்பதால், அச்சம் ஏற்படும் சூழ்நிலையாகக் காட்சித் தருகின்றன. விலங்குகள் களைத்து போய் உள்ளன. மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்து தீயினை வெளிப்படுத்துகின்றன. இதனை,

*''ஒய்ந்த மாவும் உடைந்த குன்றும்*
*அன்றியும் நின்றழால்*
*தேய்ந்த வேயும் அல்லது இல்லாச்*
*சிங்கவேழ் குன்றமே''*

***(பெரி. திரு. 1.7.3)***

எனும் பாசுரத்தினால் சிங்கவேழ் குன்றம் என்ற தலத்தின் காடுகளின் இயற்கைத் தன்மையையும் இதைப்போன்றே வாகை நெற்றுகள் காற்று வீசுவதால் ஒலிக்கின்றன. மூங்கில் உராய்வதால் உண்டான செம்மை நிறத் தீ விண் முழுவதையும் சிவக்கச் செய்கின்றன. இதனை,

*"காய்த்த வாகை நெற்றொலிப்பக்*
*கல்லதர் வேய்ங் கழைபோய்*
*தேய்த்ததீயால் விண் சிவக்கும்*
*சிங்கவேழ் குன்றம்"*

**(மேலது, 1.7.8)**

எனும் பாசுரம் உணர்த்துகின்றது.

**திருவேங்கடம்**

திருவேங்கடத்தின் இயற்கையை விட அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார் திருமங்கை மன்னன். அதனால் இயற்கையின் சிறப்பினை மின்வெட்டு போல் ஒளிரச் செய்கின்றார். என்பதனை,

*"செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம்"*

**(பெரி. திரு. 1.8.1)**

என்றும்,

*"காரும் வார்பனி நீள் விசும்பிடைச்*
*சேரும் மாமுகில் தோய்தர சேரும்*
*வார்பொழில் சூழ்எழில் திருவேங்கடம்"*

**(மேலது, 1.8.7)**

எனும் பாசுரங்களாலும் திருமலையின் இயற்கைப் புலனாகிறது.

**அழகர் மலை**

அழகர் மலை என்றழைக்கப்படும் திருமாலிஞ் சோலையின் மலையில் இரத்தினக் கற்களையும், சந்தனக் கட்டைகளையும் உருட்டிக்கொண்டு அருவிகள் நீரைப் பொழிகின்றன. இவ்வழகியக் காட்சியை,

*"சந்தொடு மணியும் அணிமயில் தழையும்*
*தழுவி வந்து, அருவிகள் நிரந்து,*
*வந்து இழி சாரல் மாலிருஞ்சோலை"*

**(மேலது, 9.8.1)**

என்ற பாசுரவடிகள் குறிப்பிடுகின்றன.

மேலும் சோலையின் மலைச்சாரலில் மூங்கில் மரங்கள் நிறைந்து வளர்ந்துள்ளன. அம்மூங்கில்கள் வளைந்தும் பிரிந்தும் காணப்படுகின்றன. அதற்கிடையில் நறுமணமிக்க குறிஞ்சி மலர்களில் உள்ளே தேனினை உண்ட வண்டுகள் வாழ்கின்றன. இதனை,

*"விண்டு அலர்துளி வேய்வளர் புறவில்*
*விரைமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்*
*வண்டு அமர் சாரல் மாலிருஞ்சோலை"*

**(மேலது. 9.8.2)**

என்ற பாசுரத்தால் மலையின் இயற்கைத் தன்மைப் புலப்படுகிறது.

**திருக்கோவலூர்**

நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் தோன்றியதற்கு காரணமான வரலாற்றுப் புகழ்மிக்க திவ்யத் தலமாகும். இத்தலம் தென்பெண்ணையாற்றின் தென்கரையில் அழகான இயற்கை சூழ்நிலையில் அமைந்துள்ளன. இதனை,

*"எழுந்த மலர்க்கரு நீலம் இருத்தில் காட்ட,*
*இரும்புன்னை முத்துஅரும்பிச் செம்பொன் காட்ட,*
*செழுந்தட நீர்க்கமலம் தீவிகைபோல் காட்டும்*
*திருக்கோவிலூர்"*

**(மேலது 2:10.3)**

என்ற பாசுரயடிகளினால் நீரிலிருந்து வெளிப்படும் கருநெய்தல் பூவானது கரியைக் காட்டவும், புன்னை மரங்களின் மொட்டுகள் முத்துமணியைக் காட்டவும், அவை மலர்ந்து பசும்பொன்னைக் காட்டவும், குளத்திலுள்ள தாமரை மலர் விளக்குப் போல் தோற்றமளிக்கக்கூடிய இயற்கைத் தன்மையைத் தோற்றுவிக்கின்றன. இதனைக் காணும் போது தட்டானின் பொற்களரியாகக் காட்சியளிக்கின்றன என்பதையும் உணரலாம்.

**திருவயிற்ந்திரபுரம்**

வண்டுகள் மலைப்பக்கத்தில் உள்ள குருக்கத்தி என்ற பந்தலில் அமர்ந்து, தன் பெண்வண்டு தன்னிடம் வந்து சேர்வதற்காக தாமரை மலரில் இருந்து கொண்டு, 'தெனாதெனா' என்ற இசையினை ஒலிக்கச் செய்கின்றன. மேலும், மலைச்சாரலில் வெற்றிலைக் கொடிகள் கணுக்கள் தோறும் மிகுதியாக வளர்கின்றன. பாக்கு மரங்களின் குருத்துக்கள் மணம் வீசப்பெற்ற

சாரலை உடையதும், மீன்கள் துள்ளி விளையாடும் ஆறானது, வயல்களின் தன்மையைப் பெருகச் செய்கின்றன. இப்புனைவுகளை,

*"............. வரைச்சாரல்*
*பின்னும் மாதவிப் பந்தலில் பெடைவரப்*
*பிணி அவிழ் கமலத்து*
*தென்ன என்றுவண்டு இன்னிசை முரல்தரு*
*திருவயிந்திர புரமே"*

**(மேலது. 3.1.2)**

என்ற பாசுரமும்,

*"குலவு தண்வரைச் சாரல்*
*கால்கொள் கண்கொடி கைஎழக் கமுகுஇளம்*
*பாளைகள் கமழ் சாரல்*
*சேல்கள் பாய்தரு செழுநதி வயல்புகு*
*திருவயிந்திர புரமே"*

**(மேலது, 3.1.9)**

என்ற பாசுரமும் உணர்த்துகின்றது.

**திருச்சித்திரக்கூடம்**

சோலைகளில் மயில்கள் ஆடுகின்றன. மீன்கள் துள்ளி வாய்க்காலை உடைய நீர்நிலங்களின் அருகில் வண்டுகள் செல்கின்றன. அவ்வண்டுகள் தேனினை உண்பதற்காக மேலே பறக்கின்றன. அதுபோல் மாடங்களிலுள்ள கொடிகள் அசைகின்றன. இத்தகு சிறப்புடையத் தலமாக தில்லை திருச்சித்திரக்கூடம் திகழ்கின்றன. இதனை,

*"கான்ஆட மஞ்ஞைக் கணம்ஆட, மாடே*
*கயல்ஆடும் கால்நீர்ப் பழனம் புடைபோய்த்*
*தேன்ஆட, மாடக்கொடி ஆடு தில்லைத்*
*திருச்சிரத்கூடம் சென்று சேர்மின்களே"*

**(மேலது, 3.2.1)**

என்ற பாசுரவடிகளால் உணரலாம்.

யானையின் கொம்புகளையும், மலையிலுள்ள சந்தன மரங்களையும் தள்ளிக் கொண்டு 'நிவா' என்றும் ஆறானது பாய்கின்றது. இப்புண்ணிய நதியால் சூழப்பெற்ற தலமாக காணப்படுவதை,

*"கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில்*
*கமழ்சந்தும் உந்தி, நிவா லலம்கொள்*
*தெய்வப் புனல்சூழ்ந்து, அழகுஆய தில்லைத்*
*திருச்சித்ர கூடம்"*

**(மேலது.)**

பாசுரவடிகள் குறிப்பிடுகிறது.

**திருக்காழிச் சீராம விண்ணகரம்**

வயல்களில் எருதுகள் உழுகின்றன. பிரசவிக்கும் சமயத்தில் உள்ள சங்குகள் முத்துக்களை ஈனுகின்றன. அம்முத்தினைத் தங்களது முட்டை என்று மயங்கி கொக்குகள் பாதுகாக்கின்றன. எல்லா இடங்களிலும் தேன் ஒழுகும் தாமரைப் பூக்கள் பூத்திருக்கின்றன. மீன்கள் துள்ளி விளையாடுகின்ற வயல்களைப் பெற்றத் தலமாக காழீச் சீராம விண்ணகரம் உள்ளது என்ற இயற்கையை,

*"................. உழுசே ஓடச்*
*சூல்முகம் ஆர்வளை அளைவாய் உகுத்த முத்தைத்*
*தொல்குருகு சினை எனச் சூழ்ந்து இயங்க, எங்கும்*
*தேன்முகம் ஆர்கமல வயல்சேல் பாய் காழிச்*
*சீராம விண்ணகரே"*

**(மேலது 3.4.2)**

என்ற பாசுரவடிகளால் அறியலாம். மேலும், மருதத்திணையின் கருப்பொருளோடு திவ்ய தலத்தின் இயற்கை வளம் புனையப்பட்டுள்ளமைப் புலனாகிறது.

**திருவாலி**

இயற்கையின் வளங்களோடு புனையப்பட்டுள்ளது. புன்னைமரம், ஞாழல் மரம், தென்னைமரம், தாமரை, செண்பகம், மல்லிகை, நண்டு, வண்டு, என்று மரங்கள் பூக்கள், உயிரினங்கள், என இயற்கை வளத்தோடு இத்தலம் புனையப்பட்டுள்ளது. இதனை,

*"நிலவி மலர்ப் புன்னை, ஞாழல் நிழல்தன்*
*தாமரை மலரின்மிசை, மலி*
*அலவன் கண்படுக்கும் அணி ஆலி"*

**(மேலது. 3.5.7)**

என்ற பாசுரமும்,

*"கொங்கு செண்பக மல்லிகை மலர்*
*புல்சி, இன்இள வண்டுபோய், இளந்*
*தெங்கின் தாது அளையும் திருவாலி"*

**(மேலது. 3.5.8)**

என்ற பாசுரமும் புலப்படுத்துகிறது.

**திருப்புள்ளம் பூதங்குடி**

இத்தலத்தின் வயல்களின் இயற்கையை, ஆழ்வார்

*"பள்ளச் செறுவில் கயல்உகளப்*
*பழனக் கழனி அதனுள் போய்*

*புள்ளுப் பிள்ளைக்கு இரைதேடும்*
*புள்ளம் பூதங்குடிதானே''*

**(மேலது, 5.1.2)**

என்ற பாசுரத்தால் குறிப்பிடுகின்றார். அதாவது வயல்களில் மீன்கள் அதிகம் உள்ளன. இவைப் பெரியதும், சிறியதுமாகக் காணப்படுவதால் பறவைகள் சிறிய மீன்களை உணவாக உட்கொள்கின்றன. நெய்தலின் சிறப்பு மருதத்தின் இயற்கை வழியாக இத்தலம் புலப்படுத்துகிறது.

**நாச்சியார் திருக்கோயில்**

திருமங்கையின் பாசுரங்களில் 'நறையூர் என்றழைக்கப்படும் திவ்யத் தலமே நாச்சியார் திருக்கோயிலாகும். தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ளதால் நீர் வளம், நிலவளத்திற்கு குறைவில்லை. இதனை,

*''பள்ளி கமலத் திடைப்பட்ட*
*படுவாய் அலவன் முகம் நோக்கி*
*நள்ளி யூடும் வயல் சூழ்ந்த*
*நறையூர் நின்ற நம்பியே''*

**(பெரி. திரு. 6.7.6)**

என்ற பாசுரத்தில் நீர் வளத்தின் சிறப்பும், நண்டின் அகவாழ்க்கையின் தன்மையும் புலனாகிறது. தாமரைப் பூவில் உறங்கிக் கொண்டிருந்த ஆண் நண்டின் மீது பெண் நண்டு ஊடல் கொண்ட வயல் சூழ்ந்த தலமாக உள்ளது.

**திருநாங்கூர் மணிமாடக்கோயில்**

வயல்களில் எருமைகள் கரும்பின் தோகையினை மேய்ந்தன. அளவுக்கு அதிகமாக தின்றதால், நகர முடியாமல் இருந்த இடத்திலே இருந்து கொண்டு அசை போடுகின்றன. பின் மெதுவாக நடந்து சென்று செங்கழுநீர்ப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்ற நீர் நிரம்பிய தடாகத்தில் மூழ்குகின்றன. குட்டையின் சேற்றில் கொம்புகளால் குத்தி மண் உருண்டையைத் தாங்கிக் கொண்டு ஏற முடியாமல் சிறிது நேரம் கிடக்கின்றன. இத்தகு அழகிய இயற்கைக் காட்சியை,

*'' ............... ஓங்கு பைந்தாள்*
*கண்ணார் கரும்பின் கழைதின்று வைகி*
*கழுநீரில் மூழ்கி செழுநீர்த் தடத்து*
*மண்ஏந்து இளமேதிகள் வைகும் நாங்கூர்''*

**(மேலது, 3.8.6)**

என்ற பாசுரயடிகளால் அறிய முடிகிறது.

**திருப்புல்லாணி**

இராமேசுவரத்தில் கடல் அமைதியாக இருப்பது போல் திருப்புல்லாணிக் கடல் அமைதியாக இல்லை. அங்குக் கடல் மிகக் கொந்தளிப்புடன் உள்ளது என்று

*''பொழுது முந்நீர்ச் கரைக்கே மணியுந்து புல்லாவை''*

**(மேலது. 9.3.2)**

ஆழ்வார் பேசுகின்றார். இங்குள்ள கடற்கரைச் சோலைகள் ஆழ்வாரின் திருவாக்கில்

*''இலகு முத்தும் பவளக் கொழுந்தும் எழில் தாமரை புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து அழகு ஆய புல்லாணி''*

**(மேலது. 9.3.10)**

என மிளிர்கின்றது. ஒளிமல்குகின்ற முத்துக்களையும், அழகிய பவளத் துளிர்களையும் மலர்ந்த தாமரைப் பொய்கைகளையும் உடையச் சோலைகளால் சூழப்பட்டத் தலமாக, இயற்கை எழில் கொஞ்சக் காணப்படுகின்றன. மேலும் நெய்தலின் கருப்பொருளையும் இத்தலத்தில் காணலாம். இதனை,

*''கள்ளவி மும்மலர்க் காவியும் தூமடல் கைதையும்*
*புள்ளும் அள்ளல் பழனங்களும் சூழ்ந்த புல்லாணி''*

**(மேலது 9.3.6)**

என்ற பாசுரம் உணர்த்துகின்றது.

**தொகுப்புரை**

சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, நடுநாடு, மலைநாடு, வடநாடு, என்ற மண்டலங்களில் அடங்கிய தலங்களின் இயற்கையை ஆழ்வார் புனைந்துள்ளார். மேலும், எண்பத்தாறு திவ்ய தலங்களின் சிறப்பினை ஆழ்வார் பாடியுள்ளார். நாடு பேதமின்றி திருமால் எழுந்தருளியுள்ள திவ்ய தலங்களின் இயற்கை எழிலினைப் புனைந்துள்ளமையை திருமங்கையாழ்வார் பாசுரங்கள் வாயிலாக இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

# திருமங்கையாழ்வாரின் அகப்பொருள் புதுமைகள்

**மா.மகேஸ்வரி**
*பகுதி நேர*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை*
*அரசினர் கலைக் கல்லூரி*
*(தன்னாட்சி)*
*கும்பகோணம்.*

திருமங்கையாழ்வார் சோழவள நாட்டில் திருவாலி என்ற பகுதியில் கள்ளர் குலத்தில் பிறந்தவர். இவர் ஆறு பாசுரங்கள் பாடியுள்ளார். அவை, 1. பெரிய திருமொழி, 2. திருக்குறுந்தாண்டகம், 3. திருந்நெடுந்தாண்டகம், 4. திருஎழு கூற்றிகை, 5. சிறிய திருமடல், 6. பெரிய திருமடல் ஆகியனவாகும். இவற்றை 'மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர் கோனின் ஆறாப்சங்கள்' என போற்றுவர்.

''நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இவர் பாடிய பாசுரங்களே சிறப்புடையன''[1] என்பார் மறைமலையடிகள் பக்தி அகப்பொருள் அமைந்த திருமொழிகளாக, பெரிய திருமொழியில், 23: திருநெடுந்தாண்டகத்தில் 2: மடல் 2: ஆக மொத்தம் 27 திருமொழிகள்.

இவை தாய்பாவனையிலும், மகள் நிலையிலும் பாடப்பட்டுள்ளன. திருமங்கையாழ்வார் புலமை நிரம்பிய ஆழ்வார். அவர் பழந்தமிழ் காதல் இலக்கிய மரபுகளையொட்டி பாடல்கள் பாடியுள்ளார். மரபுகளையொட்டிய பாடல்களை பாடியதோடு அவற்றில் சில புதுமைகளையும் செய்துள்ளார்.

சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்களில் பயின்று வருவனவாகிய நற்றாய் கூற்று, தலைவி கூற்று, தோழிக்கூற்று என கூற்றுப்பாடல்கள் ஆழ்வார் தம் பிரபந்தங்களில் காணமுடிகிறது. சமண, பௌத்த சமயங்கள் பேரின்ப காதலை பேசும் நாயகன் நாயகி பாவத்தை ஏற்பதில்லை. ஆனால் ஆழ்வார் பாசுரங்களே நாயகன் நாயகி பாவத்தினை இறைவன் மீதான மனித காதலைப் பேசுகிறது.

இறைவனைத் தலைவனாகவும் தங்களைத் தலைவியாகவும் கொண்டு அதிகம் பாடியவர் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் இருவரும். இதில் திருமங்கையாழ்வார் தன்னை பெண்ணாக பாவித்து பாடியதில் சிறப்பு பெற்றுள்ளார் எனலாம். இவ்வாறு பாடுவதை.

*''ஞாலத்தில் தம் பேச்சு*
*பிரெம்மதில் பெண்பேச்சு''*[2] **சூ - 118**

என்று வகைப்படுத்தும். நாளகி பாவத்தில் அதிகம் பாடிய திருமங்கையாழ்வாரை 'பரகால நாயகி' என்று குறிப்பது வைணவ மரபு. இத்தகைய நாயகி வெளிப்பாட்டில் அகமரபில் புதுமை செய்துள்ள திறம் இப்பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

என்று வகைப்படுத்தும். நாளகி பாவத்தில் அதிகம் பாடிய திருமங்கையாழ்வாரை ‘பரகால நாயகி’ என்று குறிப்பது வைணவ மரபு. இத்தகைய நாயகி வெளிப்பாட்டில் அகமரபில் புதுமை செய்துள்ள திறம் இப்பகுதியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தமிழ் அகமரபில் அறத்தோடு நிற்கும் மரபில் தோழி செவிலியிடத்தும், செவிலி நற்றாயிடத்தும், நற்றாய் தந்தையிடத்தும் அறத்தோடு நிற்பர். இதுவே காதலை வெளிப்படுத்தும் மரபாகும். தலைவி காதல் வயப்பட்ட நிலையை மற்றவர்கள் குறிப்பாலும், இடத்தினாலும் உணர்ந்து கொள்வர். இதனை,

*“காமத்திணையில் கண்நின்று வரூஉம்*

*நானும் மடனும் பெண்மைய ஆதலின்*

*குறிப்பினும் இடத்தினும்*

*நெறிப்பட வாரா அவள்வயின் ஆன”*[3]

**தொல்.பொருள். அகம் - பா. 106**

என்று தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. ஆனால், திருமங்கையாழ்வார் எனும் பரகால நாயகி தானே அறத்தோடு நிற்கிறாள். அதாவது, தலைவி தன் தாயிடம் தன் வேட்கையை வெளிப்படுத்துகிறாள். அதனை,

*“கண்ணன் ஊர் கண்ணபுரம் தொழும்காரிகை*

*பெண்ணை ஏன்? தன்னுடைய*

*உண்மை உரைக்கின்றாள”*[4]

**பெ. திருமொழி - 1662**

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது. நற்றாய் கூற்றாக அமைந்த அப்பாடல் தலைவியானவள் தன்னுடைய பெண்மைத் தன்மையை மறந்து என்னிடம் தன் வேட்கையை வெளிப்படுத்துகிறாளே என்று கூறுவதாக அமைந்துள்ளது.

மற்றொரு பாடல் பிரிவு ஆற்றலாகிய தலைவி தன் தோழியிடத்தும், தாயினிடத்தும் தலைவன் இருக்கும் இடத்திற்கு கொண்டு சேர்க்குமாறு வேண்டுவதாக அமைந்துள்ளது.

*“ஊகை திரிதந்து உழறி உண்ண*

*ஓர் இரவம் உறங்கேன், உறங்கும்*

*மேதையர் பேதைமையால் இருந்து*

*பேசினும், பேசுக, பெய் வளையார்*

*கோதை நறுமலர் மங்களை மர்வளி*

*குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின்”*[5]

**பெ. திருமொழி - 1789.**

இப்பாடல் வாடைக் காற்றானது தன்னுள் எழும் காம உணர்வை மிக்குவிக்க ஆற்றமாட்டாளாய் தலைவி தன் தலைவன் இருக்கும் திருக்குறுங்குடிக்கே என்னை கொண்டு சேருங்கள் என்று தோழியிடமும், தாயிடமும் கூறுவதாக அமைந்திருக்கிறது. இதுவும் அகமரபில் புதுமையானது ஆகும்.

அகப்பாடல்களில் தலைவனைப் பிரிந்த தலைமகளின் நிலை கண்டு தோழி கூற்று நிகழ்த்துவதாகவே பெரும்பாலும் பாடல்கள் இடம் பெற்றிருக்கும் இங்கு பிரிவாற்றாமையினால் தலைவியே தன்நிலையை விவரிக்கின்றாள். இவ்விவரிப்பில் தலைவனுக்கும் தலைவிக்குமிடையே நிகழ்ந்த அனுபவத்தைப் புறத்தார்க்கு வெளிப்படுத்த கூடாது எனும் அகமரபுக்கு மாறுபட்ட நிலையில் புதிய வெளிப்பாட்டை பதிவு செய்கிறார்.

*“கனம்செய் மாமதிள் கணபுரத்த வானொடும்*

*கனவிலும் அவன் தந்த*

*மனம்செய் இன்பம் வந்து உள்புக வெங்கி*

*என்வளை நெக இருந்தோனை”*[6]

**பெ. திருமொழி - 1696**

என்ற பாடலில், கனத்த பெரிய மதிலையுடைய திருகண்ணபுரத்தில் இருப்பவனோடு கூடி கனவில் அவள் கொடுத்த மனத்தின் இன்பம் என்னுள்ளே புகுந்தால் நான் அஞ்சி என்னுடைய கைவளைகள் கழறும்பழ இருக்கின்றேன் என்ற பொருள்பட அமைந்திருக்கிறது.

மேலும் ஒரு பாடலில் தலைவனது உருவ வெளிப்பாட்டினால் காமுறும் தலைவி தோழியிடம் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

*“என்னையும் நேக்கி என் அல்குலும் நோக்கி*

*ஏந்து இளங் கொங்கையும் நோக்குகின்றார்*

*அன்னை என் தோக்கும் என அஞ்சுகின்றேன்*

*அச் சொ ஒரு அழியவா”*[7]

**பெ. திருமொழி - 1758**

இப்பாடலில் அமுக்கி வைக்கப்பட்ட பெண்ணின் அன்பு உணர்வு மடை திறந்து பொங்கும் நிலையை உணரலாம்.

**மடலேறலில் புதுமை:**

காதலில் ஏமாற்றமுற்ற தலைவன் தன்னைத் தானே வருத்திக் கொண்டு உயிர்விடத் துணிவதாகப் பாடும் அகவிலக்கியத்துறைக்கு மடல் என்று பெயர். இதனை உலாமடல் என்றும் அழைக்கலாம் பனை மடல்களால் குதிரை வடிவாகச் செய்து அதன் மேல் இருந்து தன் காதலியின் உருவத்தைத் தீட்டிய படத்தை ஏந்தி ஓர் நடுவே நின்று அழியத்துணிவதாய் பாடும் கற்பனைத்துறைக்கு மடல் என்று பெயர்.

இவ்வாறு மடல் ஏறுவது ஆண்களுக்கே உரியது. பெண்களுக்குப் பொருந்தாது என்பதை தொல்காப்பியம்

*''எத்தினை மருங்கினும் மகடூஉ மடன்மேல்*
*பொற்புடை நெறிமை இன்மையான''*[8]

**(தொ.பொ.அ. 35)**

என்று உணர்த்துகின்றது. மடலேறுதல் பெருந்திணைக்கு உரியது என்றும் வரையறுப்பர்.

சங்க அகத்திணைப் பாடல்களில் பதின்மூன்று பாடல்கள் மடல் துறையைச் சார்ந்தது இதில் ஐந்திணைச் சார்ந்த பாடல்கள் ஒன்பது. பெருந்திணை சார்ந்த பாடல்கள் நான்கு. ஐந்திணை மடலுக்கும், பெருந்திணை மடலுக்கும் நுட்பமான வேறுபாடுண்டு. 'மடல்மாஏறுவேன்' என்று வானவில் சொல்லுவது ஐந்திணைக்குரியது. அவ்வாறின்றி மடல் மேல் ஏறியே காட்டும் செய்கை பெருந்திணைக்குரியது. இதனை 'ஏறிய மடற்திறம்' என்றார் தொல்காப்பியர்.

பெண்கள், கடல் போன்ற காமத்தில் வருந்தினாலும் மடல் ஏறமாட்டார்கள். இத்தகைய பெண் பிறவியே சிறப்புக்குரியதாகும் என்பதை,

*''கடலன்ன காமம் உழந்தும் மடலெறாப்*
*பெண்ணின் பெருந்தக்கது இனம்''*

**குறள் – 1137**

என்ற குறள் தெளிப்படுத்துகிறது. பெண்கள் மடலெறலாகாதெனும் பண்டைய மரபை பின்பற்றி திருமங்கையாழ்வரும்,

*''அன்ன நடையார் அலரேச ஆடவர் மேல்*
*மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும்*
*தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனையாம்''*[10]

**பெ. திருமொழி – 76, 78**

என்று பெரிய திருமடலில் தலைவி கூற்றாக குறிப்பிடுகிறார். அதில் தென்னுரை என ஆழ்வார் குறிப்பிடுவது தமிழ் வழக்கையே எனலாம் ஆயினும், தாம் எழுதிய சிறிய திருமடல், பெரிய திருமடல் எனும் இருமடல்களிலும் பெண்கள் மடலேறுவதாக அக மரபு மீறிய புதுமையை செய்கிறார்.

*''தாரானை, தமரை போல் கண்ணானை எண்ணருஞ்சீர்ப்*
*பேர் ஆயிரமும் பிதற்றி, பெருந்தெருவே*
*ஊரார் இகழினும் ஊராவு ஒழியேன் நான்*
*வார் ஆர்பூம் பெண்ணை மடல்''*[11]

**(சிறிய திருமடல் 17-20)**

இதில் திருப்பெயர்கள் ஆயிரம் சொல்லிப் பிதற்றிப் பெருந்தெருக்களில் ஊரார் என்னைப் பழித்தாலும் நான் பெரிய அழகிய பனை மடலைக் கொண்டு மடலூர்வேன் என்கிறார்.

மேலும் நூலின் பயனாக கூறப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றுள் இன்பத்தை மட்டுமே ஏற்றிப் பாடுகிறார். இதுவும் பெரிய, சிறிய திருமடல்களின் தனிச் சிறப்பாகும்.

*''........ இதுவென்றே*
*அன்ன அறத்தின் பயன்ஆவது, நன்பொருளும்*
*அன்ன திறத்ததே; ஆதலால் காமத்தின்*
*மன்னும் வழிமுறையே நிற்றும் நாம்''*[12]

**(பெரிய திருமடல் 21-24)**

இப்பாடலில் வரும் தலைவி, கருத்துப்படி அறமும் பொருளும் இன்பத்துள்ளேயே அடங்கிவிடுகின்றன. இன்பம் என்னும் பொருளை அடைந்தவர் எவரோ அவரே அறத்தையும் பொருளையும் அடைந்தவராவார் என்கிறார்.

**முடிவுரை:**

திருமங்கையாழ்வார் தன்னைப் பெண்ணாகவும், இறைவனைத் தலைவனாகவும் பாவித்து சங்க அக மரபுகளை பின்பற்றி பாடியுள்ளார். அவற்றில் சில புதுமைகளை புகுத்தியுள்ளார். அறத்தோடு நிற்றலின்போது தலைவி தன்னுடைய காதலை நற்றாயிடமும் வெளிப்படுத்துவதோடு தலைவனை காண அழைத்துச் செல்லுமாறு நற்றாயிடமும் தோழியிடமும் கேட்டுக் கொள்கிறாள். மேலும் தலைவனுடன் தனக்கிருந்த அன்புறவை வெளிப்படையாக பேசுகிறாள். அப்பொழுது தான் அடக்கி வைத்திருந்த காம உணர்வு மடை திறந்தார் போன்று வெளிப்படுகிறது. இது அகப்பொருள் புதுமை வாய்ந்தது.

ஆண்கள் மட்டுமே காதலை வெளிப்படுத்தும் உரிமை அக மரபாக இருந்துள்ளது. ஆண், பெண் பால் வேறுபாடின்றி காதலைப் பெண்களும் வெளிப்படுத்தலாம். காதலை அடைய பெண்களும் மடலேறலாம் என்ற புதிய புரட்சியான கருத்தை சிறிய திருமடல், பெரிய திருமடல் வழியே பதிவு செய்துள்ளார்.

திருமால் மீது கொண்ட கட்டுப்பாடற்ற பக்தியுணர்வை தலைவி காதல் மொழிகளாக வெளியிடுகிறபோது அக மரபை கடந்து புதிய காதல் வெளியிட்டு சிந்தனையை பதிவு செய்துள்ளார் எனலாம்.

**பயன்பட்ட நூல்கள்:**

1. கோ.கோ. வேங்கட்ராமன், தமிழ் இலக்கிய வரலாறு.

2. தொல், பொருளதிகாரம்.

3. நாலாயிர திவ்விய பிரபந்தம், வ. கமலக்கண்ணன்

4. திருக்குறள், திருவள்ளுவர்.

# ஏழாம் வேற்றுமை: தொல்காப்பியம் முதல் தற்காலம் வரை

**முனைவர்**
**கி. சங்கரநாராயணன்**
*உதவிப் பேராசிரியர்*
*சங்கப்பலகை,*
*தமிழ் மொழித்துறை,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*மெரினா வளாகம்,*
*சென்னை – 600 005.*

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தென்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம், தென்னூல், தமிழ்நூல், தமிழ்க்காப்பு இயம் போன்ற இலக்கண நூற்கள் உணர்த்தும் ஏழாம் வேற்றுமையினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இடவேற்றுமை என்று அழைப்பர், இவ்வேற்றுமை உருபு இடம் என்ற ஒரு பொருளில் தான் வரப்பெறும். தொல்காப்பியம் முதலாக அனைத்து இலக்கண நூற்களும் கண் என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியம் (தொல். 81–82), ஏழாம் வேற்றுமை உருபு கண் என்கிறது. இவ்வேற்றுமை வினைசெய் இடம், நிலம், காலம் என்பவற்றை ஏற்று வரப்பெறும் என்கிறது. கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், பின், சார், அயல், புடை, தேவகை, முன், இடை, கடை, தலை, வலம், இடம் என்ற பத்தொன்பது உருபுகளைக் குறிப்பிடுகின்றது.

*“ஏழா குவதே*
*கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி*
*வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்*
*அனைவகைக் குறிப்பின் தோன்றும் அதுவே”*

**(தொல். சொல். 81)**

*“கண்கால் புறமகம் உள்ளுழை கீழ்மேல்*
*பின்சார் அயல்புடை தேவகை யெனாஅ*
*முன்னிடை கடைதலை வலமிடை மெனாஅ*
*அன்ன பிறவும் அதன்பால் என்மனார்”*

**(தொல். சொல். 82)**

வீரசோழியம் (வீர. 7) உருபுகளாகக் கே, உழை, வயின், பக்கல், உழி, இல், கண், சார் என்பதைக் குறிப்பிடுகின்றது.

*“ஆனாளாரார்க எதுவினவாறிற் குடைப்பின்குவ்வேல்*
*நூனாடியபத மாநுவலாதார மேழினிற்கே*
*தானாமுழைவயின் பக்கலுழியில்கண் சார்பிறவும்*
*வானாமலிநின்ற வற்றில்வரூஉமைந் தவதியிலே”*

**(வீரசோழியம். வேற்றுமைப்படலம். 7)**

*“அதுஎன்ப தாறாம் உருபாம் இதன*
*திதுவென் கிழமையிரண் டெய்தும் – விதிமுறையாற்*

*கண்ணென்ப தேழாம் உருபாகுங் காலநில*
*நண்ணும் வினையிடத்து நன்கு''*

**(நேமி. 42)**

நன்னூல் (நன். 301-302), ஏழாம் வேற்றுமையினை இடப்பொருள் வேற்றுமை என்கிறது. அறுவகைப் பெயர்களும் தற்கிழமை மற்றும் பிறிதின்கிழமை என்னும் இரண்டிற்கும் இடமாக நிற்கும் என்கிறது. கண், கால், இடை, தலை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அளை, தேம், உளை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் என்ற இருபத்தி ஏழு உருபுகளைக் குறிப்பிடுகின்றது.

*''ஏழன் உருபுகண் ஆதி யாகும்:*
*பொருள்முதல் ஆறும் ஓரிரு கிழமையின்*
*இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப''*

**(நன்னூல். சொல். 301)**

*''கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்*
*முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்*
*பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி*
*உள்அகம் புறம்இல் இடப்பொருள் உருபே''*

**(நன்னூல். சொல். 302)**

இலக்கண விளக்கம் (இல. வி. 204), இவ்வேற்றுமை உருபு பொருள், இடம், காலம் என்னும் மூவகைக் குறிப்பின் கண் தோன்றலாம் என்கிறது. மேலும், தொல்காப்பியம் குறிப்பிட்ட பத்தொன்பது உருபுகளையும் குறிப்பிடுகின்றது.

*''ஏழ னுருபு கண்ணே யதன்பொருள்*
*வினைசெய் யிடத்தி னிலத்திற் மன்றியுங்*
*னனைவகைக் குறிப்பிற் றோன்றலா மன்றியுங்*
*கண்கால் புறமக முள்ளுரழ கீழ்மேல்*
*பின்சா ராயல்புடை தேவகை யெனாஅ*
*முன்னிடை கடைதலை வலமிட மெனாஅ*
*வன்ன பிறவும் மதன்பால வென்மனார்''*

**(இ.வி. சொல். 204)**

தொன்னூல் விளக்கம் (தொ.வி. 62), பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப் பெயர்களும், தற்கிழமை பிணுதின் கிழமைப் பொருளில் வரும் என்கிறது.

*''ஏழன் உருபு கண் ஆதி ஆகும்*
*பொருள் முதல் ஆறும் ஓர்இரு கிழமையின்*
*இடன்ஆய் நிற்றலின் இதன் பொருள் என்ப''*

**(தொ. வி. சொல். 62)**

முத்துவீரியம் (மு. வி. 526-525), நன்னூல், தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணம் அமைக்கின்றது.

*''கண்முத லியனவே ழனதுரு பாகும்''*

**(முத்துவீரியம். 526)**

*''அதன்பொருள் பொருண்முல லாறிரு கிழமையின்*
*இடனாய் நிற்ப தென்மனார் புலவர்''*

**(முத்துவீரியம். 527)**

சுவாமிநாதம் (சு.ந. 43), இவ்வுருபு பொருள் முதலாக ஆறையும் கருத்தாவின் இடனாக ஏற்று வினையையும் பெயரையும் கொண்டு முடியும் என்கிறது.

*''கூறும்ஐந் தாம்உருபு இல்இன்னாம், ஏதுஎல்லை*
*கொளுநீக்கம் உவமைஏற் பதுவினைபோ் முடிவாம்:*
*ஆறுஅதுஆது, அவ், வுடைய, உருபுஏற்குங் கருத்தன்*
*அவற்றினிற்றற் கிழமைசினை, குணம், தொழில்லாய்ப்*
*பிறிதின்*
*பெறுபொருள், இடம், கால மாய்ச், சம் மந்தப்போ்*
*பெற்றுமுடித் திடும்: ஏழன் உருபுகண், அப் பெயராம்*
*ஏறுபொருண் முதலறுபேர் கருத்தன்இட னாகி*
*ஏற்கும்வினை பெயர்முடிவாம், எட்டுமாம் விளியே''*

**(சுவாமிநாதம். 43)**

தமிழ்நூல் (தமிழ். 79), இல், கண், இடம், பால் முதலிய உருபுகளைக் குறிப்பிடுகின்றது.

*''ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உருபுகள்*
*தனிஇல், கண், இடம், பால் முதல் இடக்குறி''*

**(தமிழ்நூல். 79)**

தென்னூல் (தென். 60-61), இவ்வேற்றுமை பல்வகை இடம், வினைநிகழ்ச்சி, இருவகைக்காலம் ஆகியவற்றை இடனாகக் கொண்டு பிறக்கும் என்கிறது. கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், முன், பின், அயல், புடை, கடை, இடை, தலை, வாய், வலம், இடம், முதல், சார், தேஎம், திசை, உழை, வழி, உழி, உளி, இல், வயின் என்ற இருபத்தியெட்டு உருபுகளைக் குறிப்பிடுகின்றது.

*''கண்ணெனப் பெயரிய ஏழா குவதே*
*பல்வகை நிலம்வினை நிகழ்வொடு காலம்*
*இடனாய் நிற்றல் அதன்பொருள் என்ப''*

**(தொன்னூல். 60)**

தமிழ்க் காப்பு இயம் (த.கா. இ. 125-127), இல் என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் குறிப்பிடுகின்றது. இவ்வேற்றுமை பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றிலும்

பலவகையான குறிப்பிலும் வினை நிகழுமிடத்துத் தோன்றும் என்கிறது. இடப்பொருள் உணர்த்தும் சொல்லுருபுகளாகக், கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல், முன், பின், அயல், புடை, வலம், இடம், மிசை, சார், வழி, வயின், வாய், தலை, இடை, கடை, பாடு, அளை, ஊழி, திசை, பால் என்ற இருபத்தியேழினைக் குறிப்பிடுகின்றது. ஊடே, இடையே, நடுவே என்பனவற்றை இடப்பொருளில் வரும் கூட்டுச்சொற்கள் என்கிறது.

*''ஏழாகுவதே*
*இல்லெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி*
*பொண்முத லாறினும் பல்வகைக் குறிப்பினும்*
*தொழிற்படு இடத்துத் தோன்றும் அதுவே''*

***(த.கா.இ. 125)***

கன்னடத்தில் ஒள் என்பது உள் என்பதன் திரிபாகும். தெலுங்கில் அது லோ என்ற வடிவில் உள்ளது. புதுக்கன்னடத்தில் அல்லி, இல்லி என்பவை உள்ளன. கால்பொருளைக் காலப்பெயர்களில் பின் உருபுகள் வரும் நிலையிலும், இடப்பொருளைப் பிறபெயர்களில் பின்னால் வரும் நிலையிலும் உணர்த்துகின்றன என்று கொண்டு, ஒரே வேற்றுமையின் இரண்டு பொருள்களாகக் கொள்ளலாம் என்கிறார் ச. அகத்தியலிங்கம் (1979: 253)

கண், கால் போன்றவற்றைப் பெயர்கள் எனக்குறிப்பிடுகிறார் தெ.பொ.மீ (1977: 143). ஆன், அத்து என்பன சாரியைகளாயினும் அவை ஏழன் பொருளில் வரும் உருபுகளாகவும் கொள்ளலாம் என்கிறார் செ. வை. சண்முகம் (த.வேல்மயில், 2010: 238).

க என்னும் கிளவியைக் கண், கால் முதலிய சொல்லுருபுகளோடு சேர்த்துக் கொண்டு ஏழாம் வேற்றுமையாகக் கொள்ளலாம் என்கிறார் பொற்கோ (1973: 98). இக்காலத் தமிழில் இடவேற்றுமை என்பது தொழில் நிகழும் இடத்தையும், காலத்தையும் குறிப்பிடுவதோடு வேறுபல பொருள்களையும் குறிக்கிறது. இடவேற்றுமை என்பது தொழில் நிகழும் இடம், காலம் ஆகியவை தவிர, உடைமை, நிலைக்களம் முதலிய பொருள்களையும் குறிக்கலாம் என்பர் கு. பரமசிவம் (1983: 175)

ஏழாம் வேற்றுமை பொருள் உணர்த்தும் தன்மையின் அடிப்படையில் இடவேற்றுமை என்பர். இக்காலத்தமிழில் இடவேற்றுமை என்பது தொழில் நிகழும் இடத்தையும் காலத்தையும் குறிப்பிடுவதோடு வேறுபல பொருள்களையும் குறிக்கிறது. தற்காலத் தமிழில், ஏழாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகளான இடம், உள் போன்றன பிறமொழிச் சொல்லுடன் இணைந்து அதேப் பொருளினைத் தருவது குறிப்பிடத்தக்கது.

(டீச்சர் + இடம்), (செட்டு + குள்), (கார் + குள்), (பேக் + குள்)

ஏழாம் வேற்றுமை உருபான கண்ணும், அதனுடைய பொருட் பாகுபாடுகளும் தொல்காப்பியம் முதல் தற்கால இலக்கண நூலான தமிழ்க் காப்பு இயம் வரையில் பொருண்மை நிலையில் சிற்சில மாற்றங்கள் பெற்று வந்துள்ளதை அறியலாம். பிறமொழிச்சொல்லுடன் இடம், உள் போன்ற ஏழாம் வேற்றுமையின் பொருட்பாகுபாடுகள் இணைந்து தற்காலத் தமிழில் மரபிலக்கணத்திற்கு உணர்த்திய அதே பொருளையே தருவது குறிப்பிடத்தக்கது. காலமாற்றம், வளர்ச்சியினால் இலக்கண நூற்கள் தங்களது இலக்கணக் கோட்பாடுகளில் மாற்றத்தினையும் வளர்ச்சியினையும் பதிவுசெய்வது காலத்தின் தேவையாகும். அவ்வகையில் ஏழாம் வேற்றுமைக் கோட்பாட்டு ஆய்வினைத் தொல்காப்பியம் முதலாகத் தற்கால இலக்கண நூலான தமிழ்க் காப்பு இயம் வரையில் நிறுத்திவிடாமல், அதையும் தாண்டி தற்காலத் தமிழில் இக்கோட்பாட்டினைப் பொருத்திப் பார்த்து அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினையும் வளர்ச்சியினையும் பதிவு செய்வது மொழியியல் தொடர்பான ஆய்வுகளுக்கும் இலக்கணத் தொடர்பான பேராய்வுக்கும் பெரிதும் உதவும் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**துணைநின்ற நூல்கள்:**


1. மரபிலக்கண நூற்களும் உரைகளும்.
2. அகத்தியலிங்கம், ச., 1979, மொழியியல் சொல்லியல், பெயரியல், அனைத்திந்திய தமிழ் மொழியியற்கழகம், அண்ணாமலை நகர்.
3. பரமசிவம், கு., 1983, இக்காலத் தமிழ்மரபு, அன்னம் (பி) லிட். சிவகங்கை.
4. பாலுசாமி, சு., 2007, தொல்காப்பிய வேற்றுமைக் கோட்பாடு, திருக்குறள் பதிப்பகம், சென்னை.
5. பொற்கோ, 1973, இலக்கண உலகில் புதிய பார்வை – தொகுதி 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை.
6. மீனாட்சிசுந்தரம், தெ.பொ., 1977, தமிழ் மொழி வரலாறு, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.
7. வேல்மயில்,த., 2010, நன்னூலும் பின்னைய இலக்கண நூல்களும், காவ்யா பதிப்பகம், சென்னை.

# ஜே.எம்.சாலியின் ‘மஞ்சள் ரோஜா’ வில் உவமை நடை

**வ. முகம்மது யூனுஸ்**
*இணைப்பேராசிரியர்*
*முதுகலை & தமிழாய்வுத்துறை*
*ஜமால் முகமது கல்லூரி*
*(தன்னாட்சி)*
*திருச்சிராப்பள்ளி - 20.*

**முன்னுரை**

மேலைநாட்டாரிடமிருந்து கிடைத்த இலக்கிய வகைகளுள் ஒன்று புதினம். இது மக்களிடம் தொடர்கதையாகவும், நாவலாகவும், புகழ்பெற்று இலக்கிய வடிவமாகத் திகழ்கிறது.

**நடை - விளக்கம்**

‘நடையென்பது ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாகவிருக்கு வெளிப்பாட்டு மொழிப்பாங்கே அது’ என்று கூறுகிறார் முர்ரே.[1]

**உவமை நடை**

புதினத்தில் உவமை நடை என்பது ஆசிரியனைத் தனித்து இனம்காட்டுவதாக அமைந்து, படைப்பை வெற்றி பெறச் செய்கிறது எனலாம். பொருளின் இயல்பான தன்மையினை அறிந்து தெளிதற்கு உவமைகள் உதவுகின்றன. பொருளாவது அல்லது கருத்தாவது எவ்வளவு சிறிதாயினும் உவமை அதனைப் பெரிதாக மிகைப்படுத்தி நன்கு விளக்கம் தரும் என்பர்.[2]

உவமை மக்களின் அன்றாடப் பேச்சு வழக்கில் காணப்படுகின்ற ஒன்று. உவமை இன்றிச் சொல்வதைவிட ஒன்றோடு ஒவமித்துக் கூறும்போது பொருள் சிறப்படைகிறது. ஆகவே ஒரு பொருளோடு மற்றொரு பொருளினை ஒப்பிட்டுக் கூறும்போது அப்பொருளினுடைய வண்ணம், வடிவு, தொழில், பயன் ஆகிய இயல்புகளைப் புலம்படும்படிச் செய்யும் ஆற்றல்மிக்க புலப்பாட்டு நெறி உவமையாகும்.

‘பொருத்தமான இடத்தில் சரியான உவமைகளைப் பயன்படுத்திக் கதையை அமைப்பதும் ஒரு கருத்து வெளிப்பாட்டு உத்தியே’ என்று அ.ஆலிஸ் கூறுகிறார்.

**ஜே.எம்.சாலி - அறிமுகம்**

தமிழ்ப்புதின உலகில் தனித்ததோர் இடத்தைப் பெற்றவர். ஜே.எம்.சாலி என்ற ஜே. முஹம்மது சாலிஹ். இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள இரவாஞ்சேரி என்னும் கிராமத்தில் 1931 ஆம் ஆண்டில் பிறந்தார். தமது சிறுவயதிலேயே ‘கண்ணன்’ என்ற சிறுவர் இதழில் எழுத ஆரம்பித்துவிட்டார்.

இவர் 1964 ஆம் ஆண்டில் சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் தமிழ் முரசு என்ற நாளிதழின் துணையாசிரியராகப் பொறுப்பேற்றார். 1971 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை ஆனந்த விகடனில் துணையாசிரியராகப் பணிபுரிந்து 300 சிறுகதைகளையும் நாவல்களையும் 19 வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். தற்போது சிங்கப்பூரில் வாழ்கிறார்.

**மஞ்சள் ரோஜா**

ஜே. எம். சாலியின் 'மஞ்சள் ரோஜா' என்னும் நாவல் சிங்கப்பூரைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. எரிபொருள் ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானி மதன்குமார், எண்ணெய்க்குப் பதிலாக மலிவான புதிய எரிபொருளைக் கண்டுபிடிக்கிறார். எரிபொருள் ஆராய்ச்சி பற்றிய இரகசியங்களைப் பேரம் பேசுகிறது ஒரு கடத்தல் கும்பல். விஞ்ஞானியின் மனைவி தீபா, கடத்தல் குழுவினரிடம் சிக்கிக் கொள்கிறாள். மதன்குமார் கடத்தப்படுகிறார். மஞ்சள் ரோஜா தீபா தற்கொலை செய்து கொள்கிறாள்.

**மஞ்சள் ரோஜா – உவமை நடை**

இந்நாவலில் 84 உவமைகள் கூறப்படுகின்றன.[4] ஜே. எம். சாலியின் எழுத்துரை நடையில் 79 உவமைகளும் பாத்திரங்களின் பேச்சில் 5 உவமைகளும் காணப்படுகின்றன.[5] இரட்டை உவமைகள் 8 இடங்களில் பொருத்தமாகக் கூறப்பட்டுள்ளன.[6]

**ஜே.எம்.சாலியின் எடுத்துரையில் உவமைகள்**

மஞ்சள் ரோஜாவின் கதையை எளிய நடையில் எடுத்துரைக்கிறார் ஜே.எம்.சாலி. உவமை விரவிய நடை இவரது எழுத்தின் தனிச்சிறப்பாகும்.

மலர், பூச்செண்டு, மலர்க்கொத்து, பூங்கொடி ஆகியவற்றைப் பின்வருமாறு உவமித்துக் கூறுகிறார்.

**மலர்**

மதன்குமாரின் மனைவி தீபாவை,

*''சிவப்பு ரோஜாவாக பட்டு மெருகுடன் பல நேரங்களில் கணவர்*
*முன் தோன்றினாள்'' (ப.7)*

என்று எடுத்துரைக்கையில் உவமை நடை வெளிப்படுகின்றது.

*'அந்த நேரம், மலர்களும் நீராடிய பெண்களைப் போலத்தான் நிமிர்ந்து நிற்கின்றன'*

***(ப. 19)***

*மழைக்காற்றில் ஆடி நடுங்கும் ஆர்க்கிட் மலர்போல் அவள் வசமிழந்து நின்றிருந்தபோது....'*

***(ப. 2)***

*'அந்த இரவில் ஒரு சூரியகாந்தி பூத்து விரிந்ததுபோல் அவர் முகத்தில் சுடர்'*

***(ப. 49)***

சூரியகாந்திதான் சூரியனையே சதா பார்த்துக் கொண்டிருக்கும்; அந்த மலரைப் போலத்தான் நீயும், என்னையே நெஞ்சில் நிறைத்து வைத்திருந்த உன்னை நான் புரிந்து கொள்ளாமல் போய்விட்டேன்' (ப. 60)

'அத்தி பூத்த மாதிரி எப்பொழுதாவது இங்கே வருகிறாய்'

**(ப. 56)**

*மதன்குமாரின் கதை இத்தனை விரைவில், கொடியிலிருந்து மலரைக் கிள்ளுவதுபோல் சடுதியில் முடிந்துபோய் விட்டதா?*

***(ப. 122)***

*'அழகிய ஆர்க்கிட் மலரைப்போல ஓர் அழகிய பெண்ணின் வாழ்க்கை வாடி உதிர்ந்து போய்விட்டது'*

***(ப. 234)***

இவ்வாறு சிவப்பு ரோஜா, சூரியகாந்தி, ஆர்க்கிட் மலர் ஆகியவை ஜே.எம்.சாலியின் எழுத்து நடையிலும், பாத்திர நடையிலும் உவமைகளாகப் பயின்றுள்ளன.

**பூச்செண்டு**

*செடியிலிருந்து அப்பொழுதான் பறித்தெடுத்த புத்தம்புது பூச்செண்டு போல் குளித்து முடித்துவிட்ட மதர்ப்போடு வருவாள்*

***(ப. 21)***

**மலர்க்கொத்து**

*வாடிய ஆர்க்கிட் மலர்க்கொத்து போல் மஞ்சத்தில் தீபாவின் உடல்*

***(ப. 228)***

**பூங்கொடி**

*'மதன்குமாரின் மீது மாறாத அன்பும் மதிப்பும் புதுத்தளிர்விட்ட வசந்தகால பூங்கொடியாகத் தழைத்துச் செழித்து நிற்கின்றன'*

***(ப. 120)***

**உவமை நடையில் 'முள்'**

ஜே. எம். சாலியின் எழுத்துரைகளில் 'முள்' நான்கு இடங்களில் உவமிக்கப்பட்டுள்ளது.

*'குற்றவுணர்ச்சி முள்ளாகத் தைத்தது'*

***(ப. 57)***

*'காலில்' குத்திய முள்ளைக் கஷ்டமில்லாமல் அப்புறப்படுத்திவிட்டது போன்ற திருப்தி*

***(ப. 64)***

*'முள் குத்தியது போல் சுள்ளென்று ஒரு நினைவு'*

***(ப. 88)***

*'முள்ளின் மேல் நடப்பதுபோல் வதைபட்டுக் கொண்டிருந்தாள்'*

***(ப. 92)***

**உவமைகளில் தீ**

''தீபாவை அந்தக் கடற்கரையில் டிரைவருடன் பார்த்தபோது என் உடம்பெல்லாம் தீப்பற்றிக் கொண்ட மாதிரி இருந்தது'' (ப. 39-40). என்று சங்கர் தீபாவின் கணவரிடம் கூறுகிறார். இவ்வுவமை வாயிலாக சங்கரின் வேதனையை ஆசிரியர் சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

*'சங்கர் ஊதிவிட்ட ஒரே ஒரு சந்தேகப் பொறிதான் தறிகெட்டு தீயாகப் பரவியது'*

***(ப. 62)***

*'இதற்கெல்லாம் மேலாக புதிய கவலையும் பீதியும் நெஞ்சில்பட்ட தீப்பொறியாக தீபாவைச் சூடுபடுத்துகின்றன'.*

***(ப. 74)***

*'இதய நெருப்பில் நெய்வார்த்த மாதிரி இருந்தது அது'.*

***(ப. 157)***

இவ்வாறு தீ, தீப்பொறி, இதய நெருப்பு ஆகிய சொற்கள் திரும்பத் திரும்ப ஜே.எம். சாலியின் நடையில் இடம்பெற்றுள்ளன.

**உவமைகளில் சிற்பமும் சிலையும்**

'இருபத்தைந்து வயதில் பருவமெருகு குன்றாமல் கனவுச் சிற்பமாக நிற்கிறாள் தீபா'.

(ப. 11)

*'முப்பத்தைந்து வயதில் முழுமைச் சிற்பம் போல் இருக்கிறாள் டாக்டர். லீலா'*

***(ப. 76)***

*'சித்தப்பிரமைக்கு ஆளான மாதிரி சிலையாகிப் போனாள்'*

***(ப. 119)***

இவ்வாறு சிற்பமும், சிலையும் உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

**தொடர்கதையும் மர்மக்கதையும்**

*'முடியாத தொடர்கதைபோல் துண்டிக்க முடியாத உறவும் தொடர்பும் இருக்கிறது'*

***(ப. 86)***

*'தாஸ் - தீபா, டெலிபோன் உரையாடல் ஒரு மர்மக்கதைபோல் மதன்குமாருக்குத் தோன்றியது'*

***(ப. 88)***

**பழமும் சுளையும்**

'தழை மறைத்த பழம்போல் முகத்தைக் காட்டியும் காட்டாமலும் மஞ்சத்தில் அவன் அமர்ந்திருக்கிறான்'. (ப. 82)

'மங்குஸ்தீன் சுளை போன்ற தூய பெண்மையும் புனிதமும் நெஞ்செல்லாம் விரவுகின்றன'. (ப. 53)

**உவமைகளில் விலங்குகள்**

மஞ்சள் ரோஜா புதினத்தில் நாய், பாம்பு, சிங்கம், ஆடு, மான் ஆகிய விலங்குகள் உவமைகளில் இடம்பெற்றுள்ளன.

**ஆடு**

*'தாஸ் ஒரு வெள்ளாடு மாதிரி'*

***(ப. 42)***

*'அவர் நிச்சலனமாக அசைபோடும் வெள்ளாடு மாதிரியல்லவா இருக்கிறார்'*

***(ப. 75)***

**நாய்**

'தூக்கத்தில் அல்லவா வேட்டை நாய் போல் விரட்டிக் கொண்டு வருகின்றன. அந்த நினைவுகள்'

**(ப. 85)**

*‘வேட்டை நாய் போல் என்னை விரட்டி வந்தான்’*

***(ப. 205)***

**மான்**

‘வலையில் விழுந்த மானின் நிலையில் இப்பொழுது இருக்கிறேன் மஜீது...’ (ப. 170) என்று தாஸ் கூறுவதாக உவமை இடம்பெற்றுள்ளது.

**பாம்பு**

*‘காலைக்கவ்விய மலைப்பாம்பு போல் ஒரு பெரிய பிரச்னை இருக்கிறது’*

***(ப. 86)***

*‘கையைச் சுற்றிய பாம்பு மாதிரி அது அவளை இதோ இதோ என்று பயமுறுத்துகிறது’*

***(ப. 191)***

**சிங்கம்**

*‘மிடுக்காக யாருக்கும் மிரளாத சிங்கம் போல் தோற்றம்’*

***(ப. 110)***

இவ்வாறு விலங்குகளைத் தம் உரைநடையில் பயன்படுத்தி எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

**பறவைகள்**

ஜே.எம். சாலியின் உவமை நடையில் பறவைகளும் சுட்டப்பட்டுள்ளன.

*‘தினந்தோறும் குளவியாய்க் கொட்டி பெற முயன்றிருக்கிறார்கள்’*

***(ப. 225)***

*‘குருவி குஞ்சாக சிறகடித்து ஒடுங்கிப் போகிறதே உடல்...’*

***(ப. 102)***

*‘அம்புபட்ட பறவையைப் போல இருக்கிறாள்’*

***(ப. 109)***

*‘உல்லாசமாகச் சிறகடித்து சுதந்திரமாக உயர உயரப் பறந்து திரிந்த பறவை, சிறகொடிந்து விழுந்த மாதிரியல்லவா ஓய்ந்து போயிருக்கிறாள்’ (ப. 188)*

**வானமும் நிலவும்**

‘தொடுவானத் தோற்றமும் கானல் நீரும் ஒன்றுபோலத்தான். அதற்கும் தன் வாழ்க்கைக்கும் வித்தியாசம் இல்லை என்று ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார் மதன்குமார்’

***(ப. 106)***

*‘வழக்கமாக இந்த நேரங்களில் நிலவுபோல் பளிச்சென்று விளக்கொளி பரவியிருக்கும் அவன் அறையில்’*

***(ப. 18)***

**இடியும் மின்னலும்**

*‘இடியும் மின்னலும் ஏக காலத்தில் தாக்கி தரையில் வீழ்த்திவிட்ட மாதிரி தவிப்பு’*

***(ப. 122)***

*‘மின்னல் போல் ஓர் எண்ணவெட்டு’*

***(ப. 45)***

**கருமேகம்**

*‘திடீரென்று கருமேகம் சூழ்ந்த மாதிரி டாக்டரின் முகத்தில் கலக்கம் கவிழ்ந்தது’*

***(ப. 179)***

**இயந்திரம்**

*‘புகழ் பெருகப் பெருக இயந்திரமாகிவிட வேண்டியிருக்கிறதே’*

***(ப. 79)***

*‘.... இயந்திரம்போல் இயங்கிக் கொண்டிருந்தார் என்றும் சொன்னார்’*

***(ப. 124)***

**பானம்**

*‘திரும்பத் திரும்ப அருந்தத் தூண்டும் ஓர் அற்புதமான பானம்போல் அத்தனை கவர்ச்சி’*

***(ப. 11)***

*‘உள்ளம் ஒட்டுகிறதோ இல்லையோ ஒருவகையில் தாகம் தீர்த்து வைக்கும் பானம்போல்தான் அவருக்கு அவள் இருந்து வருகிறாள்’*

***(ப. 36)***

இவ்வாறு மஞ்சள் ரோஜா புதினத்தில் பல இடங்களிலும் உவமைகள் ஆசிரியரால் கூறப்பட்டுள்ளன.

**இரட்டை உவமைகள் (உவமை அடுக்கு)**

கதைப்போக்கில் இரட்டை உவமைகள் ஆசிரியரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

*'எத்தனை நிறம்! எத்தனை வடிவம்! ரோஜாவைப் போல மல்லிகையைப் போல இனம்பிரிக்க முடியாத மலர்க்கூட்டம் அல்லவா!'*

**(ப. 19)**

*சொகுசான காரில் ஒரு வி.ஐ.பி. யைப் போல், – ஒரு சூப்பர் ஸ்டாரைப் போல அமர்ந்தபடி கனவுலகப் பயணம் செய்வது போல் பல இடங்களுக்குப் போய் வந்திருக்கிறாள்.*

**(ப. 22)**

*ஒரு ஹாலிவுட் நடிகரை நினைவுபடுத்துவது போல் நெடிய, கம்பீரமான தோற்றம் அவருக்கும், தேர்ந்த டிப்ளமேட் போல் அறிவுக்கலை படிந்த முகம்'*

**(ப. 33)**

*முப்பத்தைந்து வயதில் முழுமைச் சிற்பம்போல் மோகனமான சங்கீதம் போல்தான் இருக்கிறாள் டாக்டர் லீலா.*

**(பக். 76-77)**

*'இந்த ஆர்க்கிட் மலர்களைப்போல் முனுக்க வீழ்ந்து சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். காற்றோடு அவை தவிழ்ந்து விளையாடுவது போல் தானும் சுதந்திரமாக உலவி வரவேண்டும்.*

**(ப. 101)**

இவ்வாறு சில இடங்களில் உவமைகளை அடுக்கி, இரட்டை உவமைகளைப் பயன்படுத்தி கதைப்பாத்திரங்களின் உணர்வைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

**பிற உவமைகள்**

மஞ்சள் ரோஜா நாவலில் மேலும் பல உவமைகள் பின்வருமாறு இடம்பெற்றுள்ளன.

*– 'வெள்ளை யூனிபாரத்தில் டென்னிஸ் கோர்ட்டுக்குப் போகிற பெரிய இடத்துப் பிள்ளை மாதிரி அவன் தோன்றினான்'*

**(ப. 15)**

*– உடனே அவனிடம் பாடம் ஒப்புவிக்கிற மாதிரி ஒன்றுவிடாமல் சொல்லிவிட வேண்டுமோ?*

**(ப. 17)**

*– உடைந்த தேன் கூடு மாதிரி ஆகிவிட்டது*

**(ப. 27)**

*– இருவரும் ஒரு சமயத்தில் இரட்டையர்களைப் போல சுற்றித் திரிந்ததுண்டு*

**(ப. 44)**

*– இருட்டறையில் வண்ண மத்தாப்புக் கொளுத்தியது போல் கொஞ்ச நேரத்தில் எத்தனை ஒளி அவர் உள்ளத்தில்*

**(ப. 49)**

*– சீனப்பெண்களைப் போல் வெகு அழகாக இயல்பாக நோயாளிகளிடம் சீனமொழியில் பேசுவாள்*

**(ப. 50)**

*– இருட்டறையில் வண்ண மத்தாப்புக் கொளுத்தியது போல் கொஞ்ச நேரத்தில் எத்தனை ஒளி அவர் உள்ளத்தில்*

**(ப. 49)**

*– சீனப்பெண்களைப் போல் வெகு அழகாக இயல்பாக நோயாளிகளிடம் சீனமொழியில் பேசுவாள்.*

**(ப. 50)**

*– கசப்பை இனிப்பாக்கும் கை கண்ட ஒரு மருந்து போல இருந்தது லீலாவின் டெலிபோன் உரையாடல்*

**(ப. 62)**

*– வலியச் சென்று வலையில் சிக்கிக்கொண்ட மாதிரி ஆகிவிடாதா?*

**(ப. 67)**

*– குற்ற உணர்வு தார்க்குச்சியாய் குத்திக்கொண்டிருந்தது.*

**(ப. 72)**

*– பினாங்கு கொடிமலை ரயில் மாதிரி ஒரே பாதையில் பல்லைக் கடித்துக் கொண்டு பாதையைக் கவ்வியபடி ஏறுவதும் இறங்குவதுமான இந்த டாக்டரின் வாழ்க்கை இருக்கிறது.*

**(ப. 79)**

*– சாட்டையை சொடுக்குகிற மாதிரி ஒரு கேள்வியை கூறினால் போதும்*

**(ப. 87)**

*– கையும் களவுமாகப் பிடிபட்டவர்களைப் போல் இருவரும் நின்றார்கள்*

**(ப. 97)**

*– பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி தான்*

***(ப. 177)***

*– திரிந்து போன பாலைப்போல் ஆகிவிட்ட பிறகு வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்ள முடியுமா?*

***(ப. 233)***

**முடிவுரை**

ஜே.எம்.சாலி எழுதிய ரோஜா என்னும் நாவலில் ஏராளமான உவமைகள் இடம்பெற்று படிப்பவரை ஈர்க்கின்றன. போல, மாதிரி, ஆக போன்ற உவம உருபுகள் சாலியின் நடையில் விரவியுள்ளன. எடுத்துரையிலும் மாந்தர் உரையாடலிலும் மிகப் பொருத்தமான இடத்தில் மிகச் சரியான உவமைகளை ஆசிரியர் பயன்படுத்தியிருப்பது ஆற்றல்மிக்க புலப்பாட்டு நெறிக்குச் சான்றாக உள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப. 160. (சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், இரண்டாம் பதிப்பு, ஜூலை, 1975)

2. மா. இராமலிங்கம், புதிய உரைநடை: பண்பும் பயனும், ப. 90. (சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், மூன்றாம் பதிப்பு, ஆகஸ்ட், 1984).

3. அ. ஆலிஸ், ஹிமானா சையத்தின் சிறுகதைகள் ஓர் ஆய்வு, ப. 182 (சித்தார்கோட்டை, மல்லாரி பதிப்பகம், முதல் பதிப்பு, நவம்பர், 2001).

4. ஜே.எம்.சாலி, மஞ்சள் ரோஜா, பக். 7, 10, 11, 15, 17, 18, 19, 21, 22, 24, 27, 33, 36, 39-40, 42, 44, 49, 50, 53, 56, 57, 60, 62, 64, 67, 72, 74, 75, 76-77, 79, 82, 85, 86, 87, 88, 92, 97, 98, 101, 102, 106, 109, 110, 113, 119, 120, 122, 123, 124, 157, 170, 171, 177, 178, 179, 188, 191, 193, 205, 209, 215, 225, 228, 230, 231, 232, 233, 234, 235, 237, 239 சென்னை: அருணோதயம், இராயப்பேட்டை, முதற்பதிப்பு, ஜூலை, 1982).

5. மேற்படி, பக். 39-40, 56, 170, 178, 205.

6. மேற்படி, பக். 7, 19, 22, 23, 36, 76-77, 101, 231.

# ஆற்றுப்படை நூல்களில் தொழில்கள்

S. கனகராஜ்
முழுநேர
முனைவர்பட்ட ஆய்வாளர்,
புனித சிலுவை
தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி-2.

''ஆற்றுப்படை இலக்கியங்கள் தமிழரின் கொடை, மாட்சி, விருந்தோம்பல், மனிதநேயம், கலைத்திறம் போன்றவற்றை பறைசாற்றும் கருவூலங்கள்.

*''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்*
*ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்*
*பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்*
*சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்''*

**(தொல், பொருள்.நூற் 1037)**

தொல்காப்பியர், ' பரிசில் பெற்று வளத்தோடு வரும் கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும், வழியில் எதிர்ப்படும் வறுமையுற்ற, கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோரைப் பரிசில் பெறுவதற்காக ஆற்றுப்படுத்துவது' இவ்வாறு வளம் பெற்றவன் வளம் இல்லாதவன் என்று பேசப்படும் தொழிலை ஆதாரமாகக் கொண்டு என்பதாகும்.

தொழில் என்பது அவரவர்கள் செய்கின்ற வினையைக் குறிக்கும். ''வினையே ஆடவர்க்கு உயிரே' என்பது தொழில் பற்றி வழங்கும் பழமொழியாகும். ஆடவருக்குத் தொழில் உயிரைப் போன்று முக்கியமாகக் கருதப்பட்டது. சமுதாயத்தில் அவரவர்கள் செய்கின்ற தொழிலை வைத்துத்தான் அவர்களுக்கு உரிய மரியாதை வழங்கப்படுகிறது.

**கைத்தொழில்:**

பண்டைத் தமிழ் மக்கள் கலப்பை கொண்டு நிலத்தை உழுது பயிர் செய்ததற்கான செய்தியை ஆற்றுப்படை நூல்களில் காணமுடிகிறது.

*''குறுஞ்சாட் டுளையொடு கலப்பை சார்த்தி*
*நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்''*

**(பெரும், 188-9)**

என்ற வரிகளால் பயிர்த்தொழிலுக்குக் கலப்பை உருளை போன்ற கருவிகள் இருந்தமை அறிய முடிகிறது. இக்கருவிகளைக் கொண்டு தோரை நெல், தோப்பிநெல், சாலிநெல் போன்றவற்றைப் பயிர் செய்தனர்.

தோரைநெல் என்பது மேட்டுநிலப் பகுதியில் விளையும் நெற்பயிராகும். இது குறுகிய கதிர்களை உடையது. பருவமழையில் விதைத்த நெல். அம்மழை நீரைக் கொண்டு அழகிய குலைகளோடு முற்றி விளையும் இக்கருத்துக்களை,

*"புயல் புனிறு போகிய பூமலி புறவின்*
*ஆவல்பதம் கொண்டன அம்பெதீத் தோரை"*

***(மலை: 120-121)***

என்ற பாடலடியில் விளக்குகின்றன.

தோப்பிநெல் என்பது களர் நிலத்தில் விளையும் நெல்வகையாகும். பெரும்பாணாற்றுப்படையில் தோப்பி என்ற இந்நெல்லைக் கொண்டு கள் அடுவர். இது வீட்டிலேயே சமைக்கப்படும் கள்ளாகும்.

*"இல்லடு கள்ளின் தோப்பி பருகி"*

**(பெரும் - 142)**

சாலிநெல் என்பது ஆற்றுநீர் வளத்தால் மிகுந்த விளைவைத் தரும் ஒருவகை. நெல்லாக பொருநராற்றுப் படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. காவிரிப்பாயும் சோழநாட்டில் ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையக் கூடிய (சாலி) நெல்லைப் பயிர் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர்.

*"சாலிநெல்லின் சிறைகொள் வேலி*
*ஆயிரம் விளையுட் டாகக்*
*காவிரி புரக்கு நாடு"*

***(பொருநர் 246-248)***

*"பலமுறை நன்றாக உழப்பட்டு களை நீக்கி நீர்ப்பாய்ச்சப் பெற்ற வயல்களில் நாற்றுகளை நடுவர்"*

***(பெரும் 212)***

நன்றாக விளைந்த நெற்கதிர்களை அறுவடைசெய்யும் தொழிலையும் அக்கால மக்கள் மேற்கொண்டிருந்தனர். நெற்கதிரை அறுக்கும் அரிவாளை குயம் (பொரு-242) என்பர். அவ்வாறு அறிந்தவற்றை போராகக் குவிப்பர் (பெரும் 232-242)

இத்தகைய தலையாய தொழில் செய்த உழவர்கள் வளம்மிகுந்த மருதநிலம் சூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்தனர்.

**நெசவுத் தொழில்:**

பண்டைத் தமிழர்களிடம் நெசவுத்தொழில் ஒரு முக்கியத் தொழிலாக இருந்துள்ளது. இவர்கள் பட்டு பருத்தி ஆகிய துணிகளை நெய்வதில் சிறப்புற்று விளங்கினர். இவர்கள் நெய்த துணிகளின் தரம் பற்றிக் கூறும்போது பால் ஆவி போன்ற ஆடை எனப் பெரும்பாணாற்றுப்படையும் (469). பாம்பின் தோல் போன்ற ஆடை எனப் பொருநராற்றப்படையும் (83) கூறுகிறது.

*"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்களிந்து*
*ஆர உரி யன்ன அறுமைவ"*

***(பொரு ந.82-83)***

என வரும் பொருநராற்றுப்படை அடிகளால் பருத்தி ஆடை நெய்யக் கற்றிருந்ததையும்

*"கொட்டைக் கரைய பட்டுஉடை நல்கி"*

***(பொரு ந.155)***

என வரும் பொருநராற்றுப்படை அடியால் பட்டாடை நெய்யக் கற்றிருந்ததையும் அறியலாம்.

**தச்சுத்தொழில்:**

மரப்பொருட்களினால் வேலை செய்பவர் தச்சர் என அழைக்கப் பெற்றனர். வீட்டிற்குப் பயன்படத்தக்க மரத்தால் ஆன கருவிகள் தட்டு முட்டுப் பொருட்கள் ஆகியவற்றின் பெயர்கள் ஆற்றுப்படை நூல்களில் காணக்கிடக்கின்றன. தேர், பாண்டில், உளிபடை (97)யிலும், அச்சு, பார் உருளை போன்ற சொற்கள் பெரும்பாணாற்றுப்படை (63-66) யிலும் காணப்படுகிறது.

தச்சர்கள், சிறார்களும் விரும்பும் வண்ணம் அழகிய தேரைச் செய்ததை,

*"தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த*
*ஊரா நல்தேர்"*

***(பெரும் 248-249)***

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகளும் மரத்தலான மணிமாலை செய்தததனைச் சிறுபாணாற்றுப்படையும் (51-56) கூறுகிறது. இதனால் தச்சுத்தொழில் சிறப்புற்றிருந்தது இனிது விளங்கும்.

**கொல்லர் தொழில்:**

பாடினியில் காதுகள் கத்திரிக்கோலின் அடிப்பாகத்தைப் போன்றும் (29) அரசனது உணவை இரவும் பகலும் உண்டதால் பற்கள் முனை மழுங்கிய கலப்பைக் கொழுபோன்றும் (117) இருந்தன என பொருநராற்றுப்படை கூறுகிறது. யானையை அடக்கும் தோட்டியைப் பற்றித் திருமுருகாற்றுப்படையிலும் (78) கொல்லர்கள் பயன்படுத்துகின்ற கோல் துருத்தி போன்றவற்றை பற்றிய செய்தி பெரும்பாணாற்றுப்படையிலும் (206-207) கூறப்பட்டுள்ளது. நண்டின் கால் வருணிக்கப்படுகிறது. இதனை,

*''மிதி உலைக் கொல்லன் முறிகொடிற்றன்ன
கவைத்தாள் அலவன்''*

**(பெரும் 207-208)**

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகள் உணர்த்துகின்றன. கொல்லன் என்ற சொல்லை இதில் பயன்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது. கத்தரிக்கோல், கொளி, அரிவாள், தோட்டி, கொரடு போன்ற சொற்களின் பயன்பாடு, அக்காலத்தில் கொல்லர் தொழில் சிறந்திருந்தது என்பதை விளக்குகின்றது.

**பாய் பின்னுதல்:**

உப்பு மூட்டைகளை ஏற்றிச் சென்ற உமணர்களுடைய வண்டி, ஆரை (புற்பாய்) வேய்ந்த அறைவாய்ச் சகடம் எனப் பெரும்பாணாற்றுப்படையில் (50) வருணிக்கப்படுகிறது.இதன் மூலம் பாய் வேய்ந்த வண்டி குறித்த செய்தியை அறிய முடிகிறது. ஆரை என்ற சொல் தொத்தளிப்பாய் எனப் பொருள்படும் தாளி என்பது பனை மரத்தைக் குறிக்கும். எனவே பனை ஓலையாற் செய்த பாய் என்று உரை கூறுவர் போலவே சோமசுந்தரனார் வாரை என்ற சொல்லும், தொத்தளிப்பாய் என்ற உரையும் பண்டைக் காலத்தே பாய்பின்னும் தொழில் இருந்தது என்பதைப் புலப்படுத்தும்.

**தோல் தொழில்:**

முல்லை நிலத்தில் உழுது உண்பவர்களின் இயல்பு பற்றிக் குறிப்பிடும்போது, தொடுதோல் மரீஇய வடுவாழ் நோன் அடி, (169) எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. அதற்கு உரை எழுதும் போது செருப்பி விடாமற் கிடந்த வகுவருந்தின வலிய அடி என்று உரையாசிரியர் பொ.வே சோமசுந்தரனார் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் தொடுதோல் என்பது செருப்பைக் குறிக்கும் என்பதை அறிய முடிகிறது. இதன் மூலம் தோல் தொழில் பண்டைக் காலத்தே சிறப்புற்றிருந்தமையை உணரலாம்.

**உலோகத்தொழில்:**

உலோகங்களை உருக்குப் பாத்திரம் செய்யும் தொழில் வளர்ந்து இருந்தது. அரண்மனையில் பொன் வேலைப்பாடுகளுடன் கூடிய பாத்திரங்கள் இருந்தன எனப் பொருநராற்றுப்படை (85-87) கூறுகிறது. விறலி பொன் மாலை அணிந்திருந்ததைப் பெரும்பாணாற்றுப்படை (485-486) கூறுகிறது.

*''இளங்கதிர் ஞாயிறு எள்ளும் சோற்றத்து
விளங்கு பொற்காலத்தில்''*

**(சிறுபாண் 244-245)**

என உணவு படைக்கப்பட்டதைச் சிறுபாணாற்றுப்படை தெரிவிக்கிறது. கூத்தர் பெண்கலத்தால் இயன்ற தானம் என்னும் இசைக்கருவியை ஒலித்ததை மலைபடுகடாம்(4) கூறுகிறது. இறந்திரையன் அரண்மனையில் வெள்ளிப்பாத்திரம் இருந்ததை,

*''மீன் பூத் தன்ன வான் கலம் பரப்பி''*

**(பெரும்பா -477)**

எனப் பெரும்பாணாற்றுப்படை விளக்குகிறது. இதனால் பண்டைக்காலத்தே உழவுத்தொழில் சிறப்புற்று இருந்தமையை உணரலாம்.

# ஐங்குறுநூற்றில் சுற்றுப்புறச் சூழல்

**முனைவர் ஆ. தேவதா**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழாய்வுத்துறை,*
*புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி – 17.*

**முன்னுரை:**

மக்கள் வாழ்க்கையிலிருந்து தோன்றுவதுதான் இலக்கியம். எனவேதான் இலக்கியத்தைக் காலம் காட்டும் கண்ணாடி என்று கூறுகின்றனர். தமிழ் இலக்கியங்களில் இயற்கை என்பது மக்களின் இயல்புகளுக்குக் காரணமாய் அமைவது மனிதர்களின் வாழ்வில் முக்கிய அங்கம் வகுத்துத் தானும் ஒரு பாத்திரமாய் அமைவது இயற்கை. வானம், கடல், அருவி, நீர், தீ, காற்று, காடு, மலை, மரம், செடி, கொடி, பறவை, விலங்கு போன்ற உயிருள்ள உயிரற்றப் பொருள்களும் இயற்கையைச் சார்ந்தவையே ஆகும்.

ஒரு நாட்டின் வளர்ச்சியிலும், பொருளாதார மேம்பாட்டிலும் காடுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மழையின் அளவை மிகுவித்து நாட்டின் நீர்வளம் பெருக காடுகளே காரணமாக உள்ளன. மரம், செடி, கொடி மற்றும் பல விலங்கினங்களையும் தன்னகத்தே கொண்டு அவற்றிற்கு வாழ்வளிக்கும் களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாகக் காடுகள் சுற்றுச் சூழல் குறித்த செய்திகள் ஐங்குறுநூற்றில் காடோடு தொடர்புபடுத்திப் பேசப்படுவதை இப்பகுதி விளக்கி ஆராய்கிறது.

**சூழலியலும் இலக்கியமும்:**

சுற்றுச்சூழலியல் என்னும் தொடர் உயிர்வாழ்வினங்களின் சுற்றுப்புறப் பகுதியினைக் குறிப்பதாகும். சுற்றுச்சூழல் என்பது இயற்கையைச் சார்ந்து வாழும் மக்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றையும், அவற்றின் வாழ்வியல் கூறுகளையும் அறிந்துகொள்ளப்படுகிறது. இவ்வுயிரினங்கள் இயற்கையோடு கொண்டுள்ள உறவுநிலையை அறிந்துகொள்ள துணை நிற்கும் ஓர் அறிவியல் பிரிவாகவும் அமைகின்றது.

சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று, வான்வெளி, சூரியன், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றையும் மனிதன் உருவாக்கும் ஒருங்கமைப்புகளையும் உள்ளடக்கியதாகும்.

மனிதனைச் சுற்றி அமைந்துள்ள இயற்கைக் கூறுகள் அனைத்தும் ஏதாவதொரு வகையில் மனித வாழ்வோடு கலந்து செயலாற்றுகின்றது. இவ்வியற்கைக் கூறுகள் அனைத்தும் இல்லாமல் மனிதன் உலகில் நிலைத்து வாழ முடியாது என்பதை மேற்கூறிய விளக்கங்கள் வழி அறியமுடிகிறது.

*“நிலம்தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம்”*

**(தொல். பொருள். 635)**

என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

*"கடல்இனிது மலைஇனிது காடுஇனிது*
*ஆறுகள் இனியன*
*உலகமும் மரமும் செடியும் கொடியும்*
*மலரும் காயும் கனியும் இனியன*
*பறவைகள் இனியன*
*ஊர்வனவும் நல்லன*
*விலங்குகளெல்லாம் இனியவை*
*மனிதர் மிகவும் இனியர்"*

***(பாரதியார்)***

என்று மகாகவி பாரதியார் இயற்கையைப் போற்றி மகிழ்கின்றார். இயற்கையைச் சார்ந்து வாழும் மனிதன் இயற்கையின் வளங்களை நிறைவாகப் பெற்றுக்கொண்டு ஒருகட்டத்தில் இயற்கைக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு அதனை அழிப்பதையும், அதனால் ஏற்படும் சூழல் பாதிப்புகளையும் இலக்கியங்களால் உணரமுடிகின்றது.

**இயற்கையும் உயிரினங்களும்**

அடர்ந்த காடுகளும், வற்றாத நீரூற்றுகளும், துள்ளித் திரிந்த விலங்கினங்களும் நிறைந்து கண்ணுக்கு விருந்தளிக்கும் அமைப்பாக இயற்கை விளங்கியது. இயற்கையின் இயல்புநிலை ஈடுஇணையற்றதாகத் திகழ்ந்தது. நன்றாக இருந்தது. இயற்கையாகவே இருந்தது. உயிரினங்கள் வாழத் துணைநின்றது. இத்தகைய இயற்கையோடு முதலில் இணைந்து வாழ்ந்தான் மனிதன். மனிதனும் பிற உயிரினங்களும் வளமுடன் வாழ இயற்கை பல வழிகளிலும் துணைபுரிந்து வருகிறது. பலகோடி ஆண்டுகளாக உயிரினங்கள் அனைத்தும் இயற்கையோடு இணைந்தும், இயற்கையைச் சார்ந்தும் வாழ்ந்து வந்துள்ளன. இந்தப் பிணைப்பில் மனிதனின் வாழ்வும் வளமும் இணைந்தே வந்துள்ளது.

தலைவன் தான் குறிப்பிட்டுச் சென்ற கார்ப்பருவம் வருவதற்கு முன்பே வந்து தலைவியிடம் தனக்குப் பின்னால் வந்த கார்ப்பருவத்தைச் சுட்டிக் காட்டுகிறான்.

முல்லை நிலத்தில் காயா, கொன்றை ஆகிய மரங்களும், தளவம், பிடவம் ஆகிய செடிகளும், நெய்தல், முல்லை ஆகிய கொடிகளும் பூத்துக் குலுங்கி முல்லைநிலம் பூவணி கொண்டு விளங்குவதை,

*"காயா கொன்றை நெய்தல் முல்லை*
*போதுஅவிழ் தளவமொடு பிடவுஅயர்ந்து கவினிப்*
*பூவணி கொண்டன்றால் புறவே"*

***(ஐங் – 412)***

என்ற வரிகள் விளங்குகின்றன. இங்கு வளமான முல்லை நிலம் நம்கண்முன் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதை உணர முடிகின்றது.

தலைவன் தலைவியிடம் மென்மையான இயல்பினை உடையவளே.... பறவைகளும், விலங்குகளும் தத்தம் துணைகளோடு கூடி, இன்புற்று மகிழ்கின்றன. கொம்புகளிலும் கொடிகளிலும் பூக்கள் நிறையப்பூத்து முல்லை நிலமாகிய காடு வளம்மிகுந்து மணம் கமழ்கின்றது என்று கூறுகிறான். இதனை,

*"புள்ளும் மாவும் புணர்ந்து இனிது உகளக்*
*கோட்டவும் கொடியவும் பூப்பல பழுநி*
*மேல்லியல் அரிவை கண்டிகும்*
*மல்லல் ஆகிய மணம்கமழ் புறவே"*

***(ஐங் – 414)***

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. இங்கு வனத்தின் வளத்தோடு உயிரினத்தின் மகிழ்வும் சேர்த்துக் கூறப்பட்டு உள்ளது. காடு பயனும் தரும், பரவசமும் தரும் என்பதை ஐங்குறுநூறு தெளிவுறுத்துகின்றது.

**காடழிதல்:**

மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கு உறுதுணை புரிவது காடுகளே. காடுகள் அழிக்கப்பட்டு வருவதால் அவற்றின் பரப்பளவு நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. பெருகிவரும் மக்கள்தொகை, வளர்ந்துவரும் நகர்ப்புறங்கள், விவசாயத்திற்குத் தேவைப்படும் நிலங்களை உருவாக்குதல் இப்படிப் பல காரியங்களுக்காக காடுகள் இரையாக்கப்படுகின்றன.

காடுகள் பல்லாயிரக்கணக்கான உயிரினங்களின் வாழிடங்களாக அமைந்துள்ளன. காடுகள் அழிக்கப்படுவதால் காட்டு உயிரினங்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. காடழிப்பு காரணமாகப் பல உயிரினங்கள் இடம் பெயர்கின்றன. சில உயிரினங்கள் இயற்கைச் சூழலோடு இயைந்து வாழ்கின்றன. ஆனால், மனிதன் மட்டும் இயற்கைக்கு முரண்பாடான செயல்களில் ஈடுபடுகிறான். மனிதர்களால் காடு அழிக்கப்படுவது மட்டுமின்றி இயற்கையாகக் காடு தீப்பற்றி எரித்து அழிக்கப்படுதலும் உண்டு. இரண்டு நிலைகளில் காடழிவு நிகழ்வதை ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது.

**இயற்கையாகவே காடழிதல்:**

இயற்கையின் சுழற்சியில் விளைவதும், அழிதலும் மாறிமாறி நிகழ்வது மாற்ற முடியாதது.

இயற்கையால் ஏற்படும் அழிவு எண்ணிப் பார்க்க இயலாதது.

பெரும்புயல், பெரும்மழை, மிகுந்த வறட்சி, எதிர்பாராத நிலையில் ஏற்படுகின்ற நிலநடுக்கம் அல்லது பூகம்பம், எரிமலை வெடிப்பு குபீரெனப் பற்றும் காட்டுத்தீ, கடல்கொந்தளிப்பு முதலியன சுற்றுச்சூழலைப் பாதிக்கும் இயற்கை நிகழ்வுகளாகும். இதன் விளைவாக நீர், காற்று, மலர் முதலிய மண்டலங்கள் பெரிதும் சேதமடைவதோடு, அப்பரப்பில் வாழ்கின்ற உயிர்களும் மிகுதியாக அழிகின்றன.

காடுகள் இயற்கையாகவே தீப்பற்றிக் கொள்வதை ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.

தலைவன் செல்லும் காட்டுவழியில் மூங்கில்கள் ஒன்றோடு ஒன்று உரசித் தீப்பற்றும், அத்தீ ஓசையோடு பற்றி எரிந்து பரவும். அந்நெருப்பைக் கண்டு வலிமை மிக்க புலிகள் அஞ்சி ஓடும். அத்தகைய காடும் மயலயம் சூழ்ந்த கடுமையான நிலப்பகுதியைக் கடந்து தலைவன் செல்வதாகத் தோறி கூறுகிறாள்.

*''கேலிகழை குழங்குஅழல் வயாவெரூஉம்*
*குன்றுடை அரும்சுரம் செலவுஅயர்ந் தனையே''*

***(307)***

காடும் மலையும், புலிகளும் அஞ்சத்தக்க அளவிற்குத் தீப்பற்றி எரிவதை இதனால் அறியமுடிகிறது.

**மனிதர்களால் காடழிதல்:**

மனிதன் தனது தன்னலப்போக்கால் இயற்கையை அழித்துத் தன் தேவைக்கேற்ப மாற்றி அமைப்பதை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. அதனால் ஏற்படும் அழிவுகளையும் விளக்குகின்றன.

குன்றக் குறவர்கள் நிலத்தில் விளைந்த தினையை அறுத்துக்கொண்டு சென்றனர். சிவந்த வாயும் பச்சை நிறமும் உடைய கிளி முன்பு உண்டு நன்கு வாழ்வதற்குத் துணையாய் இருந்த தினை இப்போது இல்லை என்றாலும் அதன் அரிதாளை விட்டுப் பிரிய மனமில்லாமல் இருந்து பேரன்பு காட்டுவதை,

*''அளிய தாமே செவ்வாய்ப் பசுங்கிளி*
*குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்*
*இருவி நீள்புனம் கண்டும்*
*பிரிதல் தேற்றாய் பேரன் பினவே''*

***(ஐங் - 284)***

தனக்கு உண்பதற்கான உணவு இல்லை என்று தெரிந்தும் கூட, அக்கிளி அரிதாளை விட்டுப்போக மனமில்லாமல் இருப்பது காட்டோடு அவை கொண்ட உறவைப் புலப்படுத்துவதோடு அதன் பேதமையையும் புலப்படுத்துகிறது. மனிதனின் தன்னலப்போக்கும் இதனால் தெளிவாகிறது.

**முடிவுரை:**

மனிதன் காட்டைத் தனக்கு மட்டுமே சொந்தம் என்று எண்ணித் தனது தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொண்டதையும் பிறகு அதனை அழிப்பதையும், காட்டை அழிப்பதால் உயிரினங்கள் பாதிக்கப்படுவதையும் ஐங்குறுநூறு தெளிவாகப் புலப்படுத்துகின்றது.

# புறநானூறு காட்டும் மனித மாண்புகள்

**முனைவர் தா. லதா**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழாய்வுத் துறை*
*புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி*
*திருச்சிராப்பள்ளி - 17.*

**முன்னுரை:**

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் உலகமானது இயந்திரத்தனமாக சுழன்று கொண்டிருக்கிறது. தன்னோடு வாழும் மனிதர்களைப் பற்றி சிந்திக்கக் கூட நேரம் இல்லாதவனுக்கு சமூகத்தைப் பற்றிய அக்கறை எப்படி தோன்றும்? தன்னோடு வாழும் சக மனிதர்களின் நலனில் அக்கறை கொள்ளும் பொழுது தான் சமூகம் சிறப்புறும் என்பதை சங்க கால மக்கள் அறிந்திருந்தனர்.

**நன்மை செய்ய அறிவுறுத்தல்:**

*“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின் அதூன்*
*எல்லாரும் உவப்பது அன்றியும்*
*நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே”* **(புறம் - 195)**

நல்லது செய்ய இயலா விட்டாலும், பிறருக்குத் தீமை செய்யாது இருப்பதே நல்லது என்ற தெளிவான கருத்தைக் கூறுவதோடு, அச்செயலே நம்மை நல்வழிச் செலுத்தும் உன்னதமான வாழ்வின் பாதை என்ற கருத்தை வழியுறுத்துகிறது. மற்றொரு பாடல்,

*“நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ*
*அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே”* **(புறம் - 187)**

எனக் கூறும் பாடலின் வழி நாடு, காடு, மேடு பள்ளம் என்னும் நிலத்தின் இயல்புகள், மற்றும் அங்குள்ள பண்புகள், செயலாண்மையோடு வாழும் ஆடவர்களைப் பொறுத்தே நிலத்தின் தன்மை அமையும் என்று கூறுகிறது. நல்ல ஆண்மகன் வாழுகின்ற பகுதியில் நிலப்பகுதியும் சலமாக, செழிப்பாக இருக்கும். எனவே, நாடு செழிப்புடன் அமைய ஆடவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்ற கருத்தை முன் வைப்பதன் மூலம் சமூக நலன் எடுத்துரைக்கப்படுவதை அறியலாம்.

**குடிமக்களின் மேல் அக்கறை கொள்ளும் பண்பு:**

நாட்டை ஆளும் தலைவர்கள் மக்களை வாட்டி வதைக்காமல் சரியான வரியை வசூலிக்க வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தும் வண்ணம்,

*“அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே*
.......... .................................. ......................
*வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு*
*பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்*
*யானை புக்க புலம் போலத்*
*தானும் உண்ணான் உலகமும் கெடுமே”* **(புறம் - 184)**

அரசன் அறிவுத்திறன் அற்றவனாகி, தரமற்ற தன்னுடைய சுற்றத்தார்களின் பேச்சைக் கேட்டு, மக்களை வருத்தி, அன்றாடம் வரி வாங்கி பணம் சேர்க்க விரும்பினால் அவனுடைய நாடு யானை புகுந்த வயல் போலக் கெடும். அவனும் வாழ மாட்டான் அவனுடைய நாடும் வாழாது. இந்த உண்மையை அரசன் புரிந்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தும் பாடல் இன்றைய அரசியல் சூழலுக்கும் பொருந்தி வருவது வியப்பை அளிக்கிறது. மேலும், ஆள்பவர் சரியாக இருந்தால், ஆளும் நாடும் நலமாய் இருக்கும் என்கிற கருத்தை வலியுறுத்துவதாக,

*''கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்*
*காவற் சாகாடு உகைப் போன் மாணின்*
*ஊறுஇன்று ஆகி ஆறு இனிது படுமே*
*உய்த்தல் தேற்றான் ஆயின் வைகலும்*
*பகைக்கூழ் அள்ளற் பட்டு*
*மிகப்பல் தீநோய் தலைத் தலைத் தருமே''* **(புறம் – 185)**

உருளையும், அச்சையும் சேர்த்து உலகத்தில் செலுத்துகிற நல்ல சகடம் அதனை ஓட்டுகிறவன் செம்மையாக இருந்தால், அது ஓடுவது ஒழுங்காக இருக்கும். தடங்கல் இல்லாமல் சீராகப் பயணமும் தொடரும். அப்படி இல்லாமல் அதைச் செலுத்துபவன் சரி இல்லாதவனாக, அதை முறையாகச் செலுத்தும் வகை தெரியாதவனாக இருந்தால், அந்த வண்டி அன்றாடம் பகைச் சேற்றிலே அழுத்தும் மிகப் பல தீமைகள் மேலும் மேலும் வந்து சேரும் என அறிவுறுத்தும் இப்பாடலில் அரசனை வண்டியைச் செலுத்துபவனாகவும், நாட்டை வண்டியாகவும் உவமித்து விளக்கியிருப்பது அருமையானது எனலாம்.

**இரப்போருக்கு வாரி கொடுக்கும் பண்பு:**

தன்னிடம் பொருள் இல்லை என்று இரந்து வருபவருக்கு கொடுப்பவர்கள் குறைவாக உள்ள உலகில், இரப்பவருக்கு எது கேட்டாலும் தரும் வள்ளலின் முள்கூட குத்தி வருத்தக் கூடாது என்று பாடும் புலவரின் மாண்பு போற்றுதலுக்குரியது.

*''இன்று செலினும் தருமே சிறுவரை*
*நின்று செலினும் தருமே பின்னும்*
.......... ................. .......................
*இனமலி கதச்சேக் களனொடு வேண்டினும்*
*களமலி நெல்லின் குப்பை வேண்டினும்*
*அருங்கலம் களிற்றொடு வேண்டினும் பெருந்தகை*
................. ................. ...................................
*முள்ளும் நோவ உறாற்க தில்லை*
............... ................ ............ ......................
*வாழ்வோர் வாழ அன் தாள்வா ழியவே!''* **(புறம் – 171)**

இன்று போய்க் கேட்டாலும் தருவான். இன்னும் சில நாட்கள் கழித்துப் போய்க் கேட்டாலும் தருவான். அல்லாமலும், முன்பு தான் கொடுத்திருக்கிறோமே என்பதை எண்ணாமல், எப்போது சென்றாலும், தொடர்ந்து அன்றாடம் சென்றாலும் மாட்டுத் தொழுவத்தையே கேட்டாலும் தருவான். நெற்களத்தில் கொட்டிக் கிடக்கும் நெல் அம்பாரத்தை அப்படியே கேட்டாலும் கொடுப்பான். ஆகையால் அந்த நல்ல உள்ளம் கொண்டவனின் காலடியைச் சிறுமுள் கூடக்குத்தி வலியுண்டாகதிருக்க வேண்டும். எனவே, இரந்து வாழ்பவர்கள் உயிரோடு வாழ்ந்திருக்க அவன் நீண்ட நெடுநாள் வாழ்ந்திருப்பானாக! என வாழ்த்துகிறான்.

**வீரர் மகிழ விருந்துக் கொடுத்தல்:**

மன்னனை மட்டுமல்லாமல், மன்னனுக்கு துணையாக நின்று போர்புரியும் வீரர்களையும் நல்ல முறையில் கவனித்துக் கொண்டனர் என்பதற்கு சான்றாக,

*''நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்*
*பாசுவல் இட்ட புன்கால் பந்தர்ப்*
*புனல் தரும் இளமணல் நிறையப் பெயம்மின்*
*ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று*
*நிரையோடு வரூஉம் என்னைக்கு*
*உழையோர் தன்னிலும் பெருஞ்சா மலரே''* **(புற – 262)**

தேனை நிறைய ஊற்றுங்கள். ஆட்டுக்கிடாயையும் அடித்துப் போடுங்கள். பசுந்தழைகளைப் பரப்பி சிறுகால் நாட்டி அமைத்த பந்தலுக்குக் கீழே அனைவரும் அமர, ஆற்று மணலை நிறையக் கொண்டு வந்து கொட்டிப் பரப்பிச் சீர் செய்யுங்கள். பகைவர்களின் படை வென்ற, தன்பின்னே ஆநிரைகளோடு வருகின்ற என் தலைவனுக்குத் துணையாய் வருபவர்கள் அவனிலும் களைத்துப் போய் வருவர். எனவே, அவர்கள் வந்தமர்ந்து உண்டு மகிழ விருந்து தயாராகட்டும் எனத் துரிதப்படுத்துகிறான்.

**முடிவுரை:**

தமிழர்களின் வீரக்களஞ்சியமாக விளங்கும் புறநானூறு தமிழர்களின் வாழ்வியல் முறைகளையும், இரப்போருக்கு கொடுத்தலையும், நன்மை செய்ய அறிவுறுத்துகிறது. அந்த சங்கத் தமிழர்களின் வாரிசுகளாகிய நாம் மனிதம் மறந்து, சாதி, இன பேதம் வளர்ந்து பிரிந்து நிற்றல் இந்த நூற்றாண்டுக்குரிய செயலா என்பதை சிந்தித்து முடிவெடுக்க முன்வருவோம்.

# நகரத்தார் குல மாண்புகள்

ஒரு சமூகத்தின் மாண்புகளை அடையாளம் காண, அச்சமூகத்தின் குலப்பண்பும், குணப்பண்பும் பெரிதும் துணை செய்வன ஆகும். குலப்பண்பும் அத்துடன் இணைந்த குணப் பண்பும் பெற்ற சமூகமாக விளங்குவது நகரத்தார் சமூகமாகும். அந்த வகையில் நகரத்தார் சமூகத்தின் குல மாண்புகளைக் கண்டு விளங்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**இராம. கண்ணமை,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*மாணவர் கலந்தாய்வு மற்றும்*
*குறைதீர் மையம்,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி.*

**நகரத்தார் அடையாளங்கள்**

செட்டிநாட்டு நகரத்தார்களை அடையாளப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுவது அவர்களின் எளிமையான தோற்றப்பாங்காகும். தோற்றத்தில் எளிமை, பேச்சில் இனிமை, திருநீறு பூசிய நெற்றி, சைவ நெறியாம் சிவநெறியின் சிவநாமத்தை உச்சரிக்கும் பாங்கு ஆகியன நகரத்தார் குல மாண்புகளுக்குச் சான்றாகும். இதனைக் 'குலத்தில் குன்றாக் கொழுங்குடிச்செல்வர்'[1] எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடக் காணலாம். செல்வச் செழிப்புமிக்க சமூகமாக நகரத்தார் சமூகம் விளங்கினாலும் அச்சமூகத்து ஆயாவும் (மகளின் தாய்) அப்பத்தாவும் (மகனின் தாய்) ஆடம்பரம் சிறிதும் இன்றி, எந்நிகழ்வுக்குச் சென்றாலும் திருமாங்கல்யத்தைத் தவிர வேறு துணை ஆபரணங்களைப் பகட்டாக அணிந்து செல்வதில்லை என்பது நகரத்தார் பெண்களின் எளிமைக்குச் சான்றாகும். இதனை,

*"மறுஇல் மங்கல அணியே அன்றியும்*
*பிறிது அணி அணியப் பெற்றதை எவன்கொல்"*[2]

என்றவாறு சிலப்பதிகாரம் குறிப்பிடுவதன் மூலமும் அறியலாம். இங்கு,

*"மங்கல அணியின் பிற அணி மகிழாள்"*

என்னும் சிலப்பதிகாரப் பாடல் வரியையும் நோக்கலாம்.

**நகரத்தாரின் மாண்பை வெளிப்படுத்தும் வாயில்கள்**

1. கொண்டு விற்றல் (வாணிகம்)
2. சிக்கனம் போற்றல்
3. வட்டிக் கணக்கு செய்தல்
4. குலதெய்வக் கோயில்கள்
5. மணக்கோலம், நடுவீட்டுக் கோலம், தேர்க்கோலம்
6. வேவு இறக்குதல்
7. தும்பு பிடித்தல்

என்பன நகரத்தாரின் மாண்பை வெளிப்படுத்தும் வாயில்களாக அமைவன ஆகும்.

**கொண்டு விற்றல்**

காஞ்சியை மையமாகக் கொண்டு வணிகச் சிறப்புடன் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்து வந்த நகரத்தார்கள். பிரதாபன் என்னும் கொடுங்கோல் அரசனின் ஆட்சிக் காலத்தில், வணிக ரீதியான அநீதிகளின் காரணமாக வாழ்வியல் நிம்மதி பறிபோன நிலையில் சோழ நாட்டில் குடியேறினர். சோழநாடு நகரத்தார்க்கு வழங்கிய அங்கீகாரத்தை,

''வணிக ரீதியான அநீதிகளைப் பொறுக்க முடியாது 2108 வருடங்கள் வாழ்ந்து செழிப்பாக்கிய காஞ்சி மண்ணை விட்டு 8000 நகரத்தார் குடும்பங்களும் தெற்கு நோக்கிப் புறப்பட்டு சோழநாட்டிற்கு வந்தார்கள். சோழநாடு விவசாயத்தில் சிறந்து தொழிலில் பின்தங்கியிருந்தது. அப்போது சோழ நாட்டை ஆண்ட மனுநீதிச்சோழன் என்னும் அறிவிற் சிறந்த நீதிமாண் நகரத்தார்களின் வருகையை மிக்க மகிழ்ந்து வரவேற்று இவர்கள் குடியிருந்த காவிரிப் பூம்பட்டிணத்தில் கிழக்கு, மேற்கு, தெற்குத் தெருக்கள் ஒதுக்கிவிடப்பட்டு அரசவம்சத்திற்கு மகுடம் சூட்டுகிற உரிமை தந்து ''மகுட வைசியர்'' என்ற பட்டமும் தந்து கௌரவமாக நடத்தப்பட்டார்கள்''[6]

என்னும் குறிப்பு கொண்டு அறியலாம். நகரத்தார்கள் 'தனவைசியர்' என்னும் சிறப்புக்குரியவர்களாக விளங்கியமை அறிதற்குரியதாகும்.

நகரத்தார்கள் தங்களது குலமான வைசிய குலத்தின் மாண்பினைப் போற்றும் வகையில் காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டு விற்றல் (வணிகம் செய்தல்) என்பதனைக் குலத்தொழிலாகச் செய்ய விரும்பியதை,

'அப்பா! திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கு இணங்க, கப்பல் மூலம் பல இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்ய விரும்புகிறேன்.'[4]

என்னும் கூற்றின் மூலம் அறியலாம். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வணிகத்தின் பொருட்டு புகார் நோக்கி வந்த பல்வேறு மொழி பேசும் வணிகர்களுடன் இணைந்து நகரத்தார் வணிகம் செய்தனர் என்பதை

*'பரந்து ஒருங்கு ஈண்டிய பாடைமாக்களும்'*[5]

என்னும் மணிமேகலை பாடல் வரி கொண்டு அறியலாம்.

**வட்டிக்கணக்குச் செய்தல்**

நகரத்தார்களுக்குத் தொழில் என்பது பணம் பார்ப்பது மட்டுமன்று 'மனதறிந்து செயல்படுவது' என்ற தொழில் தர்மத்தைப் பின்பற்றியவர்களாக நகரத்தார் இருந்தனர். அதன் அடிப்படையில் தொழில் தர்மம் என்பது வரையறை செய்யப்பட்டதன் அடிப்படையில் இருவித நிலைகளை அடைந்தது. வணிகம் செய்தல் முதல் குலத்தொழிலாகவும் லேவா தேவியும் பணம் கொடுத்து வாங்கலும் துணைத் தொழிலாகவும் மேலோங்கி நின்றன,

''நகரத்தார் வரலாற்றில் வேலங்குடிக் கல்வெட்டுத்தான் 'பணம் கொடுக்கல் வாங்கல்' என்ற தொழிலை நகரத்தார் மேற்கொண்டதாக முதன்முதலில் குறிப்பிடுகிறது.''[7]

மேலும், தொழில் தர்மமும் நிர்ணயம் செய்யப்பட்டதை வேலங்குடிக் கல்வெட்டு,

இரத்தினம் சுவர்ணம், பலசரக்கு முதலிய வியாபாரங்கள் செய்கிறது. சீவ வதையான வியாபாரங்கள் செய்கிறதில்லை. வாய்மை தவறா மோலோர்களிடத்தில் பணம் கொடுக்கல் செய்கிறது. தரும வட்டி வாங்குகிறது. குதிரை வியாபாரமும் வெற்றிலை முதலிய அழுகற்சரக்கு வியாபாரமும் செய்யக் கூடாது.''[8]

என்பதன் மூலம் தெளியலாம். அதன் அடிப்படையில் வட்டித் தொழிலில் தரும வட்டியின் முறைமையே பின்பற்றப்பட்டது. 'ஐந்தொகை' என்ற கணக்கியல் வட்டிக் கடைகளில்அறிமுகப்படுத்தப்பட்டது.

கடன் கொடுக்கப்பட்டு பெறப்படும் வரவு நிலைகளின் கணக்கியல் ஐந்தொனை கணக்கு என அழைக்கப்பட்டது. அதாவது, கடன்தொனை, கடன்வரவு, வட்டிவிகிதம், வட்டி, செலவு ஆகியனவற்றின் மொத்தக் கூட்டுத் தொகையே ஐந்தொகை என அழைக்கப்பட்டது.

சேட்டிப் பிள்ளை கெட்டிப் பிள்ளை என்பார்கள். சாப்பிடும் சாப்பாட்டிலும் தொழில் நேர்த்தியும் கொண்டவர்கள் நகரத்தார் என்பதனை,

'சாப்பிடும் தட்டை வட்டி என்று சொல்வார்கள். வட்டியில் தான் சாப்பிட வேண்டும் அசலிலே சாப்பிடக்கூடாது என்பதனை நினைவுபடுத்தவும் வட்டித் தொழிலைப் பேணி வளர்த்ததாக அர்த்தம்''[9] என்னும் குறிப்பு கொண்டு அறியலாம்.

வட்டிக்கணக்குப் பார்ப்பதில் செட்டிப் பிள்ளையை மிஞ்சமுடியாது என்ற நிலையிலேயே ‘செட்டியோடு ஒட்டிப் பிறந்தது வட்டி’ என்னும் கூற்று பிறந்தது எனலாம். வேலங்குடிக் கல்வெட்டு, பணம் கொடுக்கல் வாங்கல் என்ற தொழிலை நகரத்தார் மேற்கொண்டதாகக் குறிப்பிடுவதை இங்கு நோக்கலாம்.

வட்டிக்குப் பணம் கொடுக்கல் வாங்கலில் மூன்று விதமான உண்டியல் நிலைகளை முதன் முதலில் நிறுவியவர்களாக நகரத்தாரைக் குறிப்பிடலாம்.

- ❖ தரிசன உண்டியல்
- ❖ நடப்பு உண்டியல்
- ❖ சீதன உண்டியல்

என்பன நகரத்தார் நிறுவிய உண்டியல் நிலைகளாகும். இவை வங்கியியலில் நகரத்தார் நிதி நிறுவனங்களில் பின்பற்றபட்டன. இந்த மூன்று வகை உண்டியல் நிலைகளைக் குறித்துக் குறிப்பிடும் நகரத்தார் கலைக்களஞ்சியம்.

‘‘தரிசன உண்டியல் - பார்த்தவுடன் பணம் கொடுக்கும் உண்டியல் (குறிப்பிட்ட ஊரில் மூன்று நாட்களுக்குள் கொடுக்கப்படும்).

நடப்பு உண்டியல் – வழங்கப்பட்ட நாளிலிருந்து, அது மாற்றப்படும் நாள் வரை உள்ள காலத்திற்கு நடப்பு வட்டிவிகிதப்படி வட்டி சேர்த்துக் கொடுக்கப்படும்.

சீதன உண்டியல் - திருமணத்தின் பொழுது சீதனத்துக்குப் பதிலாக எழுதிக் கொடுக்கப்படும் உண்டியல். என்றவாறு குறிப்பிடக் காணலாம்.

வட்டிக்குப் பணம் கொடுக்கல் வாங்கலில் நகரத்தார் கடைபிடித்து வரும் இம்மூவகை உண்டியல் நிலைகள் ‘வட்டியில் கெட்டி செட்டி’ என்பதனை மெய்ப்பிப்பதாக உள்ளது எனலாம். வங்கித் தொழிலில் முன்னோடியாக விளங்கியவர்கள் நகரத்தார்கள் என்பதனை

‘1907 - ல் இந்தியன் வங்கியைத் தொடங்கியதிலும் அதைப் பல ஆண்டுகள் வழி நடத்திச் சென்றதிலும் நகரத்தார் பங்கு குறிப்பிடத்தக்கது’[11] என்னும் ஆர். கே. சேசாத்திரியின் கூற்று கொண்டு அறியலாம்.

**கோயில்களும் குலதெய்வக் கோயில்களும்**

நகரத்தார்கள் சைவ நெறியைக் கடைபிடிப்பவர்கள். தீட்சையும் உபநேசமும் பெற்று நித்தம் சிவபூசை செய்பவர்கள். வாணிகம் மட்டுமின்றி இந்து சமயத்தையும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்றவர்கள்.

காவிரிபூம்பட்டிணத்திலிருந்து பாண்டிய நாட்டின் சௌந்தரபாண்டியன் அரசனின் அழைப்பின் பேரில் பாண்டிய நாடு சென்ற நகரத்தாருக்கு, பாண்டிய அரசன் காரைக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள 74 கிராமங்களில் அவர்களுக்குக் குடியிருப்பை ஏற்படுத்திக் கொடுத்தான். இக்குடியிருப்புகள் கீழ்வட்டகை, மேல்வட்டகை, தெற்கு வட்டகை, நீண்டகரை, பதினாறூர் வட்டகை, கீழ்ப்பத்தூர் வட்டகை, மேலப்பத்தூர் வட்டகை என ஏழு பிரிவுகளாக இருந்தது என அறியப்படுகிறது. இறுதியாக தாணிச்சாவூரணியுடன் சேர்த்து 75 பிரிவுகளில் இவ்வூர்கள் அடங்கியிருந்ததென்பர்.

எழுபத்தி ஐந்து ஊர்களில் வாழ்ந்து வந்த நகரத்தார்கள் சிவநெறியில் ஒன்றான சிவாலயப் பணியில் தங்களை அர்ப்பணிக்க ஒன்பது நகர கோயில்களை முறையே,

| | | |
|---|---|---|
| மாத்தூர்க் கோயில் | – | 1500 ஆண்டு தொன்மை |
| இளையாத்தான் குடி கோயில் | – | கி.பி. 707 |
| ஐவரவன் கோயில் | – | கி.பி. 712 |
| பிள்ளையார்பட்டிக் கோயில் | – | கி.பி. 714 |
| இரணியூர்க் கோயில் | – | கி.பி. 714 |
| இலுப்பைக்குடிக் கோயில் | – | கி.பி. 714 |
| நேமம் கோயில் | – | கி.பி. 714 |
| சூரைக்குடிக் கோயில் | – | கி.பி. 718 |
| வேலன் குடிக் கோயில் | – | கி.பி. 718 |

ஆகிய ஒன்பது ஊர்களில் அமைத்து, கோயில் கொண்டவர்களாக நகரத்தார் விளங்கினும் அவர்களின் வழிபாட்டுச் சிறப்பு என்பது குலதெய்வ வழிபாடாகும்.

குலத்தை வாழவைக்க அக்குலம் பலதலைமுறை வளர்ந்து செழிக்க, குலமக்களை எப்பிணியும் அண்டாது இருக்க துணை செய்வது குலதெய்வ வழிபாடு என்பது மனித குலத்தின் உள்ளார்ந்த ஓர் ஆன்மீக உணர்வாக உள்ளது எனலாம்.

குலதெய்வ வழிபாடுகள் படைப்பு வீடுகளின் தெய்வங்களையும், பெண்தெய்வங்களையும் கிராமியக் காவல் தெய்வங்களையும் உள்ளடக்கியதாக இருந்தமையைத் தெய்வங்களின் பெயர்கள் மூலமும், வழங்கிவரும் தொன்மைச் செய்திகள் மற்றும் வாய்வழிச் செய்திகள் மூலமும் அறியலாம்.

நகரத்தார், தங்களின் குலப்பெண்களில் பத்தினித்துவத்தை நிலை நாட்டிய பெண்களைச் சிறுதெய்வங்களாகப் படைப்பு வீடுகளில் நிலைநிறுத்தி வழிபடுகின்றனர்.

அக்னி ஆத்தாள், நாச்சாத்தாள், அடைக்காத்தாள், புல்வநாயகி, பெரியநாயதி, ஆகிய நகரத்தார் குலப்பெண்கள், குலதெய்வங்களாக நகரத்தாரால் வணங்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கென்று தனித்தனியே படைப்பு வீடுகளும் உள்ளன.

தங்களின் முன்னோர்களைக் குலதெய்வங்களாக வணங்கும் மரபைத் தொடர்ந்து வரும் நகரத்தாரின் குலதெய்வக் கோயில்களில் அந்தணர்கள் பூசை செய்வது வழக்கில் இல்லை. பூசாரிகளே பூசைகள் செய்து வருகின்றனர். இக்குலத்தெய்வ வழிபாடு என்பது,

- குழந்தைக்குப் பெயரிடுதல்
- காது குத்துதல்
- முதல் முடி இறக்குதல்
- தொட்டி கட்டுதல்
- திருமணத்து முதல் மாலைப் படைப்பின் போது தீர்த்தம் எடுத்து வருதல்
- காவடி எடுப்பதற்கு முன் குலதெய்வக் கோயில் சென்று வருதல்

என்றவாறு பல நிலைகளில் நகரத்தாரால் மேற்கொள்ளப்பட்டு வரக் காணமுடிகிறது. அந்த வகையில் நகரத்தார் குலதெய்வ வழிபாடு என்பது முன்னோர்களின் புகழை, பண்பாட்டை, வாழ்நிலையை விளக்கும் வாழ்வியல் ஆதாரங்களாக விளங்குகின்றன எனலாம்.

**மணக்கோலம் – நடுவீட்டுக் கோலம் – தேர்க்கோலம்**

'மணக்கோலம்' என்பது கல்யாண வீடுகளில் மணவரையில் (மணப்பலகை – யில்) இடப்படும் கோலம்

'தேர்க் கோலம்' என்பது மாப்பிள்ளை அழைப்பின் போது போடப்படுவது

'நடுவீட்டுக் கோலம்' என்பது பொங்கல், பிள்ளையார் நோன்பு போன்ற நிகழ்வுகளின் போது இடப்படுவது.

இக்கோலங்கள் நகரத்தார் மாட மாளிகைகள் கட்டி மன்னர்களுக்கு நிகராக வாழ்ந்த நிலையை வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

நாற்கர அமைப்பிலான கோலத்தின் ஒவ்வொரு புறத்திலும் கோபுர அமைப்புகளும், மாடங்கள் போன்ற அமைப்புகளும் காணப்படுவதைக் காணலாம். இக்கோலத்தைச் சுற்றிலும் சீராக இருவிரல்களாலும் புள்ளி குத்தப்படுவதன் மூலம் எந்த ஒரு செயலையும் திருத்தமாகச் செய்யக் கூடியவர்கள், திட்டமிட்டுச் செய்யக் கூடியவர்கள் நகரத்தார் என்பதனை அறியலாம்.

மாப்பிள்ளை அழைப்பின் போது இருநாற்கரமும் சுற்றிலும் புள்ளிகுத்தி இடுவது இருவீட்டாரும் மணநிகழ்வுகளின் மூலம் இணையும் நிலையிலும், பெண்ணையும் மாப்பிள்ளையையும் மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வருகையில் இடப்படும் 'நடுவீட்டுக் கோலம்' ஒரு மனையில் இணையும் நிகழ்வையும் விளக்குகிறது எனலாம். இதனை நகரத்தார் கலைக்களஞ்சியம்

''திருமணம் வீடுகளிலும் பொங்கல் போன்ற சிறப்பு நாட்களிலும்
அவர்கள் போடும் 'நடுவீட்டுக் கோலம்' என்பது
அவர்தம் ஓவியக் கலைத்திறனை உலகுக்கு அடையாளம் காட்டும்''[12]

எனக் குறிப்பிடக் காணலாம்.

**வேவு இறக்குதல்**

'வேவு இறக்குதல்' என்பது நகர மாந்தரின் குலத்தொழிலை விளக்குதல் எனக் கொள்ளலாம். வணிகத்தை அதாவது 'கொண்டு விற்றல்' என்ற குலத்தொழிலைக் குடும்பத் தலைவனும் தலைவியும் மறக்கக்கூடாது என்பதனை வெளிப்படுத்துவதாகவே இது உள்ளது.

வெள்ளிக் கடகம் (அடுக்கு சட்டி போன்ற அமைப்பு) அதனுள் அரிசி, கத்திரிக்காய் இரண்டினையும் வைத்து குடும்பத்து உறவினர்கள் ஒருவர் தலையில் வைத்து இருப்பதனை வாங்கி நடுவீட்டில் (பூஜை அறையில்) வைத்தல் வேவு இறக்குதல்.

இதனை நகரத்தார் கலைக்களஞ்சியம் 'வேள்' என்றால் 'விருப்பம்' விருப்பத்துடன் கொடுக்கப்படும் பொருள் 'வேள்வு' எனப் பெயர் பெற்று 'வேவு' என மருவியிருக்கலாம்''[13] எனக் குறிப்பிடுகின்றது.

இந்த வேவு, கல்யாண வேவு, விளையாட்டுப் பெட்டு வேவு, பொங்கல் வேவு என நிகழ்வு அடிப்படையில் பெயரிட்டு அழைக்கப்பெறும்.

தும்பு பிடித்தலும் கழுத்துரு அணிவித்தலும், தலைப்பாகை அணிந்து மாப்பிள்ளை அலங்காரம் செய்தலும், அரசருக்கு நிகராக நகரத்தார்கள் வாழ்ந்த நிலையை வெளிக் கொணரும் வாயில்கள் எனலாம். 'கோவில் மாலை' வருதல் என்பது 'மன்னருக்கு நிகரானவர் நகரத்தார்' என்பதனை வெளிப்படுத்துவதே ஆகும்.

**தும்பு பிடித்தல்**

''திருமணம் நிகழ்ந்ததும் மணமக்கள் தனி இல்லத்தில் வேறு வைக்கப்பெற்று குடும்பம் நடத்தினர் என்பது, சிலப்பதிகாரத்தாலும், பெரியபுராணத்திலும், காரைக்கால் அம்மையார் வரலாற்றாலும் தெரியவரும் செய்தி. தனிவீட்டின் அடையாளக் குறியீடாகவே இத்தும்பு எனும் கோலம் அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது.''[14]

**முடிவுரை**

வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பவர்கள் மத்தியில் சில கட்டுப்பாட்டுகளுடன் பாரம்பரியம் மாறாமல்,

*''ஆல் போல் தழைத்து எருகுபோல் வேரோடி*
*மூங்கில் போல் முறியாமல் வளரும் குலம்''*

நகரத்தார் குலம் என்பதனை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

**அடிக்குறிப்பு**

1. சிலப்பதிகாரம், மணையறம் படைத்த காதை – ப. 22.
2. மேலது – ப. 28.
3. மேலது, அந்தி மாலைச் சிறப்பு செய்த காதை – ப. 55.
4. சித்தர்கள் வாழ்க்கை – ப. 208.
5. மணிமேகலை, விழா அறைக் காதை – ப.42
6. நாட்டுக்கோட்டை நகரத்தார் தமிழ் விக்கிபீடியா – ப.3
7. நகரத்தார் கலைக் களஞ்சியம் – ப.260
8. மேலது – ப.258
9. அர்த்தமுள்ள நகரத்தார் சமுதாயம் – ப. 7
10. நகரத்தார் கலைக்களஞ்சியம் – 261
11. மேலது – ப. 261
12. மேலது – ப. 25
13. மேலது – ப. 410
14. நகரத்தார் வாழ்வியல் – ப.26

# பெரியாரும் பெண்ணுரிமையும்

**வே. மணிகண்டன்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*(பகுதி நேரம்),*
*பாரதிதாசன் உயராய்வு மையம்,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சி.*

**முன்னுரை**

''பெண் பிறப்பதில்லை அவள் இந்தச் சமூகத்தால் உருவாக்கப்படுகிறாள்'' என்கிறார் சைமன்டி. பெண் ஆண்களுக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்னும் கட்டமைப்புக் காலங்காலமாக வழக்கத்தில் காணப்படுவதாகும். பெண்ணும் சம உரிமை பெற்று வாழ வேண்டுமெனக் குரல் கொடுத்தவர்களில், குறிப்பிடத்தக்கவர்களில் பெரியாரும் ஒருவரே. பெண்கள் கல்வி கற்கவேண்டும், கற்பு என்பது இருவருக்கும் பொதுவாக வைக்கப்பட வேண்டும். பெண் அலங்காரம்தான் பெண்ணை அடிமைப்படுத்துகின்றது. பெண்ணுக்கு சொத்துரிமை வழங்கப்படவேண்டும் என்பது பெரியார் முன் வைக்கப்பட்ட வாதமாகும். இதனை பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கற்பு யாருக்கு?**

கற்பு என்பது ஒழுக்கம் என்னும் நிலையில் எண்ணப்பட்டு வருகிறது. நமது சமூக கட்டமைப்பு கற்பு என்பது பெண்ணுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டு ஆணுக்கு வரையறுக்கப்படவில்லை. இதனை, மனதில் கொண்டுதான் பெரியார்.

''ஒரு பிறப்புக்கொரு நீதி வழங்கும் நிர்பந்தக் கற்பு முறை ஒழிந்தது. இரு பிறப்பிற்கும் சமமான சுயேட்சைக் கற்புமுறை ஏற்படவேண்டும். கற்புக்காகப் பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுதுக்கொண்டிருக்கச் செய்யும் படியான நிர்பந்தக் கல்யாணங்கள் ஒழிய வேண்டும்'' என்கிறார் இதேப்போல தான் பாரதியாரும். (பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை – 1, ப.14)

*''கற்பென்று சொல்ல வந்தால் அஃது*
*இருகட்சிக்கும் பொதுவில் வைப்போம்''*

***பாரதியார் கவிதைகள் ப. 14***

என்கிறார் பெரியார். ஆண், பெண் இரண்டு பேருக்கும் சுயேட்சைக் கற்புமுறை ஏற்பட வேண்டும் என வலியுறுத்துகிறார். மேலும், சமுதாயம் சீரழிந்து கொண்டு வருகின்றது என்பதற்கு ஒருதலை கற்பேயாகும் என்பதை.

''கற்பு என்பது பற்றி பேசப்பட்டது. ஆண் பெண் கூட்டு வாழ்க்கையில் இப்போது வழங்கி வரும் கருத்தமைந்த கற்பு என்னும் வார்த்தையே அவசியமற்றது என்றும், அது வாழ்க்கை இன்பத்திற்குக் கேடு பயக்கின்றதே ஒழிய அதனால் நன்மை இல்லை என்று சொல்வேன். இன்று வழங்கும் கற்பு

பெண்களுக்கு மட்டுமே ஒழிய ஆண்களுக்கு இல்லை. அது பெண்களுக்கு நிர்ப்பந்திருப்பது போல் ஆண்களை நிர்ப்பந்திருப்பதில்லை, சமுதாயத்தில் ஒழுக்க ஈனம் ஏற்பட்டதற்கு காரணம் இந்த ஒருதலைக் கற்பேயாகும்.'' பெண்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதால் தான். இச்சமுதாயம் சீர்கெட்டுப் போகின்றது என்று புலம்புகிறார்.

**கல்வி போராட்டம் யாருக்கு?**

கல்வி என்பது ஒருவனின் திறமைகளை வளர்த்து, அறியாமையை நீக்குவதுதான் கல்வியின் நோக்கமாகும். ஆண்களுக்குக் கல்வி வழுங்கப்பட்டவர்கள் பெண்களுக்கு வழுங்கப்படவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

நமது நாட்டுப் பெண் மக்கள் ஆயிரத்துக்கு ஒருவர் கூடப் படிக்கவில்லை என்று சொல்வதை விடப் பெரிய ஒரு அவமானம் இந்நாட்டிற்கும் வேறெதுமில்லை என்றே சொல்லுவேன். வெறும் ஆண்களை மாத்திரம் படிக்க வைத்துவிட்டு பெண்களைப் படிக்க வைக்காமல் இருக்கும் நம் சமூகம் ஒரு கண்குருடற்ற வரவேற்பில் சில அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

''நான் சொல்லப்போவது ஒரு சமயம் அதிக பிரசங்கம் என்று சிலருக்கு தோன்ற கூறுமானால் என் மனோபாவத்தை தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். என்னவென்றால் துரதிஸ்டமாக நான் எப்போதாவது ஒரு சமயம் மந்திரியாக நேருமானால் குறைந்தது ஒரு பத்து வருஷத்திற்காவது ஆண் பிள்ளைகள் படிப்பிற்கு செலவு செய்வதை அடியோ விட்டு பெண் மக்களின் கல்விக்காகவே எல்லா பணங்களையும் செலவு செய்வேன் என்று தைரியமாக சொல்வேன்.'' (பெரியார் களஞ்சியம் தொகுதி - 1, ப. 29-30).

நம் நாட்டில் கல்வி நிதி நிலைகளுக்கு பொறுத்த வரை ஆண்களுக்கு அதிகமாகவும், பெண்களுக்கு குறைவாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. பெரியார் சொல்கிறார். நான் முதலமைச்சராக இருந்தால் ஆண்களுக்கு கல்விக் கற்க எந்த செலவு செய்யமாட்டேன் பெண் கல்விக்கு மட்டும் தான் செலவு செய்வேன் என்று குறிப்பிடுகிறார்.

**அலங்காரம் அடிமைப்படுகிறதா?**

பெண் தன்னை அலங்காரம் செய்துக் கொள்வதில் தான் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் தான் பெண்கள் அடிமைப்பட்டு வாழ்கின்றார்கள். பெரியார் அலங்காரம் செய்துகொள்ளும் பெண்களையும், தாசிப் பெண்களையும் ஒப்ப வைத்துக் கூறியுள்ளார்.

''பெண்கள் அடிமைப் பொருள்கள் என்றும் தாங்கள் மற்றவன் அனுபவிக்கும் பொருள் என்று தான் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள நினைப்பதே அவர்களின் அடிமை உணர்ச்சியின் அறிகுறியாகும். ஆழ்ந்த கருத்துக் கொண்டுதான் அவர்களுக்கு நடை, உடை, அணி முதலியவைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு தாசி என்பவள் அதாவது தான் பிறர் அனுபவிப்பதற்காக இருக்கின்றாள். அதன் பயனாய் ஜீவிக்கின்றவள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் ஒருத்தி தன்னை அலங்கரித்துக் கொள்வதில் இருக்கும் மனோபாவத்திற்கும் மற்ற பெண்கள் அலங்கரித்துக் கொள்வதில் இருக்கும் மனோபாவத்திற்கும் அதிக வித்தியாமிருப்பதாக நான் கருதவில்லை'' (பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை - 1, ப - 160)

பெண் ஆணுக்கு அடிமையானப் பொருள் என்னும் வழக்கம் காலங்காலமாக வழக்கத்திலிருந்து வருகின்றது. பெண் அணிகலன்கள் அணிந்துக் கொள்வது தம் வீரத்தையும், மானத்தையும் இழந்துள்ளார்கள் என்று கூறுகிறார்.

''பெண்களுக்கு காதுகளிலும் மூக்குகளிலும் ஓட்டைகள் போட்டதற்கும், காதில் மார்புவரை தொங்கும் படியும், மூக்கில் பல்லின் மேல் படும்படியும் நகைகள் போட்டுப் பாரத்தை ஏற்றியதற்குக் காரணம் பெண்களுக்கு மானம் வீரம் இருக்கக் கூடாதென்றும், ஆண்கள் வைவதால் பொறுத்துக்கொள்ளவும் அடிக்கப் போனால் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு முதுகை காட்டவும் வசமாய் இருக்கட்டும் என்றே கருதி மாட்டுக்கு மூக்கனாங் கயிறு போடுவதற்கு துளைகளைப் போல் துளை போட்டு அதில் கயிற்றுக்கு பதில் பாரத்தை தொங்க வைத்திருக்கிறார்கள் தவிர வேறு என்ன?'' பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை - II. ப-46. என்கிறார் பெரியார்.

பெண்கள் அணிகலன் அணிந்தால் அவர்களுக்கு மானமும், வீரமும் இருக்காது என்பதும் அவர்கள் பாரம் இழுக்கும் மாட்டிற்கு ஒப்பானவர்கள் என்றே நம் சமூகம் கருதி வந்துள்ளார்கள்.

**பெண்ணுக்கு சொத்துரிமை**

ஒரு குடும்பத்தில் மகன் மகள் இரண்டு பேரும் இருந்தாலும். இவர்களில் முன்னுரிமை கொடுக்கப்படுவது ஆண்களுக்கு மட்டும்தான். தந்தை இறந்தால் அக்குடும்பத்தின் சொத்து ஆண் மகனுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. பெண்மகவுக்கு மறுக்கப்பட்டு வந்தது. பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுத்தவர்களில் பெரியார் முதன்மையானவர்.

''இன்று நாட்டில் முன்னேற்றமடையாமல் இருக்கிற சமூகங்களை எடுத்துக் கொண்டால் இந்த உண்மை நன்கு விளங்கும். எனவே தான் பெண்கள் சமூகம் முன்னேற வேண்டுமானால் பெண்களுக்கு சொத்துரிமை வேண்டும் என்று கோருகின்றனர். இதுவரை பெண்கள் குடும்ப வாழ்க்கையைப் பற்றியும், குடும்பத்தில் எவ்வாறு திருப்தி படுத்த வேண்டும். எவ்வாறு அலங்காரம் செய்து கொள்ள வேண்டும் என்பன போன்ற ஆராய்ச்சியில் தான் இருந்து வந்தார்கள். இப்பொழுது தான் உரிமைகள் குறித்து சமத்துவம் குறித்தும் முன் வந்திருக்கிறார்கள்.''

ஒரு நாடு முன்னேற்றம் அடையவேண்டுமானால், பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட வேண்டும், என்றும் இவர்கள் இதுவரை குடும்ப நன்மைக்கே மட்டுமே வாழ்ந்து வந்துள்ளார்கள். இப்பொழுது தான் எங்களுக்கும் உரிமைகள் வேண்டும் என்று வாதாட முன்வைத்துள்ளார்கள் எனக் கூறுகிறார்கள். மேலும் இந்து மதத்தில் பெண்ணின் நிலைமையை நினைத்து வருந்துகிறார்கள்.

''பெண்களுக்கு சொத்துரிமையும் இல்லை, கல்வி வசதியும் இல்லை. இதுவும் மிகவும் கொடுமையான காரியமேயாகும். பெண்கள் சொத்துரிமை விஷயத்தில் இந்து மதக்கொள்கை மிகவும் அக்கிரமமானதாகும். பெண்கள் எப்போதும் சொத்தை சர்வ சுதந்திரமாய் அனுபவிக்க மார்க்கமில்லை விபச்சாரியாய்ப் போன பெண் தேவடியாள் தொழில் செய்யும் பெண் ஆகியவர்களுக்கு இந்து சமூகத்தின் சொத்துரிமை இருக்கிறது, என்றால் இந்து சமூகத்தின் ஈனத்தன்மைக்கு மடத்தன்மைக்கும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும். (பெரியார் களஞ்சியம் பெண்ணுரிமை – 1, ப. 235)

குடும்பத்தில் வாழும் பெண்களுக்கு சொத்துரிமை மறுக்கப்பட்டும், விபச்சாரத் தொழில் ஈடுபடும் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியிருக்கும் இந்து மதம் ஒரு மடத்தன்மை வாய்ந்தது எனக் கடிந்துரைக்கிறார்.

**முடிவுரை**

பெண்களின் பிரச்சனையை வெளிப்படத்த பல இயக்கங்கள் தோன்றியுள்ளன. அதுபோல பெரியார் பெண்களைப் பற்றி பல இடங்களில் பேசியுள்ளார். ஆதலால் பெரியார் பெண்ணியம் என்றுக் குறிப்பிடலாம். பெரியார் வலியுறுத்திய பெண்ணியம் தொடர்பானக் கருத்துக்கள் தற்காலத்தில் நடைமுறை வழக்கத்தில் கையாளப்பட்டு வருகின்றது, பெண் தொடர்பானப் பிரச்சனைகள் இன்னும் தீர்க்க முடியாததாக வழக்கத்தில் காணப்படுகிறது.

# ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்களின் வகை

**ச. ஆரோக்கியராஜ்,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*புனித சிலுவை கல்லூரி,*
*திருச்சி - 2.*

*முதுகலை தமிழாசிரியர்,*
*அரசு மேல்நிலைப்பள்ளி,*
*காணியாளம்பட்டி,*
*கரூர் - 621 301.*

**முன்னுரை:**

உலகில் தோன்றிய முதல் மொழி தமிழ்மொழி. இம்மொழி செவ்வியல் மொழியாக இடம்பெற காரணமாக இருந்தது சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியம் என்பது பாட்டும், தொகையும் சேர்ந்தது. இவற்றுள் பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இதனுள் பத்துப்பாட்டில் ஐந்து பாட்டு ஆற்றுப்படை நூலாக அமைந்துள்ளது. இவ்வாற்றுப்படை நூலில் கூத்தர், பாணர், பொருநர், விறலி பற்றிய குறிப்புகள் மிகுந்துள்ளது.

**தொல்காப்பியத்தில் ஆற்றுப்படை:**

சங்ககால தமிழரின் வாழ்வானது உலகிற்கே எடுத்துக்காட்டாய் அமைந்ததாகும். இவர்கள் வாழ்வின் நோக்கம் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்''[1] என்ற கணியன் பூங்குன்றனாரின் கொள்கையைப் பரப்பிய வாழ்வாகும். இச்சங்க காலத்தில் பல்வகைக் கலைஞர்கள் வாழ்ந்தனர் என்பதை தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். அவை:

*''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்*
*ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்*
*பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்*
*சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்''*[2]

**(தொல் - புறத்திணை - 32-36)**

என்ற பாடல்வரிகளின் படி ஆண்பாற் கலைஞர்களாக கூத்தர், பாணர், பொருநரும், பெண்பாற் கலைஞர்களாக பாடினியும், விறலியும் இடம் பெற்றிருந்தனர் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

**ஆற்றுப்படை இலக்கியத்தில் கலைஞர்கள்:**

ஆற்றுப்படை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள கலைஞர்கள் வறுமையில் வாடினும், கல்வியில் வளமை பெற்றிருந்தனர். இவர்களின் வாழ்வானது மன்னர் மற்றும் மக்களை மகிழ்விக்கும் வகையில் பாடியும் ஆடியும் வாழும் வாழ்வாகும். ஆற்றுப்படை இலக்கியம் இரு கூறுகளின் அடிப்படையில் கலைஞர்களின் வாழ்வை மேம்படுத்தியுள்ளது.

1. பொருள் வேண்டி ஆற்றுப்படுத்துவோர்
2. அருள் வேண்டி ஆற்றுப்படுத்துவோர்[3]

பொருள் வேண்டி ஆற்றுப்படுத்துவோர் பொருநர், பாணர், கூத்தர், விறலி என்பவர்களாவர். இவர்கள் தமக்கு ஏற்பட்ட வறுமைத்துயரைப் போக்கி வள்ளல்களை நாடி பாடி பரிசு பெற்று மீள்வர். இவ்வாறு பரிசு பெற்று திரும்பும் வழியில் மற்றொரு பொருநரை, பாணரை, கூத்தரை, விறலியை தான் பரிசில் பெற்ற வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவது இக்கலைஞர்களின் உயரிய பண்பாகும்.[4]

அருள் வேண்டி ஆற்றுப்படுத்துபவர் முருகன் அருள் பெற்ற நக்கீரன் ஆவார். இவர் திருமுருகாற்றுப்படையினைப் பாடியுள்ளார்.

**கலைஞர்களின் வகை:**

1. கூத்தர் வகை – கூத்தை நிகழ்த்துபவர்
2. பாணர் – பாட்டுப்பாடி மகிழ்விப்பவர்
3. பொருநர் – செய்தி, போர், உழவு நடைபெறும் இடத்திற்கு நேரில் சென்று பாடுபவர்
4. பாடினி, விறலி – பாடலுக்கு ஏற்ப நடனம் ஆடுபவர்[5]

இக்கலைஞர்களைத் தலைவராகக் கொண்டு ஆற்றுப்படை இலக்கியங்கள் படைக்கபட்டுள்ளன.

| வ. எண். | கலைஞர்கள் | நூல்கள் |
|---|---|---|
| 1. | கூத்தர் | கூத்தராற்றுப்படை |
| 2. | பாணர் | பாணாற்றுப்படை |
| 3. | சிறுபாணர் | சிறுபாணாற்றுப்படை |
| 4. | பெரும்பாணர் | பெரும்பாணாற்றுப்படை |
| 5. | பொருநர் | பொருநராற்றுப்படை |
| 6. | விறலி | விறலியாற்றுப்படை |

பாடினியை தலைவியாகக் கொண்டு தனி ஆற்றுப்படை நூல் பாடப்படவில்லை.

இக்கலைஞர்களைப் பற்றி தனித்தனியே பார்ப்போம்.

**கூத்தர்:**

இவர் கூத்து என்னும் கலை நிகழ்த்துவதில் சிறந்தவர். இவர் தனிக்கூத்திலும் கதை தழுவி வரும் கூத்திலும் வல்லவர்கள் ஆவர்.[7]

**கூத்தருக்கு வழங்கும் வேறு பெயர்கள்:**

கண்ணுளர் – மலைபடுகடாம் (50)
வயிரியர் – மதுரைக்காஞ்சி (628)
கோடியர் – பொருநர் ஆற்றுப்படை (57)
கூத்தர்கள் கூத்தாடும் இடம் ஆடுகளம் எனப்பட்டது.

**பாணர் சொல் விளக்கம்:**

பண் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்து முதல் நீண்டதுதான் ‘‘பாண்’’ என்பதாகும். ‘‘பாண்’’ என்ற சொல் அர் என்னும் பலர்பால் ஈறுபெற்றுப் பாணர் என்றாயிற்று. ‘‘பாண்’’ இசைப்போர் பாணர் எனவும் வழங்கப்பட்டார்.[8] மேலும், பாண் என்னும் சொல் பாட்டைக் குறிக்கும். பாட்டை ஆள்வோர் பாணர் எனவும் அழைக்கப்பட்டார்.

**பாணர்களில் ஆடவர்களை:**

சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைக்காரர் என பிங்கல நிகண்டு குறிப்பிட்டுள்ளது.

**பாணர்களில் பெண் பாணரை:**

பாடினி, விறலி, பாட்டி, மதங்கி என திவாகர நிகண்டு குறிப்பிட்டுள்ளது.

**பாணர் வகை:**

1. இசைப்பாணர் – பாட்டுப் பாடுபவர்
2. யாழ்ப் பாணர் – யாழ் இசைத்துப் பாடுபவர்
3. மண்டைப் பாணர் – மண்டை என்னும் உண்கலத்தைப் பயன்படுத்தி பாடி சோறு பெற்று வாழ்பவர்[9]

மேலும், யாழ்ப்பாணரை அவர்கள் வைத்திருக்கும் யாழின் அடிப்படையில்

1. சிறுயாழ் வைத்திருப்பவர் – சிறுபாணர்
2. பெரிய யாழ் வைத்திருப்பவர் – பெரும்பாணர்

எனவும் அழைக்கப்பட்டார்கள்.

**பொருநர் சொல் விளக்கம்:**

பொருநர் என்பாரும் கலைஞர்களே. இச்சொல்லுக்குப் பல பொருள் உண்டு. போர்வீரர், சிறுபறை இசைப்பவர், மற்றொருவரோடு ஒப்பிடப்பெறுகின்றவர் என்ற பல சொற்களில் குறிப்பிடப்படுகின்றனர்.

பொருநன் என்னும் சொல்லுக்கு அடைமொழியாக ஓர் எதிர்மறைக் குறிப்போடு கூடிய ‘‘பொராப் பொருநர்’’[10] என்ற சொல்லில் பொராப் என்ற சொல்லின் பொருள் போரிடாத அல்லது போர் செய்யாத வீரன் என்ற பொருளும் உண்டு.

போரிலும், அரண்மனைகளிலும் இப்பொருநர்கள் அரசரின் பரிவாரப் பகுதிகளாக இருந்தனர் என்று

*“கடற்படை யடற் கொண்டி*
*தண்சோழ நாட்டுப் பொருநன்”*[11]
புறநானூறு கூறுகின்றது.

**பொருநர் வகை**

இவர்கள் தடாரி, கிணை ஆகிய தோற்கருவிகளுடன் பாடினர். இவர்களை

1. ஏர்க்களம் பாடும் பொருநர் – உழவு
2. போர்க்களம் பாடும் பொருநர் – போர்
3. பரணி பாடும் பொருநர் – போர்[12]

என மூவகைப்படுவர்.

பொருநரில் சிலர் அரண்மனையிலும், போர்க்களத்திலும் பங்கு பெற்றுள்ளனர். தமிழில் தோன்றிய முதல் பரணி நூலான கலிங்கத்துப்பரணியைப் பாடிய ஜெயங்கொண்டார் போர்க்களத்தில் பங்கு பெற்று போரை நேரில் கண்டு பாடியுள்ளார்.

போர் பற்றி தகடூர் யாத்திரை என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

**விறலி:**

சங்க இலக்கியமான புறநானூறு, பதிற்றுப்பத்து மற்றும் ஆற்றுப்படை நூல்களில் விறலி பற்றிய குறிப்பு உள்ளது. பொருநர், கூத்தர், பாணர் ஆகியோர் யாழ் மீட்டிப்பாடும் பொழுது அவர்கள் பாடிய பாடலுக்கேற்ப நடனம் ஆடுபவள் விறலி ஆவாள். இவளை ‘‘கிணைமகள்’’ எனவும் அழைத்தனர். இவள் கிணை என்னும் பறையினை ஒலிக்கக்கூடிய பாணன் மனைவி என சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது.

‘‘வளக்கை கிணைமகள் வள்உகிர் குறைந்த’’[14]
மேலும், சங்க இலக்கியத்தில் விறலி பற்றி பல சான்றுகள் உள்ளன.

நன்னுதல் விறலியர், கூந்தல் விறலியர், மடமானோக்கின் வானுதல் விறலியர், இலங்குவளை விறலியர், செறிதொடி விறலியர், இன்குரல் விறலியர் என பல தொடர்களும் விறலி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், சிறுபாணாற்றுப்படை விறலியின் இயல்பை விளக்குகின்றது.

விறலி போர்க்களத்தில் பங்கு பெற்றாள் என்ற செய்தி, பதிற்றுப்பத்து, புறநானூறு மற்றும் முல்லைப்பாட்டு போன்ற இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், விறலி போர்க்களத்தில் வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் நடனம் ஆடினாள் என்ற செய்தியும் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாடினி:**

பொருநர் ஆற்றுப்படையில் பொருநரின் மனைவி பாடினி எனவும், புறநானூற்றில் பாணன் மனைவி பாடினி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[15] பொதுவாகப் பார்த்தால் பல்வகைக் கலைஞர்களில் பாடினியும் ஒருவள் என்பது அறியப்படுகின்றது.

பொருநராற்றுப்படை தவிர, வேறு எந்த ஆற்றுப்படை நூல்களிலும் பாடினி பற்றிப் பேசப்படவில்லை. இதில் பொருநரின் சுற்றமாக பாடினி பேசப்படுகின்றாள்.

பாணன், பாடினி இருவரும் இணைந்து பாடல் பாடினர் என்பதை புறநானூறு வழி அறியலாம்.

*‘‘புறம் பெற்ற வயவேந்தன்*
*மறம் பாடிய பாடினியும்மே’’*[16]

இதனை வலுப்படுத்தும் விதமாக பாணனின் மனைவி பாடினி, பாணிச்சி என்று அழைக்கப்பட்டாள். அவள் தன் கணவனோடு சேர்ந்து பாடியிருக்கவோ, அபிநயம் தோன்ற ஆடியிருக்கவோ கூடும் என தமிழ் வீரநிலைக் கவிதை என்னும் நூலில் கைலாசபதி குறிப்பிட்டுள்ளார்.

பொருநராற்றுப்படையில் பாடினியின் தோற்றப் பொழிவு வருணிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை:**

ஆற்றுப்படை நூல்களில் இடம் பெற்ற கலைஞர்களான கூத்தர், பாணர், பொருநர், விறலி, பாடினி பற்றியும் அவர்களின் வகைகள் பற்றியும், இவர்கள் இசைத்தமிழை வளர்த்தனர் என்ற செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளது.

முத்தமிழையும் வளர்க்க இசைக்கலைஞர்கள் பெரிதும் பங்காற்றியுள்ளனர். இசைக்கலைஞர்கள் வள்ளலைத்தேடி பெற்று பழுமரம் நாடிய பறவை போல நாடோடி வாழ்வை மேற்கொண்டு தமிழ் இலக்கியம் வளர் பெரும் பங்காற்றினர். இவர்கள் வாழ்வியலின் நோக்கம்

மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதும், அப்படி அவர்கள் காட்டும் வழியான மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும் என்பது அவர்களின் நோக்கமாகும்.

**மேற்பார்வை நூல்கள்:**


1. ஔவை சு. துரைசாமிபிள்ளை, புறநானூறு மூலமும் உரையும் I - 192 - 1 - ப. 537.

2. புலியூர் கேசிகன், தொல்காப்பியம் - புறத்திணை 32-36இ ப-246.

3. சேதுராமன்.பி., ஆற்றுப்படையில் தமிழரின் வாழ்வியல் கூறுகள், ப.12-13

4. மேலது, ப. 11.

5. மேலது, ப.2.

6. பாக்கியமேரி.ஏ, வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.5

7. சேதுராமன், மு.கு.நூ, பா. 1.

8. வரதராஜன், தமிழ் பாணர் வாழ்வும், வரலாறும், ப. 5.

9. மேலது, ப.5.

10. ஔவை சு.துரைச்சாமி, புறநானூறு - 386-18-19- ப. 324.

11. மேலது, 382-1-3- ப.526.

12. பாக்கியமேரி, மு.கு.நூ - ப.93.

13. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி - ப. 543.

14. தமிழ்முடி, சிறுபாணாற்றுப்படை, ப.27.

15. மா. இராசமாணிக்கனார், மு.கு.நூ - பக. 534.

16. ஔவை துரைசாமி, மு.கு.நூ - 11-10-11, ப. 42.

# கவிஞர் அறிவுமதியின் கவிதைகளில் மனித உரிமைகள் - ஒரு பார்வை

**மா. சரவணவேல்**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*
*தமிழாய்வுத் துறை*
*உருமு தனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி.*

*முதுகலை ஆசிரியர் (தமிழ்)*
*அரசு மேல்நிலைப்பள்ளி, அன்பில்*
*திருச்சிராப்பள்ளி மாவட்டம்.*

**0.1. அறிமுகம்:**

மனித உரிமைகள் என்ற கருத்து உலக அளவில் எழுதப்பட்டும், பேசப்பட்டும் வளர்ந்து வருகிறது. இரண்டாம் உலகப்போர் ஏற்படுத்திய பேரழிவு மனிதம் பற்றிய எண்ணங்களை விதைக்கத் தொடங்கின. உலக நாடுகளிடையே, தனி மனிதர்களிடையே நிகழ்ந்த ஆதிக்கச் சிந்தனைகள் அவற்றை வளர்த்தன. ஐ.நா. அமைப்பு நாடும், மக்களும் அமைதியாக வாழ மனித உரிமைப் பிரகடனத்தை அறிவித்தது. பின்னர் உலகநாடுகள் மனித உரிமையின் மாண்புகளை உணர்ந்தன. தேசிய அளவில் மனித உரிமையின் சிந்தனைகள் வரலாற்றில் காலந்தோறும் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன. தனிமனித வாழ்வில் நிகழும் சாதீய, பொருளாதார ஒடுக்குமுறைகள், குடும்ப அமைப்பில் நிகழும். ஆதிக்க உணர்வுகள் போன்றன மனித உரிமையின் தேவையை வலியுறுத்தின. அரசியல் இயக்கங்கள், இலக்கிய அமைப்புகள் மனிதம் காக்கப் போராடி வருகின்றன. தமிழ் இலக்கியங்கள் சங்க காலம் தொடங்கித் தற்காலம் வரை மனித உரிமைச் சிந்தனைகளை விதைத்து வந்துள்ளன. தற்காலத்தில் வாழும் கவிஞர் அறிவுமதி தம் கவிதைகளில் மனித உரிமையின் கூறுகளைப் பதிவு செய்துள்ளார். இக்கட்டுரை கவிஞர் அறிவுமதியின் கவிதைகளில் இடம் பெறும் மனித உரிமையின் குரல், மாட்சி அவை இயங்கும் பல்வேறு தளங்கள் பற்றி ஆய்வு செய்கிறது.

**0.2. மனித உரிமைப் பதிவுகள்:**

உலக அளவில் மனித இனம் உரிமையுடனும் அமைதியுடனும் வாழ ஐ.நா. பொதுமன்றம் ஏற்படுத்தப்பட்டது. அம்மன்றம் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமை பிரகடனத்தை வெளியிட்டது. அப்பிரகடனம் மனித உரிமைக் கொள்கையை வலியுறுத்துகிறது.

**0.2.1. மனித உரிமையின் கொள்கைகள்:**

ஐ.நா. வின் மனித உரிமைக் கொள்கைகளாக திரு. இராஜா முத்திருளாண்டி கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடுகின்றார்.

- யாரும் யாரையும் அடிமை கொள்ளுதல் கூடாது
- மனிதநேயம் எங்கும் சிறக்க வேண்டும்.
- மனிதர்களைத் துன்புறுத்தும் கொடுமைகள், சித்ரவதைகள் எவர்மீதும் மேற்கொள்ளக் கூடாது.
- நீதியான சட்டத்தின் ஆட்சியே எங்கும் நிலவவேண்டும்.

❖ தனி நபர்களின் குடும்பம், வீடு, தனிமை, தகவல்பரிமாற்றம் மதிக்கப்பட வேண்டும்.

❖ ஆண், பெண் ஆகிய இருவரது முழு இசைவுடன் திருமணங்கள் நிகழ்வதாக இருக்க வேண்டும்.

❖ அனைவருக்கும் நலவாழ்வு, சுகாதாரம், கல்வி, வேலை, உரிமை, ஓய்வு, சமவாய்ப்புகள் என்பவை உறுதி செய்யப்பட வேண்டும்.

இம்மனித உரிமைக் கூறுகள் உலக அளவில், தேசிய அளிவல் மீறப்படும்பொழுது ஐ.நா.பொது மன்றம் நேரடியாகத் தலையிட்டு நீதி வழங்குகின்றது.

**0.3. கவிஞர் அறிவுமதி கவிதையில் மனித உரிமைக் கூறுகள்:**

மனித உரிமையின் குரல்களாக இலக்கியங்கள் ஒலிக்கின்றன. சமூகநிகழ்வில் மனித உரிமைகள் மீறப்படும்பொழுது அவற்றைப் பதிவு செய்வதால் இலக்கியம் முதலிடம் பெறுகின்றது. இதனை,




இவ்வரைபடம் மூலம் விளக்கலாம். கவிஞர் அறிவுமதியின் கவிதைகளில் மனித உரிமையின் குரல்கள், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், சாதி, சமய, பெண்கள் ஒடுக்குமுறைகள், கல்வி, காதல், நாட்டுணர்வு ஆகிய தளங்களில் ஒலிக்கின்றன.

**0.4. அரசியல் உரிமைகள்:**

உலக அளவில் முதலாளித்துவ அமைப்புகள் தம் ஆதிக்கத்தை வளரும் நாடுகளிடத்தும், மூன்றாம் உலக நாடுகளிடத்தும் செலுத்துகின்றன. தேசிய அளவில் மைய அரசு மாநில அரசு மீது தன்னுடைய அதிகாரத்தைத் திணிக்கிறது. மாநிலங்களில் நிகழும் உரிமைப்போர்கள் மைய அரசின் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுகின்றன. இதனால் மாநில அரசுகள் பணிந்து செல்கின்ற நிலையில் இருந்தாலும் உரிமைகளுக்காகக் குரல் எழுப்புகின்றன. இதனைக் கவிஞர் அறிவுமதி

*“எங்களின்*
*உயிர்நிலைகள்*
*கசக்கப்படுவதால்*
*விடுதலை வேட்கை*
*காயப்படப் போவதில்லை”          (அறி. ப. 58)*

என்று ‘பகத்சிங் பேசுகிறான்’ என்ற தலைப்பில் எழுதியுள்ள கவிதையில் அரசியல் உரிமைகள் பறிக்கப்படுதையும் அதற்கெதிரான எதிர்ப்புரிமையையும் சுட்டுகிறார்.

**0.3.2. பொருளாதார உரிமைகள்:**

பொருளாதார சுரண்டல் முதலாளிகளுக்கும் உழைப்பாளிகளுக்கும் இடையே நிகழ்ந்து வந்துள்ளது. உலக அளவில் வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையே இப்பொருளாதாரச் சுரண்டல் நிகழ்கிறது. ஆதிக்க நாடுகள் தங்கள் பொருளாதார பலத்தால் வளரும் நாடுகளின் பொருளாதாரத்தைச் சுரண்டல் உலக அளவிலும், தனி மனிதர்களிடத்தும் நடைபெறுகின்றது. தாழ்த்தப்பட்ட மக்கள் பொருளாதாரச் சுரண்டலுக்குள்ளாவதைக் கவிஞரர் அறிவுமதி,

*“ஊருக்குள் உலவுகிறான்*
*மார்வாடி*
*ஒதுக்குப் புறத்தில் ஆதிதிராவிடன்”*

***(அறி. ப. 210)***

என்ற கவிதை மூலம் புலப்படுத்துகிறார்.

**0.3.3. கலை, அறிவியல் உரிமைகள்:**

சமூகத்தின் பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளில் பங்கெடுப்பதற்கும் உரிமை உண்டு. கலை, இலக்கிய உருவாக்கத்தில் உருவ, உள்ளடக்க ரீதியில் பழமைவாதம் இடம் பெறுகின்றன. அவற்றை வர்க்க நலன் சார்ந்த நோக்கில் அணுகவேண்டியது மனித உரிமையின் பாற்பட்டது. இதனைக் கவிஞர் அறிவுமதி,

*“எழுத்துப் பிழைகளோடு*
*சுவர்களில்*
*எழுதப்படுகிற*
*புரட்சி வாசகங்களுக்கு*
*முன்னால்*

*நமது*
*சீர்*
*தளை*
*அடி*
*தொடை எல்லாமே*
*மண்டியிடுகின்றன''* **(அறி. ப. 59)**

என்ற கவிதை மூலம் இலக்கிய வெளியீட்டில் இருக்கும் உரிமைத் திறனை வெளிப்படுத்துகிறார்.

அறிவியலால் நாம் பயன்பெற்றது அதிகம். அறிவியல் ஆக்கத்திற்குப் பயன்படாது அழிவினை ஏற்படுத்தவும் செய்கின்றன. இதன் தன்மையைக் கவிஞர் அறிவுமதி,

*''அறிவியல்*
*விரல்கள்*
*நச்சு*
*நகம்*
*வளரும்''* **(அறி. ப. 163)**

என்றும்

*''வெளிகளிலே*
*கற்பழிப்பு*
*அச்சுறுத்தும்*
*பொது*
*மரணம்*
*அணுத்*
*திமிர்*
*அடக்கு''* **(அறி. ப. 160)**

என்றும் தம் கவிதைகளில் அறிவியலால் நிகழும் உரிமை மீறலைச் சுட்டுகிறார்.

**0.3.4. சாதி, மத, நாட்டு உரிமைகள்:**

சாதி, மதங்கள் தனி மனித உரிமையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. மனு தொடங்கி இன்றுவரை வருணாசிரமக்கோட்பாடு தம் படியில் மக்களை இறுக்கி வந்துள்ளது. பார்ப்பனச்சாதி ஆதிக்கத்தை கவிஞர் பாரதியார்,

*''பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே –*
*வெள்ளைப்*
*பரங்கியரை துரை என்ற காலமும் போச்சே .....''*
**(பா.க.ப. 50)**

என்று பாடுகிறார். இருப்பினும் சாதி ஆதிக்கம் தற்காலத்தில் புதிய பரிணாமத்தினைப் பெறுகின்றது. இதை அறிவுமதி.

*''தீண்டாத விதை*
*போதி மரம்*
*அம்பேத்கார்''* **(அறி. ப. 210)**

என்றும்
*''கறுப்பின் குரல்தான்*
*புறவை என்பதால் மறந்தார்களோ*
*குயில்பாட்டு''* **(அறி. ப. 210)**

என்றும் தம் கவிதைகளில் சாதீய உணர்வுகளால் ஏற்பட்ட உரிமை மீறலைப் பதிவு செய்துள்ளார்.

சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கிய இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நாட்டுரிமை கிடைக்காது போராடும் மக்களைப் பற்றிக் அறிவுமதி,

*''அகதிமுகாம்*
*மழை வருகிறது*
*மண்வாசனை''* **(அறி. ப. 213)**

என்றும்

*''ஈழத்தில் தமிழன்*
*தெற்கில் பள்ளன்*
*சாகப் பிறந்த சாதி''* **(அறி. ப. 210)**

என்றும் தன் கவிதையிலும் இன உணர்வையும், ஈழ விடுதலைக்குக் குரல்கொடுக்கும் நாட்டுரிமைச் சிந்தனைகளையும் கூறுகிறார்.

தற்காலத்தில் மதவெறி நாளும் தலைவிரித்தாடுகின்றன. மதவாதக் கொள்கையின் பிடியில் இன்று நாடு சிக்கிக் கொண்டுள்ளது. மதம்சாதி வெறியைத் தூண்டுகிறது. அதனைக் கவிஞர்

*''நாங்களும்*
*இந்து*
*நீங்களும்*
*இந்து*
*என்றால்*
*உங்களுக்கு*
*மட்டும்*
*ஏனடா*
*பூணூல்''* **(அறி. ப. 292)**

என்று மதத்தின் பெயரால் சமத்துவம் பாதிப்புக்குள்ளாவதைக் கூறுகிறார்.

மதம் சாதியின் வேர்களைச் சீண்டும் வீதத்தை அவர்,

*''நாம்*
*தமிழர்களாகப் பிரிந்து விடக் கூடாது*
*என்பதற்காக*
*இன்று*
*மதத்தால்*
*நம்மை*
*சேர்க்கிறார்கள்''*

**(அறி.ப. 292)**

என்று தமிழகத்திற்கான உரிமை பின்னுக்குத் தள்ளப்படும் பார்ப்பனீய முயற்சியைச் சாடுகிறார்.

**0.3.5. காதல், பெண்கள், உரிமைகள்:**

சமூக அமைப்பில் காதல் தனிமனிதனின் உரிமை ஆகும். காதலிப்பதற்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் தடையாகப் பல காரணிகள் இருக்கின்றன. ஓர் ஆண் மற்றொரு பெண்ணைக் காதலிப்பதற்குக் கடக்க வேண்டிய படிநிலைகளைக் கவிஞர் 'என் பிரிய பூவே' என்ற தலைப்பில் கூறுகிறார்.

*''இன்று*
*அம்மாவைத் தாண்டி*
*அப்பாவைத் தாண்டி*
*அக்காள் மகளைத் தாண்டி*
*சாதியைத் தாண்டி*
*பணத்தைத் தாண்டி*
*சோதிடரைத் தாண்டி*
*மலரே*
*உன்னைப் பறிக்க''*

**(அறி.ப. 39)**

என்று காதல் உரிமையை தடையான படிநிலைகளைக் கூறுகிறார். இதற்குக் காரணம் பெற்றோர்கள், பழமையான சிந்தனையில் செயல்படுவதுதான் காரணம் என்பதனை,

*''கழுத்தை*
*நீட்ட சொன்ன இடத்தில்*
*நீட்டிய*
*இந்த அம்மாக்களுக்கு*
*நம் ஏக்கங்கள்*
*எங்கேயடி*
*புரியப் போகிறது''*

**(அறி. ப. 29)**

என்று காதல் உரிமையின் நிலையினை உணர்த்துகிறார். காதல் உரிமை மறுக்கப்படும் பொழுது அதனை எதிர்த்து,

*''பெற்றோர்களுக்காகக்*
*காதலைச்*
*சாகடிப்பதைக் காட்டிலும்*
*காதலுக்காகப்*
*பெற்றோரைச் சாகவிடுவது*
*பாவமில்லை''*

**(அறி. ப. 40)**

என்று எழுச்சி முழக்கமிடுகிறார்.

பெண்கள் குடும்ப அமைப்பில் ஆணின் அடிமைகள். அவர்கள் ஆண்களுக்குப் பணம் ஈட்டுவதற்காகவும் பிள்ளை பெற்றுக் கொடுக்கும் எந்திரங்களாகவும் வாழ்கின்றனர். பெண்களின் உரிமை முழுமைப்படவில்லை என்பதையும் பெண்கள் துயரத்தையும் கவிஞர் அறிவுமதி,

*''உழுது வந்த களைப்பில்*
*படுக்கும் மாடுகள்*
*காயம் தேடும் காக்கை''*

**(அறி. ப. 139)**

என்ற கவிதையின் வாயிலாக விளக்கி உரிமை, ஆணுக்கு நிகராகச் சமூகத் தளத்தில் வேலை செய்து வந்தபின் பெண்ணுக்கு இல்லை என்ற அவல நிலையினைச் சுட்டுகிறார். இதனை மேலும்,

*''கணவனுக்கு உடல்*
*குழந்தைக்கு உயிர்*
*ஆறுதலாய் மூன்று நாட்கள்''*

**(அறி. ப. 14)**

என்ற கவிதையிலும் வெளிப்படுத்தியுள்ளார். உழைக்கும் வேலை தளத்தில் பெண்கள் சுரண்டப்படுகின்றனர். மேலும், பாலியல் வன்கொடுமைகள் நிகழ்கின்றன இதனைக் கவிஞர்,

*''மரக்கிளையில் குழந்தை*
*வரப்பில் பண்ணையார்*
*பயிரில் சிந்துகிறது பால்''*

**(அறி. ப. 209)**

என்ற கவிதையிலும் மனித உரிமை பறிக்கப்படுவதைக் கூறுகிறார்.

**0.4. முடிவுரை:**

அமெரிக்க ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக நாடுகளை நெருக்குதலுக்குள்ளாக்கும் தற்காலத்தில் மனித உரிமைகளைக் காப்பது இன்றியமையாததாகிறது. உலகமயமாதல், ஒருலகச் சிந்தனைகள் பரவும் தற்காலத்தில் பணக்கார முதலாளிகளின் ஆளுகையில் உலக இயக்கம் தீர்மானிக்கப்படுகிறது. சந்தைப் பொருளாதாரம் கோலோச்சும் தற்காலச் சூழலில் பணக்காரர்களின் சட்டைப் பைக்குள் ஏழைகள் முடங்க வேண்டிய நிலை உள்ளது. இத்தகைய சூழலில் கவிஞர் அறிவுமதியின் கவிதைகளில் மனித உரிமையின் வேர்கள் தமிழ்ப் புலத்தில் பதிந்துள்ளன. மனித நேயச் சிந்தனைகளை, மனித உரிமைகளை, கருத்தியல் நிலையில் கவிஞர் அறிவுமதியின் கவிதைகள் புனைந்துள்ளன. மனித நேய உணர்வுகள் மதிக்கப்படுவதும் சமூக புரட்சிகள் அங்கீகரிக்கப்படுவதும் மனித உரிமையை மாண்பறச் செய்யும் என்பதைக் கவிஞர் அறிவுமதியின் கவிதைகள் தெளிவுபடுத்துகின்றன.

# சூ∴பித்துவ இறையியலும் குணங்குடி மஸ்தான் சாகிபின் சதகங்களும்


**உ. அலிபாவா**
*பேராசிரியர்*
*தமிழியல்துறை*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்*
*திருச்சிராப்பள்ளி - 620 024.*
*alibavapkm@gmail.com*


இஸ்லாமிய மெய்ஞ்ஞானத்தைச் சூ∴பித்துவம் என்பர். இத்தத்துவத்தைப் பின்பற்றக் கூடியவர்கள் சூ∴பி மெய்ஞ்ஞானிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இறைவனின் இயல்புகளைத் தனியாகக் கூறுகின்றனர். இந்நெறியினைச் சார்ந்து தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கியவர் குணங்குடி மஸ்தான் சாகிபு. இவர் பாடியுள்ள முகியித்தீன் சதகத்திலும் அகத்தீசன் சதகத்திலும் இந் நெறி வெளிப்படுகிறது.

**சூ∴பித்துவம்**

'நானுமில்லை நீயுமில்லை இருப்பது இறைவன் ஒருவனே' என்பது சூ∴பித்துவக் கொள்கை. அனைத்துப் பொருட்களிலும் அல்லாஹ் ஒருவனே நிலையானவன். அவன் அனைத்துப் பொருட்களிலும் ஆட்கொண்டுள்ளான். அனைத்துப் பொருட்களும் அவனுள் அடக்கம் பெறும். இவ்வுகில் கண்ணிற்குத் தெரியும் அனைத்து உயிரினங்களும், தெரியாத உயிரினங்களும் அவனிடமிருந்தே தோற்றம் கொள்கின்றன. ஆனால் அவை அவனிலிருந்து வேறானவை அல்ல. சமயங்கள் தங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் கொண்டிருக்கலாம். இருப்பினும் அவை அனைத்துமே உண்மைக்காகவே, உண்மையை நிலை நிறுத்துவதற்காகவே பயன்படுகின்றன. இக்கருத்தின் அடிப்படையில் உண்மையைக் கண்டறிவதற்கு ஏற்ற வகையில் இஸ்லாத்தில் சூ∴பித்துவம் உண்மைத் தத்துவமாக உள்ளது. சூ∴பித்துவம் நன்மை, தீமை என்ற நிலைகளுக்கு அப்பாற்பட்டு இறை ஓர்மை என்ற ஒன்றை மட்டுமே உள்ளத்தில் நிலைநிறுத்துவதாகும். அல்லாஹ்வே மனித ஓர்மைக்கு முழுமுதலாக அமைபவன். அல்லாஹ்வே மனித சக்தியைத் தீர்மானிக்கிறான். எனவே எந்த ஒரு மனித சக்தியும் அவனது கட்டுப்பாட்டிற்குள்ளாகவே அமைதல் வேண்டும்.

ஹதீதுல் குத்ஸி, "என் அடியான் என்னை அணுகுகின்றான். நான் அவனை நேசிக்கின்றேன். நான் அவனை நேசிக்கும் பொழுது நான் அவனுடைய காதாக

ஆகி விடுகின்றேன். எனவே அவன் என் செவி மூலம் செவியுறுகிறான். நான் அவனுடைய கண்ணாகி விடுகிறேன். எனவே அவன் என் கண் வழியாகக் காண்கிறான். நான் அவனுடைய நாவாக ஆகி விடுகிறேன். எனவே அவன் என் நாவால் பேசுகிறான். நான் அவனுடைய கையாகி விடுகிறேன். எனவே அவன் என் கையால் செயலாற்றுகின்றான்"(அப்துற்-றஹீம், இஸ்லாமியக் கலைக் களஞ்சியம், தொகுதி மூன்று, ப.268) என்று இயம்புகிறது.

**நாயக நாயகி பாவம்**

நாயக நாயகி பாவத்தில் இறைவனை நாயகனாகவும் ஆனமாவை நாயகி யாகவும் பாவித்துப் பாடுகின்ற மரபை மாற்றி சூ∴பிகள் இறைவனை நாயகியாகவும் ஆன்மாவை நாயகனாகவும் பாவித்துப் பாடியுள் ளனர். இதற்கு அப்துல் ரகுமான், "சூ∴பிகள் பரம்பொருளைப் பெண்ணாகப் பாவிப்பதற்குப் பல காரணங்கள் உள. அழகு என்பது பரிபூரணம்; தெய்வீகப் பண்புகளின் வெளிப்பாடு அழகின் உச்ச அளவு பெண்ணிடமே அமைந்திருக்கிறது. மேலும் பெண்மை படைக்கும் ஆற்றல் பெற்றது. தன் அழகால் ஈர்த்துக் காதல் கிளர்ச்சியைத் தூண்டி இணைப்புக்குத் துடிக்க வைப்பது. ஆண்மை கவரப்படுவது; ஏங்குவது; துடிப்பது; காதலை வெளிப்படுத்துவது. இதனால் சூ∴பிகள் இறைவனைக் காதலியாகப் பாவித்தே பாடுவர்" (அப்துல் ரகுமான் (ப.ஆ.), குணங்குடியார் பாடற்கோவை, குறிப்புரை, ப.எ.இ.) என்றும் "காதல் மற்ற உறவுகளையும் உதறச் செய்யும் பேருணர்வு; தியாகம் செய்யத் தூண்டும் புனித உணர்வு. இறைவனிடம் தொடர்பு கொள்ள இதைவிடச் சிறந்த உறவு வேறு என்ன இருக்க முடியும்? குணங்குடியார் இந்த சூ∴பி நெறிப்படியே பாடுகிறார்"(அப்துல் ரகுமான்(ப.ஆ.), குணங்குடியார் பாடற்கோவை, குறிப்புரை, ப.எ.இ.) என்றும் காரணம் கூறுகிறார்.

சூ∴பிகளின் இறைக்கோட்பாடு குறித்து சி. நயினார் முகம்மது, "இறையேற்புக் கொள்கை (Deism) இறைவன் உண்டென்றும் பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டுள்ளான் என்றும் உயிர்கள் உடலுடன் அழிவனவென்றும் சொர்க்கமோ நரகமோ இல்லை என்றும் கூறும். அனைத்திறைக் கொள்கை (Pantheism) பிரபஞ்சம் அனைத்தும் இறைவனின் தோற்றமே தவிர வேறில்லை என்று கூறும்" (சி. நயினார் முகம்மது, மஸ்தான் சாகிபும் தாயுமானவரும் - ஓர் ஒப்புநோக்கு, ப. 237) என்று விளக்குகிறார். சூ∴பித்துவக் கொள்கை, "இறைக்கொள்கை (Theism) கடந்துள்ள பரத்துவத்தை வலியுறுத்தும் இறையேற்புக் கொள்கைக்கும் பாலம் போன்றுள்ளது" (M. Shams, Sufism and Savism A Comparative Study, Thesis for Ph.D. Submitted to Annamalai University, Annamalainagar, 1976, p.130).

சூ∴பித்துவ நெறியில் இறைவனின் இயல்பு பற்றி,

> "ஆதியும் அவனே; அந்தமும் அவனே, தோற்றுவதும் அவனே; மறைந்திருப்பவனும் அவனே, அவன் சகலத்தையும் நன்கறிந்தவன்" (57:3).
>
> "அல்லாஹ் மண், விண் இவ்விரண்டில் ஒளியாய் இருக்கிறான்" (24:35).
>
> "நான் அவனை (மனிதனை) உருவாக்கி என்னுயிரைப் புகுத்தினேன்" (15:29).
>
> "நான் உங்களின் உயிர் (நப்ஸ்) களிலே இருக்கிறேன். என்னை நீங்கள் பார்க்க வேண்டாமா?" (51:21).
>
> "அல்லாஹ் எவனுக்கு ஒளி ஊட்டவில்லையோ அவனுக்கு (எங்கிருந்தும்) எவ்வித ஒளியும் கிட்டாது" (24:40).
>
> "இறைவண்ணத்தில் தோய்வீராக; இறைவனைப் போல் அதிகமாக வண்ணத்தைக் கொடுப்போர் யார்?" (2:138).

"யார் நம் வழியில் சிரமம் எடுத்து முயல்கிறார்களோ அவர்களுக்கு நாம் நேர்வழியைக் காண்பிப்போம். நிச்சயமாக அல்லாஹ் நற்செயல் புரிவோருடன் இருக்கிறான்" (29:69).

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து அவனளவில் செல்வதற்கான வழியைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும் அவனுடைய பாதையில் தியாகம் புரியுங்கள். நீங்கள் வெற்றி பெறலாம்" (5:35).

"(நபியே) நீர் (மண்ணை) எறிந்தபோது அதை நீர் எறியவில்லை; அல்லாஹ்தான் (அதனை) எறிந்தான்" (8:17)

போன்ற திருக்குர்ஆன் வசனங்களும்,

"சன்மார்க்க நெறியின் தலையாய பொருள் இறைவனை அறியும் மெய்ஞ்ஞானமாகும்".

"உன்னில் இறைப்பண்புகளை உருவாக்கிக்கொள்".

"தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்".

"அல்லாஹ்வில் இணைந்துவிடு; இல்லாவிட்டால், அல்லாஹ்வை அடைந்தவர்களோடு ஒன்றாகிவிடு; அவர்கள் உன்னை அல்லாஹ்வுடன் சேர்த்து விடுவார்கள்"

ஆகிய நபிமொழிகளும் குறிப்பிடுகின்றன. இதனைக் குணங்குடி மஸ்தான் சாகிபின் சதக நூல்களும் விளக்குகின்றன.

மஸ்தான் சாகிபு ஊன் ஆகி, ஊனில் உயிர் ஆகி, எல்லா உலகும் ஆகி, ஒன்றாகி இரண்டும் ஆகி, அகமாகிப் புறமாகி, ஒளியாகி, இருளாகி, ஊரோடு பேருமாகி, காடாகி, மலையாகி, போர் செய்கின்ற காட்டு மிருகங்களுமாகி, கங்குல் பகலாகி, மதியாகி, வெளியாய்க் காணப்பட்ட பொருள்கள் யாவுமாகி, நானாகி, நீயாகி, அவனாகி, அவளாகி, நாதமொடு பூதமாகி என்று எல்லாப் பொருள்களிலும் இறைவனைப் பார்ப்பதை,

**ஊனாகி, ஊனில் உயிராகி, எவ்வுலகும் ஆய்**
**ஒன்றாய் இரண்டும் ஆகி**
**உள்ளாகி, வெளியாகி, ஒளியாகி, இருளாகி**
**ஊருடன் பேரும் ஆகிக்**
**கானாகி, மலையாகி, வளைகடலும் ஆகி, வெளி**
**கண்டபொருள் எவையும் ஆகி**
**நானாகி, நீயாகி, அவனாகி, அவளாகி,**
**நாதமொடுபூதம்ஆகி**
**(முகி,சத.பா.22)**

**கல்லிலோ, மண்ணிலோ, விண்ணிலோ,**
**அடிமைஇரு**
**கண்ணிலோ, கண்ணீரிலோ,**
**கரையிலோ, கடலிலோ, உடலிலோ, உயிரிலோ,**
**கதியான பூமிதனிலோ,**
**அல்லிலோ, பகலிலோ, நல்ல பத இல்லிலோ,**
**அருவிலோ, உரு மீதிலே**
**அறிவிலோ, அறியயொணா மறையிலோ**
**மறைகண்முதல்**
**ஆகம புராணத்திலோ**
**செல்வமிகு துரை ராஜரே தேவரீர்க்குநிலை**
**திவ்வியகுணங்குடியிலோ**
**(முகி.சத.பா.33)**

என்னும் பாடல்களின் வழி குணங்குடி மஸ்தான் சாகிபு விளக்குகிறார். மேலும் இவர்,

**ஆத்தாளை யெனையீன்ற வாலையா நந்தியை**
**யணைந்திடற் கருள் புரியவும்**
**அம்பிகை மனோன்மணிக் குண்டலித் தாய்பதமும்**
**அர்ச்சிக்க வருள்பு ரியவும்**
**பார்த்தாளை யாவையுங் காத்தாளை யென்றும்**
**பணிந்திடற் கருள்பு ரியவும்**
**பரையாளை மாநல்ல சிறையாளை யென்வசம்**
**பண்ணிவைத் தருள்பு ரியவும்**
**சேர்த்தாளை வான்கருணை பூத்தாளையொத்தபடி**
**சென்றாட வருள்பு ரியவும்**
**சிறியாளை மெத்தவும் பெரியாளை யறியவுஞ்**

**சிறியவெற் கருள்பு ரியவும்**
**(அகத்,சத.பா.7)**

என்ற பாடலில், இறைவனைப் பெண்ணாகப் பாவித்து அவ்விறைவனை ஆத்தாள், வாலை, ஆனந்தி, அம்பிகை, மனோன்மணி, பரையாள், பார்த்தாள், காத்தாள், சிறையாள், சேர்த்தாள், கருணைபூத்தாள், சிறியாள், பெரியாள் என அழைத்து அவளை அணைந்திட, அர்ச்சிக்க, பணிந்திட, வசம்பண்ண, சென்றாட, அறிய அருள் புரியுமாறு இறைவனிடமே வேண்டுகிறார். இவருடைய பாடல்கள் பெருமளவு இவ்வமைப்பு களிலேயே அமைந்துள்ளன.

சூ.ஃ.பித்துவம் என்பது இஸ்லாமிய மெய்ஞ்ஞானம். இவ்வுலகில் உள்ள எல்லாப் பொருட்களிலும் அல்லாஹ் ஒருவனே இருக்கிறான் என்பது சூ.ஃ.பித்துவக் கொள்கை. குணங்குடி மஸ்தான் சாகிபின் முகியித்தீன் சதகமும், அகத்தீசன் சதகமும் இக் கொள்கையை வலியுறுத்துகின்றன. முகியித்தீன் ஆண்டவர் அப்துல் காதர் ஜீலானி (ரஹ்) அவர்களை ஞானகுருவாகக் கொண்டுள்ள குணங்குடி மஸ்தான் சாகிபின் நெறி இவர்களின் வழியாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டு, இவர்கள் இருவரின் வாயிலாக இறைவனைக் காணும் சூ.ஃ.பி ஞானநெறி. இந்நெறி இஸ்லாம் கூறும் ஓரிறைக் கொள்கையின் உட்பொருளை ஞான அனுபவ நிலையில் உணர்த்துவதாகவே அமைந்துள்ளது.

# புறநானூற்றும் தொழில்களும்

**முனைவர் ப.பூஞ்சோலை**
உதவிப்பேராசிரியர்
கச்சியப்ப முனிவர் தமிழியல் கல்லூரி, மயாள்புரம்,
சிவந்திலிங்கபுரம் முசிறி,
திருச்சிராப்பள்ளி-மாவட்டம்.

"பண்டைத் தமிழரின் வரலாற்றுக்களஞ்சியமாக, பழந்தமிழ் வேந்தர்கள் , குறுநில மன்னர்களின் வரலாற்றை அறிவிக்கும் ஆவணமாக விளங்குவது புறநானூறாகும்" [1] புறநானூற்றில் பண்டைத் தமிழரின் பழக்க வழக்கங்கள், தெய்வ வழிபாட்டு முறை, மன்னர்களின் கொடைத்திறன், அவர்தம் போர்த்திறன், பண்டைத் தமிழ்ப் புலவர்களின் மாண்பு ஆகியவை இடம் பெற்றிருக்கும் , அதே நேரத்தில் பண்டைத் தமிழரின் தொழில் திறமும், வளமும் புலவர் பெருமக்களால் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன. புறநானூற்றில் மக்களின் வாழ்க்கை முறைக்கு அடித்தளமாக விளங்கும் பொருளியல் வளம் பெருகப் பலவிதத் தொழில்களைப் பண்டை மக்கள் செய்துள்ளனர். அவற்றைப் புறநானூற்றுப் புலவர்கள் தங்கட்குக் கிடைத்த வாய்ப்புகளில் எல்லாம் சுட்டிச் செல்கின்றனர். புறநானூற்றில் இடம் பெற்ற தொழில் முறைகளைச் சுட்டிக் காட்டுவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## உழவுத் தொழில்

தமிழகத்தின் நிலப்பரப்பை ஐந்து திணைகளாகப் பண்டைத் தமிழர் பிரித்தனர். இயற்கை வளத்தை மலை வளமாகவும், கானகத்து வளமாகவும், வயல் வளமாகவும், கடல் வளமாகவும் கண்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று அவற்றிற்குப் பெயரும் சூட்டினர். பெருமணல் உலகமாகிய பாலை நிலம் என்று ஒரு அமைப்பு தமிழகத்தில் இல்லாத காரணத்தால் "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிவம் கொள்ளும் "[2] என்ற நிலையில் ஐவகை நில அமைப்பைக் கொண்டனர். இந்த ஐவகை நில அமைப்பில்தான் பண்டைத் தமிழர்

வாழ்வியல் அமைந்தது. இயற்கைச் சூழலில் பெரிதும் போற்றப் பட்ட தொழில் உழவுத் தொழிலாகும்.

[1] . தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, ப. 141
[2] . சிலப்பதிகாரம்,

திருவள்ளுவரும் பொருட்பாலில் நாட்டு வளத்தைக் கூறும் பொழுது, உழவுக்கு முக்கியத்துவம் கொடுத்துததனி ஒரு அதிகாரத்தை அமைத்துள்ளார்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி "என்றும் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" [3] என்று உழவுத் தொழிலை முதன்மைப் படுத்துவார். உழவுத் தொழிலின் சிறப்பை வள்ளுவர் வழியில் தமிழிலக்கியங்களும் மேன்மைப் படுத்துகின்றன. உழவுத் தொழில் பற்றிய செய்திகள் புறநானூற்றில் பல பாடல்களில் காணக் கிடைக்கின்றன.

*"வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவற்*

*கார்ப்பெயற் கலித்த பெரும்பாட்டு ஈரத்துப்*

*பூமி மயங்கப் பலவுழுது வித்திப்*

*பல்லி யாடிய பல்கிளைச் செவ்விக்*

*களைகால் கழாலின்"*

*(புறம், பா. 120)*

என்ற கபிலர் பாட்டு பாரியின் பறம்பு நாட்டு வளத்தைக் கூறும் பொழுது உழவுத் தொழிலைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. வெம்மை முதிர்ந்த வேங்கை மரத்தினுடைய மேட்டு நிலத்துக் கார் காலத்து மழையால் மிகுந்த பெரிய , செவ்வியை உடைய ஈரத்தின் கண் புழுதி கலக்கப் பல சால்பட உழுது , விதைத்து, விளைந்த பயிரில் களையை எடுப்பார்கள் என்ற செய்தியை இப்பாட்டின் பகுதி தருகிறது. உழவுத் தொழிலின் முதல் நிலையை இப்பகுதி குறிப்பிடுகிறது. உழவு ஒருமுறை அல்லாது பல சால்பட உழுவதால் எரு வேண்டாத நிலையில் நிலம் பயன் தரும் என்பதை இப்பகுதி குறிப்பிடுகிறது. இதனையே திருவள்ளுவரும்,

*"தொடிப்புழுதி க.்.சா உணக்கின்*

*பிடித்தெருவும்*

*வேண்டாது சாலப் படும்.* [4]

என்று குறிப்பிடுவார். எனவே வள்ளுவத்தின்வழி புறநானூறு பலமுறை உழுது நிலம் பண்படுத்தப்பட வேண்டும் என்றும், அப்படிப் பண்படுத்தினால் உரமாகிய எரு இட வேண்டிய தேவை இல்லை என்றும் குறிப்பிட்டு, உழவுத் தொழிலுக்குரிய பயிற்சியை வெளிப்படுத்துகிறது.

சோழன் குளமுற்றுத் துஞ்சிய கிள்ளிவளவனிடம் வெள்ளைக்குடி நாகனார் உழவின் சிறப்பை எடுத்துக் கூறும் பகுதியும் நினைவு கூரத் தக்கதாகும்.

*ஞாலம்*

*ஆதுநன்கு அறிந்தனை ஆயின் நீயும்*

*நொதுமலா ளாளர் பொதுமொழி*

*கொள்ளாது*

*பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிப்*

*குடிபுறந் தருகுவை ஆயின் நின்*

*அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே"*

*(புறம் , பா. 35)*

என்ற பகுதியில் உழவுத் தொழில் மூலம் தான் குடிமக்கள் வாழ முடியும் என்பது வலியுறுத்தப் பெறுகிறது. அதாவது அகன்ற உலகவாழ்வை நன்கு அறிந்தவர் ஆனால் மற்றவர் மொழியைக் கேட்காது, ஏரைப் பாதுகாப்பவருடைய குடியைப் பாதுகாத்து அதாவது உழவரைப் பாதுகாத்து, அககாவலால் மற்ற குடிகளையும் பாதுகாத்தால் பகைவர்கள் அரசனின் திருவடியைப் போற்றுவர் என்று கூறப்பெற்று இப்பகுதியில் ஏர்ப்பின்னது உலகம் என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகிறது. இவ்வாறு உழவுத் தொழிலைப் பற்றிய செய்திகள் பலவாறாகப் பல பாடல்களில் கூறப்பெற்றுள்ளது. கட்டுரையின் விரிவு அஞ்சி சில எடுத்துக் காட்டுகளே இடம் பெறுகின்றன.

## ஆ காத்து ஓம்பல்

உழவுத் தொழிலுக்குப் பண்டைக் காலத்தில் எருதுகளை அதாவது மாடுகளைப் பயன்படுத்தி வந்தனர். எனவே நிலத்தைப் பாதுகாப்பது போல ஆநிரைகளைப் பாதுகாத்தல் தொழில் முறையாகக் கொள்ளப் பட்டது. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் பண்டைத்

[3]. திருக்குறள், 1032, 1033
[4]. திருக்குறள், 1037

தமிழரின் போர்முறை கூட ஆநிரைகளைக் கவர்தலும், அவற்றை மீட்டலும் ஆகிய வெட்சி, கரந்தைப் போர்களாக அமைந்திருந்தன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். புறநானூற்றில் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய பாடல் மிகச் சிறப்புடையதாகும். போரினைத் தொடங்குகின்ற பொழுது பாதுகாவலாகிய இடத்திற்குச் செல்ல வேண்டிய பொருள்களைப் பட்டியல் இடும் பொழுது முதற் பொருளாக ஆநிரை இடம் பெறுகிறது.

*"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்*

*பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்*

*தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்*

*பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்*

*எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென"*

*(புறம், பா. 9)*

இப்பட்டியலில் ஆவினைக் காத்து ஓம்புகின்ற தொழிலின் சிறப்புக் கருதி காக்க வேண்டிய பொருளில் முதற் பொருளாக ஆவாகிய ஆநிரைகள் குறிக்கப் பெற்றுள்ளது நினைவு கூரத் தக்கதாகும். இதனையே பிறிதோரிடத்தில் ஆவினைக் காத்து ஓம்புகின்ற ஆயர்களை,

*"அறவை நெஞ்சத்து ஆயர் வளரும்*

*மறவை நெஞ்சத்து ஆய் இலாளர்*

*அரும்பலர் செருந்தி நெடுங்கான் மலர்கமழ்*

*விழவணி வியன்களம் அன்ன"*

*(புறம் - பா. 390)*

என்ற பகுதியில் ஆநிரை காத்து ஓம்பும் ஆயர்களை அறம் பொலியும் நெஞ்சினை உடைய ஆயர்கள் என்று குறிப்பிடுவது புறநானூற்றின் சிறப்பாகும்.

*"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்*

*கோவலர் வாழ்க்கை கொடும்பாடு இல்லை"*[5]

என்று ஆநிரை காக்கும் தொழிலன் சிறப்பு பிற இலக்கியத்திலும் இடம் பெற்றிருப்பது அத் தொழிலின் பெருமையைக் கூறுவதாகும். ஆவினைக் காக்கும் தொழிலினைச் செய்பவர்களைக் கோவலர் என்றும் ஆடுகளை மேய்ப்பவர்களை இடையர் என்றும் குறிப்பிடுவதும் உண்டு. இடையரின் செய்திகளையும் . அவர்தம் தொழில் தன்மைகளையும் புறநானூற்றில் காண முடிகிறது. இதனை

**" மாசுஉண் உடுக்கை மடிவாய் இடையன்**

**சிறுதலை ஆயமொடு குறுகல் செல்லா"**

**( புறம் - பா. 54)**

இப்பகுதியில் பசிய இலையால் தொடுக்கப்பட்ட தழைக் கண்ணியையும், மாசுண்ட உடையையும், மடித்த வாயையும் உடைய இடையன், சிறிய தலையை உடைய ஆடுகளை மேய்த்துச் செல்லுகின்ற இடம் குறிக்கப் பெற்றுள்ளது. மேலும்,

*"புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்*

*கல்லா இடையன் போல"*

*(புறம், பா. 339)*

என்ற பகுதியில் ஆடு மேய்க்கும் தொழிலை உடைய இடையர்கள் மாலை நேரத்தில் சிறிய தீயினை எழுப்புவர் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. எனவே ஆநிரைகளையும், ஆடுகளையும் மேய்க்கக் கூடிய தொழில் புறநானூற்றில் குறிக்கப் பெற்று, எளிய மக்களின் தொழில் பேசப் பெறுகிறது.

**கொல்லர் தம் தொழில்**

உழுதலும் ஆகாத்தலும் ஆகிய இயல்புத் தொழிலோடு பண்டைத் தமிழரிடம் மிகுந்திருந்த போர்த் தொழிலுக்கு உரிய வேல் வடிக்கும் தொழில் புறநானூற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது.

*"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*

---

[5] . சிலப்பதிகாரம், காதை 15, வரி 120 -121

*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*

*வேல் வடித்துக் கொடுத்தல்*

*கொல்லர்க்குக் கடனே"*

*(புறம்,பா.312)*

என்ற இப்பகுதியில் வேல் வடித்துக் கொடுக்கின்ற கொல்லர் தொழில் குறிக்கப் படுகிறது. படைக் கலத்தைத் திருத்தமாகச் செய்யக் கூடிய கொல்லர் தொழில் குறிக்கப் படுவது மேலும் பல பாடல்களில் காணப்படுகிறது.

"*கருங்கைக் கொல்லன் அரம்செய் அவ்வாய்*

*நெடுங்கை நவியம் பாய்தலின் நிலை*

*அழிந்து*

*வீகமழ் நெடுஞ்சிலை புலம்ப"*

*( புறம், பா.36)*

என்ற இப்பகுதியில் வேல் வடித்துக் கொடுத்தல் மட்டும் கொல்லர் தொழில் அல்ல, அவர்கள் மரம் வெட்டும் கோடரியும் செய்து கொடுப்பார்கள் என்பதும் உணர்த்தப் பெறுகிறது. அதாவது வலிய கையை உடைய கொல்லன் அரத்தால் கூர்மை செய்யப்பட்ட அழகிய வாயினை உடைத்தாகிய நெடிய கையை உடைய கோடாரி வெட்டுதலால் பூமணம் கமழும் மரத்தின் கிளைகள் புலம்பின என்ற செய்தி இப்பகுதியில் அமைந்துள்ளது. கொல்லன் உலைக் களத்தில் தொழிலைச் செய்வான் என்பதையும் புறநானூறு குறிப்பிடுகிறது.

*"இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்*

*விசைத்து எறி கூடமொடு ஒரூஉம்*

*உலைக்கல் என்ன வல்லா ளன்னே"*

*(புறம், பா. 170)*

இப்பகுதியின் பொருள் - இரும்பைப் பயன் படுத்துகின்ற வலிய கையை உடைய கொல்லன், விசைத்து அடிக்கப் பட்ட கூடத்தோடு ஏற்று மாறுபடும் உலையிடத்து உள்ள கல் போலும் பிட்டன் கொற்றன் வலிய ஆண்மை உடையவன் ஆவான் என்ற குறிப்பிடுகிறது. இப்பகுதியில் கொல்லர்கள் இரும்புத் தொழில் செய்வர் என்பது பெறப் படுவதோடு, உலைக் களத்தில் தொழில் புரிவோர் என்பதும் , இரும்பைக் காய்ச்சிச் செம்மைப் படுத்துவதற்கு உலைக்கல் இருந்தமையும் புலனாகின்றது. கொல்லரைப் பற்றிய செய்திகளைத் தருகின்ற பிற பாடல்களும் புறநானூற்றில் உள்ளன. இரும்பு அடிக்கும் கொல்லரைப் போன்று பொன் செய் கொல்லரும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளனர்.

*"ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த*

*பொலஞ்சை பல்காசணிந்த அல்குல்"*

*(புறம், பா. 353)*

என்ற இப்பாடற் பகுதியில் குற்றமற்ற பொற்கொல்லன் பழுதறச் செய்த பொன்னால் ஆகிய பலமணி அணிந்த மேகலை என்று பொருள் அமைந்து , பொன்செய் கொல்லரின் தொழில் கூறப் பெற்றிருப்பது நினைவிற்கு உரியதாம்.

## வேட்டுவத் தொழில்

புறநானூறு காட்டும் தொழில் முறைமைகளில் வேடுவர் என்ற தொழிலாளரின் செயல் முறைகள் பல பாடல்களில் பதிவு செய்யப் பெற்றுள்ளன. முல்லை நிலத்துத் தலைமக்களாக வேடர்கள் காட்டப் பெறுகின்றனர். அவர்கள் வேட்டைத் தொழிலோடு தினைப் பயிர் விளைவிப்பவர்களாகவும், மரங்களை வெட்டி மக்கள் பயன்பாட்டிற்குத் தருபவர்களாகவும் புறநானூற்றில் படைக்கப் பெற்றுள்ளார்கள். கடையெழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரியின் சிறப்பும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. அவ்வள்ளலின் வேட்டுவத் தொழிலைப் பற்றிக் கீழ்வரும் பாடல் சிறப்புடன் குறிப்பிடுகிறது.

*"வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி*

*பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்*

*புழல்தலைப் புகர்க்கலை உருட்டி*

*உரல்தலைக்*

*கேழற் பன்றி வீழ அயலது*

*ஆழற் புற்றத்து உடும்பில் செற்றும்*

*வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்"*

*(புறம்,பா. 152)*

இப்பகுதியில் வல்வில் ஓரியின் வில்தொழிலின் பெருமை பேசப் பெற்றுள்ளது. வேடர்களுக்கு உரிய விற்பயிற்சியை ஒரு அரசனே பெற்றிருந்தான் என்று எண்ணும் பொழுது வேட்டுவத் தொழிலின் பெருமை தெரிய வருகிறது. அவன் விடுத்த அம்பு முதலில் யானையைக் கொன்று வீழ்த்தியது. அதன்பின் புலியைக் கொன்றது. பிறகு புள்ளிமானை உருட்டியது. அதன்பின் பன்றியை விழச் செய்தது. இறுதியாப் புற்றின்கண் கிடந்த உடும்பில் சென்று தைத்தது. இப்படிப் பட்ட வலிய வில்லால் உண்டாகிய வேட்டைத் தொழிலை வெற்றியோடு உடையவன் என்று இப் பாடற் பகுதி குறிப்பிடுகிறது. எனவே பண்டைத் தமிழரில் வேடுவர்கள் தனிஒரு இடம் பெற்றிருந்தமையை உணர முடிகின்றது.

அறம் சொல்லுகின்ற பொழுது கூட அரசனுக்கு ஒப்ப வேடுவர்கள் எண்ணப் பெற்றிருந்தமையைப் புறநானூற்றுக் கீழ்வரும் பகுதி மெய்ப்பித்துக் காட்டுகிறது.

*"தென்கடல் வளாகம் பொதுமை இன்றி*

*வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்*

*நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்*

*கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்*

*உண்பது நாழி உடுப்பவை இரண்டே"*

*(புறம், பா. 189)*

இப்பகுதியில் நக்கீரனார் செல்வத்தின் பயனைச் சொல்லுகின்ற பகுதியில் கடல்நீரால் சூழப்பட்ட உலகம் முழுவதையும் தனி ஒருவனாக இருந்து ஆளுகின்ற அரசர்க்கும், இடையாமத்தும் , நண்பகலும், தூங்காதவனாய் விரைந்து ஓடுகின்ற மிருகங்களைக் கொல்லுவதற்குக் கருதுகின்ற, கல்வியில்லாத வேடர்க்கும் உண்ணப்படும் பொருள் நாழியாகும், உடுக்கப்படுவது இரண்டே என்று கூறுகின்றார். இதில் அரசரையும் வேட்டுவரையும் ஒத்தநிலையில் காணுகின்ற புலவரின் பண்பு போற்றத் தக்கதாகும். மேலும் இப்பகுதியில் வேட்டைத் தொழிலைச் செய்கின்றவர்கள் நடு இரவிலும் , நடுப்பகலிலும் துயிலாது விலங்குகளை வேட்டையாடுவர் என்று குறிக்கப் பெறுவதால் அந்த இரு பொழுதுகளில் மிருகங்கள் சுயேச்சையாகத் திரியும் என்ற வழக்கமும் பெறப்படுகிறது.

*"கான் உறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்*

*மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்*

*தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய*

*ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்*

*குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்*

*முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்"*

*(புறம், பா. 33)*

என்ற இப்பகுதியில் வேடர்களின் வாழ்க்கை குறிக்கப் பெற்றுள்ளது. அதாவது வேடர்கள் காட்டில் வாழ்வார்கள். தங்களுக்குத் துணையாக நாயைக் கொண்டிருப்பார்கள். அவர்கள் விரும்பி வேட்டையாடுகின்ற மிருகம் மான் ஆகும். அதனைப் பிறரிடத்தில் அதாவது உழவுத் தொழில் செய்வோரிடத்தில் தொழில் நிலையில் விற்பனை செய்துள்ளனர் என்பதும், பெறப்படுகிறது. அந்த மான் தசைகளையும் அவர்கள் பனைஓலையால் செய்யப்பட்ட கடகப் பெட்டியில் வைத்து, விற்பனை செய்தனர் என்பதும் பாடலால் புலப்படுகிறது. வேட்டுவத் தொழிலில் வெற்றி பெறுவதும் உண்டு. தோல்வி அடைவதும் உண்டு. அவ்வாறு வெற்றி தோல்வி அடைவதற்கு வினைப்பயன் காரணம் என்று கூறும் அளவிற்கு வேட்டுவத் தொழில் புறநானூற்றில் சிறப்பிடம் பெறுகிறது.

*"யானை வேட்டுவன் யானையும் பெறுமே*

*குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே*

*அதனால் உயர்ந்த வேட்டத்து*

*உயர்ந்திசினோர்க்குச்*

*செய்வினை மருங்கின் எய்தல் உண்டு"*

*(புறம், பா. 214)*

இப்பகுதியில் யானை வேட்டைக்குச் செல்பவன் யானையை எளிதாகப் பெறுவான். அதே

நேரத்தில் காடை போன்ற சிறு பறவைகளை வேட்டையாடச் செல்கின்றவர்கள் அப்பறவை கூடக் கிடைக்காது வீணே திரும்புதலும் உண்டு. அதற்குக் காரணம் அவர்கள் செய்த வினைதான் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. இப்பகுதியில் யானை போன்ற பெரிய மிருகங்களையும், காடை

போன்ற சிறிய பறவைகளையும் வேட்டையாடுவது வேடுவர்களின் மரபாகத் தெரிய வருகிறது. இவ்வேட்டுவத் தொழிலோடு விறகு வெட்டும் தொழிலையும் புறநானூறு குறிப்பிடுகிறது.

*"விறகுஒய் மாக்கள் பொன்பெற்றன்னதோர்*

*தலைப்பாடு அன்றுஅவன் ஈகை*

*நினைக்க வேண்டா வாழ்க, அவன் தாளே"*

*(புறம், பா. 70)*

என்ற பகுதியில் விறகு வெட்டுகின்றவர்கள் காட்டில் விறகை வெட்டி , ஊர்ப்பகுதியில் கொண்டு போய் விற்கின்ற தொழிலைச் செய்கின்றவர் ஆவர். அதனால் வாழ்வதற்கு உரிய பொருளைப் பெறுவர். அவ்வாறு இல்லாது காட்டிலேயே விறகு விற்கப்பட்டுப் பொருள் கிடைத்தால் மகிழ்ச்சி அடைவார்கள் என்று விறகு வெட்டுபவர் தொழில் உவமையாக இடம் பெற்றுள்ளது. விறகு வெட்டி யானையின் மூலம் ஊருக்குள்ளே கொண்டு வந்து விற்பார்கள் என்ற செய்தியும் புறநானூற்றில் காணப்படுகிறது.

*"கான யானை தந்த விறகின்*

*கடுந்தெறல் செந்தீ வேட்டுப்*

*புறம்தாழ் புரிசடை புலர்த்து வோனே"*

*(புறம், பா. 251)*

என்ற இப்பகுதியில் காட்டில் வெட்டப் பட்ட விறகு யானையில் ஏற்றி, ஊருக்குக் கொண்டு வரப் பட்டு மக்களிடம் விற்பனை செய்யப் பெற்றிருக்கிறது. அது நன்கு எறிகின்ற விறகாகவும் இருந்திருக்கிறது என்பதும் இப்பாடற் பகுதியால் தெரிய வருகிறது.

## மரக்கலத் தொழில்:

புறநானூறு குறிப்பிடும் தொழில் நிலைகளில் மற்றும் ஒரு தொழில் கடலில் மரக் கலத்தைச் செலுத்தி, பிற நாடுகளில் சென்று பொருளைக் கொண்டு வந்து, தன் நாட்டில் விற்கின்ற தொழில் முனைவோர் இடம் பெற்றுள்ளனர்.

*"மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது*

*புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்*

*இடைப்பலப் பெருவழிச் சொரியும்*

*கடல்பல் தாரத்த நாடுகிழ வோயோ"*

*(புறம், பா. 30)*

என்ற இப்பகுதியில் மரக்கலத்தின் நடுவே அமைக்கப் பட்ட கூம்பில் விரிக்கப் பெற்ற பாயை மாற்றாமல், மரக்கலத்தில் உள்ள சுமையையும் குறைக்காமல், ஆற்றின் முகத்தே செலுத்துகின்ற பெரிய மரக்கலத்தை உடையவர் பரதவர். அவர்கள் மரக்கலத்தைக் கொண்டு செல்லும் பொழுது பல பொருள்கள் கீழே சொரியும். அப்பண்டங்கள் கடற்கரையில் ஒதுங்கும். அவை பெருஞ் செல்வமாக விளங்கும் என்று இப்பகுதியில் கூறப் பெற்றுள்ளது. மேலும் மரக்கலம் ஓட்டும் பரதவர் நுழையர் என்றும் அழைக்கப் பெற்றனர். அவர்கள் கடலில் செல்லாத பொழுது மதுவுண்டு மகிழ்ந்து கூத்தாடுவர் என்ற செய்தியும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

*"செஞ்ஞாயிற்று வெயில் முனையின்*

*தெண்கடல்திரை மிசைப் பாயுந்து*

*திண்திமில் வன்பரதவர்*

*வெப்புடைய மட்டுண்டு*

*தண்குரவை சீர்தூங்கும்"*

*(புறம், பா. 24)*

என்ற பகுதியால் மரக்கலம் ஓட்டும் தொழில் கொண்டோர் ஓய்வுக் காலத்தில் கள்ளுண்டு மகிழ்வர் என்ற செய்தி பெறப்படுகிறது. மற்றொரு பக்கம் மரக்கலத் தொழில் செய்பவர் மரக்கலம் கவிழ்ந்து துன்பப் படுவதும் உண்டு என்ற செய்தியும் புறநானூற்றில் கிடைக்கின்றது.

*"மாறி இரவின் மரங்கவிழ் பொழுதின்*

*ஆரஞர் உற்ற நெஞ்சமொடு ஓராங்குக்*

*கண்இல் ஊமன் கடற்பட் டாங்கு"*

*(புறம், பா. 236)*

என்ற இப்பகுதியில் மழைக்காலத்து இரவில் மரக்கலம் கவிழ்வதும் உண்டு. அதனால் பெரும் துன்பம் ஏற்படும் என்பதும் இப்பகுதியால் பெறப்படுகிறது. மரக்கலம் வைத்திருப்போர் பொருள்களை ஏற்றித் தொழில் செய்வதோடு, போர் வீரர்களை ஏற்றிக் கொண்டு போர்த்தொழில் செய்வதும் உண்டு என்ற செய்தியும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

*"வளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி*

*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக"*

*(புறம், பா. 66)*

என்ற பகுதியால் காற்றின் உதவியால் மரக்கலம் செலுத்தப்படும் என்பதும், காற்றில்லாத பொழுது வருணனை வேண்டி அருள் பெறுவர் என்பதும் தெரிய வருகிறது. "களிறே முந்நீர் வழங்கும் நாவாய் போலும்" (புறம், பா.13) என்ற புறநானூற்று வரி பண்டைக் காலத்து மரக்கலங்கள் யானை போன்ற பெருந் தோற்றத்தைப் பெற்றிருந்தன எனத் தெரிய வருகிறது. பிறிதோரிடத்தில் ,

*"நளிகடல் இருங் குட்டத்து*

*வளிபுடைத்த கலம்போலக்*

*களிறு சென்று"* *(புறம், பா. 26)*

இப்பகுதியில் நாவாய் எனப்பட்ட மரக்கலம் பெரிய கடலின்கண் ஆழத்தில் காற்றால் செலுத்தப் படும் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

**கைத்தொழில்கள்:**

புறநானூற்றில் குலத்தொழில் கொண்ட தொழிலாளர்களால் செய்யப் பெறும் பெருந் தொழில்களைப் போலச் சிறு கைத்தொழில்கள் சிலவும் பதிவாகி உள்ளன. மண் பாண்டம் தயாரிக்கின்ற தொழில் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

*"தொன்னிலக் கிழமை சுட்டின் நன்மதி*

*வேட்கோச் சிறாஅர் தேர்க்கால் வைத்த*

*பசுமண் குருஉத்திரள் போலஅவன்*

*கொண்ட குடுமித்து இத்தண்பணை நாடே":*

*(புறம், பா. 32)*

என்ற இப்பகுதியில் தேர்ச் சக்கரம் போன்ற திகிரியில் பச்சைமண்ணை வைத்து மண்பானை செய்யப் படும் என்ற செய்தி இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். மண்பானை செய்யும் தொழிலாளி சிறப்பிக்கப் படுகின்ற காட்சியும் புறநானூற்றில் உண்டு.

*"கலம்செய் கோவே கலம்செய் கோவே*

------------------------------ --------------------------

---------------------------------- -------------------------

*வியன்மலர் அகன்பொழில் ஈமத்தாழி*

*அகலிது ஆக வனைமோ"*

*(புறம், பா. 256)*

இப்பகுதியில் குயவராகிய மண்பாண்டத் தொழிலைச் செய்கின்றவர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் முதுமக்கள் தாழியையும் செய்யக் கூடியவர்கள் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. பாடியவர் பெயர் தெரியாத இப்பாடலில் இறந்துவிட்ட கணவனோடு தானும் புதைக்கப் படுவதற்கு முதுமக்கள் தாழியை ஒருபெண் குயவனிடம் வேண்டுவது படிப்போர் உள்ளத்தை இரங்கச் செய்வதாகும்.

மற்றொரு கைத்தொழிலான ஆடை தயாரித்தல் தொழிலும் இடம் பெற்றுள்ளது.

*"அளிய தாமே சிறுவெள்ளாம்பல்*

*இளையம் ஆகத் தழையா யினவே""*

*(புறம், பா. 248)*

இப்பகுதியில் ஆம்பல் இலையை ஆடையாகத் தைக்கின்ற தொழில் கூறப்பட்டுள்ளது.

*"பாம்புஉரி அன்ன வடிவின காம்பின்*

*கழைபடு சொலியின் இழைஅணி வாரா*

*ஒண்பூங் கலிங்கம் உடீஇ நுண்பூண்"*

*(புறம், பா. 383)*

என்ற இப்பகுதியில் ஒரு பெண்ணினுடைய ஆடையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, பாம்புத் தோல் போன்ற வடிவை உடையதாய், மூங்கிலின் உட்புறத்தில் உள்ள தோல் போன்று நெய்யப் பட்ட இழைகளை உடையதாய், வடிவமைக்கப் பட்ட ஆடையை உடுத்தினாள் என்ற செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. எனவே புறநானூற்றுக் காலத்தில் இலைகளைக் கொண்டு தைத்த பழம் ஆடையும் மென்மையான நூல் இழைகளைக் கொண்டு தைக்கப்பட்ட ஆடையும் கூறப் பெற்றிருப்பதால் ஆடை தயாரிக்கும் தொழிலையும் அறிய முடிகிறது.

புறநானூற்றுக் காலத்தில் சுவைபட உணவு படைக்கும் தொழிலும் சிறப்பாக இருந்தது என்பதைச் சில பாடல்களின் மூலம் அறிய முடிகிறது.

*"குய்கொள் கொழுந்துவை நெய்யுடை அடிசில்*

*மதிசேர் நாண்மீன் போல நவின்ற*

*சிறுபொன் நன்கலஞ் சுற்ற இரீஇ"*

*(புறம், பா. 160)*

இப்பகுதியில் தாளிப்புச் சேர்க்கப் பட்ட துவையலும், நெய்யுடன் கூடிய அடிசிலும் இடம் பெற்றுள்ளது. மற்றொரு பாடலில், "கமழ் குய் அடிசில் " ( புறம் , பா. 10) என்று குறிக்கப் பெற்று மணம் கமழும் தாளிப்புடைய உணவு இடம் பெற்றுள்ளது.

*"அமிழ்தென மரபின் ஊன்துவை அடிசில்*

*வெள்ளி வெண்கலத்து ஊட்டல் அன்றி"*

*(புறம்,பா.390)*

என்ற இப்பகுதியின் மூலம் அமிழ்தத்தை ஒத்துச் சுவையுடன் கூடிய துவையல் உருவாக்கப் பெற்றிருக்கிறது என்ற செய்தியும் கிடைக்கின்றது. இவ்வாறு அடிசிலைப் பற்றிய செய்திகள் பல பாடல்களில் இடம் பெற்றிருக்கின்றன. அதே நேரத்தில் அடுதல் தொழிலில் ஏற்பட்ட வறுமைக் காட்சியும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. பெருஞ்சித்திரனார் தன் குடும்பத்தின் அவலத்தை எடுத்துக் கூறும் பாடலில்,

*"குப்பைக் கீரைக் கொய்கண் அகைத்த*

*முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு*

*உப்பின்று*

*நீர்உலை யாக ஏற்றி மோரின்று*

*அவிழ்ப்பதம் மறந்து" (புறம், பா. 159)*

என்ற இப்பகுதியில் குப்பைக் கீரைக்கு உப்பைச் சேர்ப்பதற்குக் கூடப் புலவர் வீட்டில் உப்பு இல்லை. மோரில்லாக் கூழ் பாழ் என்பதற்கு ஏற்ப மோரில்லாத உணவும் சமைக்கப் பெற்ற வறுமைச் சூழலும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு கைத்தொழில்கள் சிலவும் புறநானூற்றில் இடம் பெற்று அக்காலத் தொழில் வளத்தைப் புலப்படுத்துகின்றன.

**பிணம் சுடுதல்**

வாழ்வின் தொடக்கம் முதல் வாழ்வின் இறுதிவரை மனித வாழ்க்கை உருண்டு ஓடிடப் பல தொழில் வளம் தேவை. உயிர வாழ இன்றியமையாத உழவுத் தொழிலைப் போலப் புறநானூற்றில் மனித வாழ்வின் இறுதியான உடலைச் சுடுகின்ற பிணம் சுடுதல் தொழிலும் பதிவாகி உள்ளது.

*"எரிபுனக் குறவன் குறையல் அன்ன*

*கரிபுற விறகின் ஈம ஒள்ளலல்*

*குறுகினும் குறுகுக" (புறம், பா. 231)*

என்றும்,

*"பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்*

*உமக்கு அரிது ஆகுக தில்ல எமக்கு"*

*(புறம், பா. 246)*

என்றும்,

ஈமத் தீயானது விறகுகளால் அடுக்கப் பெற்று உண்டாக்கப் பெறுவதாகப் பதிவு செய்யப் பெற்றிருப்பதால் விறகு அடுக்கும் தொழிலைச் செய்தவர் உண்டு என்பதும் பெறப்படுகிறது.

## தொகுப்புரை

தமிழக வரலாற்றின் கலங்கரை விளக்கமாக விளங்கும் புறநானூற்றில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வகையோர்க்கு உரிய தொழில்கள் இல்லாது , உழவுத் தொழில் முதலாக ஈமத்தீ மூட்டல் ஈறாகப் பலவிதத் தொழில் முறைகள் பதிவாகியுள்ளன. அவற்றை முன்னோட்டமாக ஒருசில எடுத்துக் காட்டுகளால் காட்டப் பெற்ற இக்கட்டுரை மேலும் ஆய்வதற்கு வழிவகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

# மக்கள் நலவாழ்வும் சுற்றுப்புறத் தூய்மையும்

**முனைவர் இரா.மலர்விழி**

உதவிப்பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

**உ**லகம் தோன்றி உயிர்கள் வாழத் தொடங்கியபோது புவி மிகவும் தூய்மை பெற்றிருந்தது நிலம் தன் முழுப்பயனைத் தந்து செழித்து விளங்கியது. நீரும், காற்றும் மாசடையாமல் இருந்தன. குறைந்த மக்கள் தொகையுடன் இவ்வுலகம் அமைந்தமையால் மக்கள் உலகின் பயனைப் போதிய அளவுக்குத் துய்த்து மகிழ்ந்தனர். அன்று மாசுபடுத்தும் தொழிற்சாலைகளே இல்லாத நிலை காணப்பட்டது. முறை தவறாமல் பருவமழை பெய்தது. புவி தன் விளைச்சலைப் பெருமளவில் தந்து சிறப்படைந்தது. இதனால் மக்கள் மிக மகிழ்ச்சியுடன் அனைத்துத் தேவைகளும் நிரம்பப் பெற்றவர்களாக வாழ்ந்தனர். மக்கள்தொகை பெருகியமையால் சிற்றூர் மக்கள், மெல்ல நகரம் நோக்கிக் குடிபெயர்ந்தனர். நகர்ப்புறங்களில் தொழில் தேடத் தொடங்கினர். இதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. குடிநீருக்கே துன்புற்ற மக்கள் காலப்போக்கில் மாசு கலந்த நீரிலும் வாழ முற்பட்டனர். நீர்நிலைகள் அனைத்தும் கழிவுநீர்க் குட்டைகளாக மாறின. தொழிற்சாலைக்கழிவுநீர், வீட்டுக் கழிவுநீர், பொதுக்கழிப்பிட நீர் போன்றவை நீர்நிலைக்குச் செல்வதால் நீரில் மாசு ஏற்பட்டது. காலப்போக்கில் அங்கு வாழும் உயிரினங்களுக்கும் அழியும் நிலை உருவானது. சுற்றுப்புறம் தூய்மையாக இருந்தால்தான் மக்கள் நலமுடன் வாழமுடியும். எனவே மக்கள் நலவாழ்வு பற்றியும் சுற்றுப்புறத் தூய்மைப்பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

மனிதன் நலமாக வாழ உடல், உணவு, உடை, வீடு, நீர், காற்று ஆகியவற்றையும், மனத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். இதனை வள்ளுவர்,

“புறந்தூய்மை நீரான் அமைஉம் அகந்தூய்மை

வாய்மை யாற் காணப்படும்”
(குறள். 298)

என்று கூறுகிறார். உலக சுகாதார நிறுவனம் நலவாழ்வு என்பது நோய் நொடியில்லா வாழ்வு மட்டுமன்று உடல் நலம், மனநலம், சமுதாய நலம், பொருளாதார நலம் இவை அனைத்தும் நிறைந்தது என்று கூறுகிறது.

**உடல்நலம்**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. மக்கள் அனைவரும் நோயின்றி வாழவே விரும்புவர். மகிழ்வுடன் வாழவும், சிந்திக்கவும், செயல்படவும், இவ்வுலக நலன்களை நுகா்ந்திடவும், நீண்ட நாள் வாழவும், உடல் நலத்துடன் இருக்க வேண்டும் அதனால் உடலைப் பேணுதல் இன்றியமைமயாத ஒன்றாகும். இதனைத் திருமூலா்,

***"உடம்பை வளா்க்கும் உபாயம் அறிந்தே***

***உடம்பை வளா்த்தேன் உயிா் வளா்த்தேன்"***

என்று பாடியுள்ளாா்.

**மனநலம்**

உடல் நலமும் மனநலமும் மக்கள் வாழ்வின் இரு கண்கள். உடல், மனம் இரண்டும் ஒன்றையொன்று சாா்ந்திருக்கும். ஒன்றன் பாதிப்பு மற்றொன்றையும் பாதிக்கும். மன நலத்தின் மாட்சியை,

***"மனநலம் மன்னுயிா்க்கு ஆக்கம் இனநலம்***

***எல்லாப் புகழும் தரும்"***

***(குறள். 457)***

என்கிறது வள்ளுவம். எனவே மனம் தூய்மையாக இருக்க உண்மை பேச வேண்டும். மன நலம் என்பது உலகத்தோடு ஒட்ட ஒழுகி உற்றாா், உறவினா், நண்பா்களோடு இனிது பழகி எதையும் தாங்கும் இதயத்தோடு வாழ்வதாகும்.

**சமுதாய நலம்**

ஈசன் உயிா்கள் வாழ நல்ல காற்று, நல்ல உணவு, நல்ல இருப்பிடம் மூன்றையும் படைத்துள்ளான். ஆனால் மனிதா்களின் பேராசையின் விளைவால் தூயக்காற்று, குடிநீா், உணவு இவைகள் மாசுப்படுத்தப்படுகின்றன. இம்மாசுபாட்டைத் தடுத்தால் சுற்றுப்புறச் சூழலும், சமுதாயமும், சமுதாயத்தில் வாழும் மக்களும் நலம் பெறுவா்.

**தூயக்காற்று**

போக்குவரத்தச் சாதனங்கள் வெளியிடும் புகை, ஆலைகளிலிருந்து எழும் புகை, குவிந்துள்ள குப்பைக் கூளங்களிலிருந்து உண்டாகும் நச்சுக்காற்று இவைகள் தூய காற்றை மாசுபடுத்துகின்றன. இக்கேட்டினைத் தடுக்க அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவு உற்பத்திக்காகக் காடுகளை அழித்து விளைநிலமாக்குகிறாா்கள். காடுகள் அழியும்போது தாவரங்களின் எண்ணிக்கையும் குறைகின்றது. நச்சுக்காற்றை நல்ல காற்றாக மாற்றும் மரங்கள் அழிக்கப்படுகின்றன. இக்குறையை நீக்க வீட்டிற்கு ஒரு மரம் என்ற கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும். காட்டை அழிப்பதை நிறுத்த வேண்டும்.

**குடிநீா்**

பல்லாயிரக்கணக்கான கிராமப்புறங்களில் கழிப்பிட வசதியின்றி மக்கள் சாலையோரங்களை அசுத்தம் செய்கின்றனா். நீா்ப்பெருக்கு நிறைந்த ஆறு, வாய்க்கால் கரைகளையும் கழிப்பிடங்களாக்கிவிடுகின்றனா். இதனால் குடிநீா் மாசடைகிறது. இன்றைய மக்கள் பெறுகின்ற பல நோய்களுக்கு ஆற்றுநீா் மாசு அடிப்படையாக விளங்குகிறது. இக் கேட்டினைத் தடுக்க அரசு கழிப்பிடங்களைக் கட்டி தருவதற்கு மானிய உதவியும், தொழில் நுட்ப உதவியும் அளித்து வருகின்றது. கிராம மக்கள் இத்திட்டத்தைப் புரிந்து கொண்டு, உரிய அதிகாரிகளையும்,நிறுவனங்களையும் அணுகிப் பயன்பெற்றால் சுற்றுப்புறச்சூழலும் கெடாது, மக்கள் நலனும் மேம்படும்.

பண்டைய கால மக்கள் ஆறுகளைப் புனிதமானவையாகக் கருதி வணங்கி மகிழ்ந்து நாளைத் தொடங்கினா். அப்புனிதமானன ஆறு மாசு அடைவதன் காரணமாக இன்று மக்கள் பலநோயால் அல்லலுறுவதைக் காணமுடிகிறது. பண்டைத் தமிழ் மக்கள் நீா்நிலைகளில் எவரையும் நீராடவோ, மாசுபடுத்தவோ விடமாட்டாா்கள். ஆறுகளைக் காப்பதற்கென்றே காவலா்களைப் பணியமா்த்தியிருந்தனா். கட்டுக்காவலை மீறி மாசு செய்வோரைத் தண்டனை அளித்துத் திருத்துவா். இப்பணியை மேற்பாா்வை செய்யும் காவலா் பற்றிய செய்தி,

***"எறிதிரை திவலை தூஉம்***

***சிறுகோட்டுப் பெருங்குளம் காவலன்"***

***(அகம். 252)***

என்ற பாடலில் இடம்பெற்றிருக்கிறது. நதிநீா் மாசுபாட்டில் பழந்தமிழ்ப் புலவா்களுக்கு இருந்து சமூக அக்கறை இவ்வாிகளில் தெளிவாகிறது.

அனைத்து வகையான பொருள்களையும் கடலில் கொட்டுவது புனிதம் என்று மரபுவழியாகப் பலா் கருதுகின்றனா். சுற்றுச்சூழல் ஆா்வலா்கள் கடலில் கலக்கும் கழிவுகளைப் பட்டியலிட்டு மக்களிடையே விழிப்புணா்வு ஏற்படுத்த முனைந்துள்ளனா். கழிவுகளால் கடல் உயிா்கள் அழிவதைப் பல சான்றுகளுடன் சூழலியலாா் விவரித்து வருகின்றனா்.

தொழிற்சாலைகளின் பெருக்கத்தால் தூய்மையான கிராம வாழ்க்கையை விட்டு மக்கள் நகரங்களுக்குக் குடியேறுகின்றனா். பரவலாக வாழ்ந்த மக்கள் சமுதாயம் குறிப்பிட்ட சில நகரங்களில் வசிக்கத் தொடங்கும்போது, அவா்களுக்குத் தேவையான தூய நீா் கிடைப்பது அரிதாகிறது. கிடைக்கும் சிறிதளவு நீரும் சாக்கடை, ஆலைக்கழிவு நீா் ஆகியவைகள் கலக்கப்பட்டு தூய்மை குறைகிறது. எனவே தூய நீா் கிடைப்பதற்கு மழைநீரை வீணாக்காமல் மழை நீா் சேகரிப்புத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இயற்கையாகவே புவியிலுள்ள நீா், ஞாயிற்று வெப்பத்தினால் ஆவியாகி விண்ணில் மேகமாகத் தங்கிவிடுகிறது. மரங்களிலிருந்து வெளியாகும் காற்று மேகங்களில் பட்டவுடன், புவியில் மழை பெய்கிறது. இதனால் மழைநீரை மிகவும் தூய்மையான நீராக அறிவியலாா் குறிப்பா். “இயற்கையில் கிடைக்கும் பலவகை நீரில் மழை நீரே மிகவும் தூய்மையானது. ஆனாலும் மழைநீரிலும் சில மிதக்கும் மாசுகளும், ஆக்ஸிஜன், நைட்ரஜன் போன்ற வளிமங்களும், நைட்ரஸ் அமிலம், நைட்ரிக் அமிலம், அம்மோனியா, காா்பன்-டை-ஆக்சைடு போன்றவையும் கரைந்திருக்கலாம். இருப்பினும் சூரிய ஒளியால் சூடேறற்றப்பட்டு, ஆவியாகிப் பின்னா் குளிா்ச்சியடைந்து மழை பெய்வதால் மழைநீரை இயற்கையிலேயே காய்ச்சி வடித்தல் மூலம் கிடைக்கும் நீராகக் கருதலாம்” என அறிவியல் களஞ்சியம் தொகுதி ஐந்து பகா்கிறது (ப. 603).

வீட்டுக் கழிவுகளும், ஆலைக்கழிவுகளும் நீரில் கலவாது தடை செய்யப்பட வேண்டும். ஆலைகளை ஒரே இடத்தில் நிறுவாமல், பரவலாக அமைத்தால் மக்கள் கூட்டம் கிராமங்களை விட்டு வெளியேறாது. கிராம வளா்ச்சிப் பணிகளும் செவ்வனே நடைபெற வேண்டும்.

**உணவு**

சுத்தம் சோறு போடும், கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பது நம் நாட்டில் வழங்கும் பழமொழிகள் ஆகும். உண்ணும் உணவும், பருகும் நீரும் சுத்தமாய் இருத்தல் வேண்டும். நீரை நன்கு வடிகட்டி கொதிக்க வைத்துப் பின் குடித்தல் நல்லது. உணவைத் தயாரித்து உடனே உண்ணுதல் சிறந்தது. கண்ட நேரங்களில் கண்ட இடங்களில் கண்ட கண்ட தின்பண்டங்களை வாங்கி உண்பதும் தண்ணீரைக் காய்ச்சாது குடித்தலும், மிகவும் பழைய உணவை உண்ணுதலும் நோய்க்கும் வழி வகுக்கும், சுற்றுப்புறமும் கெடும். எனவே நாம் உண்ணும் உணவையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**பொருளாதார நலம்**

பொருளாதார நலம் என்பது ஒரு மனினதனின் அடிப்படைத் தேவைகள் நிறைவுற்றபின் நாட்டின் செல்வத்தைப் பெருக்கி அமைதியைப் பெறுதலாகும். இதனைச்,

***“செல்வம் என்பது சிந்தையின் நிறைவே”***

என்னும் குமரகுருபரா் வாக்கால் உணரலாம். தூய்மையை நாம் பின்பற்றினால் வீடு தூய்மையடையும்.

***“வீடு தூய்மையுற வீதி தூய்மையுறும்***

***வீதி தூய்மையுற ஊா் தூய்மையுறும்***

***ஊா் தூய்மையுற நாடு தூய்மையுறும்***

***நாடு தூய்மையுற நானிலம் நலமுறும்”***

எனவே சுற்றுப்புறத் தூய்மை பற்றிய விழிப்புணா்வை மக்களிடையே உண்டாக்குவதற்காக ஒவ்வோராண்டும் சூன் 5 ஆம் நாள் ‘உலகச் சுற்றுப்புற சூழல் நாள்’ மாவட்டத் தலைநகரங்களில் கொண்டாடப்படுகிறது.

***“உடம்பாா் அழியின் உயிரால் அழிவா்***

***திடம்பட மெய்ஞானமும் சேரவும் மாட்டாா்”***

என்கிறாா் திருமூலா். எனவே ஒவ்வொருவரும் உடல் நலத் தூய்மையையும் சுற்றுப்புறத் தூய்மையையும் பேணி உயா் நல வாழ்வைப் பெறுவோம்.